விலை – ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 208 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 07, திங்கட்கிழமை 22.06.2015




## ஐ.நா. அறிக்கை இன்னும் எழுதி முடியவில்லை

*மங்கள கூறுகின்றார்*

கொழும்பு, ஜூன் 22

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த ஐ.நா. விசாரணை அறிக்கை இன்னும் எழுதி முடிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அறிக்கை வெளியிடப்படும் வரை காத்திருக்காது உள்ளகப் பொறிமுறையை உருவாக்குவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் பக்.24

## சோமவன்ஸவின் புதிய கட்சி விவரம் 27 இல் வெளியாகும்

கொழும்பு, ஜூன் 22

தான் ஆரம்பிக்கவுள்ள புதிய கட்சி தொடர்பிலான அறிவித்தல் எதிர்வரும் 27ஆம் திகதி வெளியாகுமென ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் புதிய கட்சியின் ஆரம்பம் தொடர்பிலான விசேட மாநாடொன்று நடைபெறவுள்ளது. இதன்போது பெயர் மற்றும் ஏனைய விவரங்கள் என்னுடன் இணைந்து செயற்பட யார் இருக்கிறார்கள் என்பது தொடர்பில் பக்.24

## நிராகரிக்கப்பட்ட மஹிந்தவை பிரதமர் ஆக்குவதா?

*கேட்கிறார் மைத்திரி*

கொழும்பு, ஜூன் 22

மோசமான ஊழல் ஆட்சியை நடத்தியதால் மக்களால் நிராகரிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவை, எவ்வாறு எமது பிரதமர் வேட்பாளராக நிறுத்த முடியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார்,

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் மத்தியில் கருத்து வெளியிட்டுள்ள அவர், மஹிந்த ராஜபக்ஷவை கட்சியின் பக்.24



சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பயிற்சி நிகழ்வு

*விரிவான தகவல்கள் 4 ஆம் பக்கத்தில்...*

## உள்ளக விசாரணையில் சர்வதேச தலையீட்டுக்கு ஒருபோதும் இடமில்லை

### அடித்துக் கூறியது இலங்கை அரசு

கொழும்பு, ஜூன் 22

உள்ளக விசாரணைக்கான சட்ட நடைமுறைகள் வரையப்பட்டு வருகின்றன. இதில் சர்வதேச தலையீடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் அஜித் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளக விசாரணைப் பொறி முறையை அமைப்பதற்கான செயல் முறைகள் அனைத்தும், செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடருக்கு முன்னதாக, ஓகஸ்ட் மாத இறுதிக்குள் முடிவடையும். சர்வதேச பக்.24

# பல கட்சி ஜனநாயகம் ஒழிய இடமளியோம்

## சிறுபான்மைக் கட்சிகளிடம் ரணில் நேற்று உறுதி

கொழும்பு, ஜூன் 22

பல்வேறு கட்சிகள் இடம்பெறும் அரசியல் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து இரு கட்சி அரசியலுக்கு வழிகாட்டும் எந்த ஒரு தேர்தல் முறைமை தொடர்பான யோசனைக்கும் தாம் உடன்படப் போவதில்லை என சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், லால் காந்த ஆகியோருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்று முக்கிய சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே பிரதமர் ரணில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உத்தேச 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் மேற்படி தலைவர்கள் தங்களது நிலைப்பாட்டை பிரதமரிடம் தெளிவாக பக்.24

## நாரந்தனையில் வாள்வெட்டுக் குழு அடாவடி இரவில் வீடுகளில் தங்க மக்கள் கடும் அச்சம்

### பொது இடத்தில் இரவைக் கழித்துவிட்டு பகலில் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்



யாழ்ப்பாணம், ஜூன் 22

ஊர்காவற்றுறை நாரந்தனை தெற்கில் வாள் வெட்டுக் குழு ஒன்றின் அட்டகாசம் காரணமாகத் தாம் பயப்பீதியில் உள்ளதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர். அதன் காரணமாக இரவில் அங்குள்ள அனைத்துக் குடும்பங்களும் தத்தமது வீடுகளைவிட்டு வெளியேறி ஓரிடத்தில் ஒன்றுகூடித் தங்கியிருந்து இரவைக் கழித்துவிட்டு விடிந்த பின்னர் தத்தமது வீடுகளுக்குத் திரும்புவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

பல மாதங்களாக இங்கு வாள்வெட்டுப் பிரச்சினை பக்.24

## மைத்திரியின் யோசனை மறுதலித்தார் மஹிந்த

கொழும்பு, ஜூன் 22

அரசியலை விட்டு ஒதுங்கினால், மஹிந்தவுக்கு கௌரவமான பதவி வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வந்திருந்த நிலையில், மஹிந்த ராஜபக்ஷ அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும், ஜனாதிபதி மைத்திரிக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் 6 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபாலவைச் சந்தித்தது.

இதன் போது, மைத்திரிபால சிறிசேன, பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடவோ, தேசியப் பட்டியலிலோ மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்க முடியாது என்று கூறி விட்டார். அவர் அரசியலை விட்டு விலகினால், கௌரவமான பதவி ஒன்றை வழங்கத் தயாராக பக்.24

## கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு வன்னி, மட்டு. இணக்கமில்லை

### ஏனைய மாவட்டங்களுக்கு நேற்று எட்டப்பட்டது முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு தொடர்பில் வன்னித் தேர்தல் மாவட்டம் மற்றும் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம் ஆகியவற்றில் இணக்கப்பாடு ஏற்படவில்லை. ஏனைய மாவட்டங்களின் ஆசனப் பங்கீடு தொடர்பில் நேற்று இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சித் தலைவர்களுக்கு இடையிலான கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. இந்தக் பக்.24

## தேர்தல் தோல்விக்கு பஸிலிடம் காரணம் கேட்கின்றார் மஹிந்த

### அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்பு

கொழும்பு, ஜூன் 22

ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வியடைந்ததற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, மஹிந்த தன்னிடம் கேட்டுள்ளதாக முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது அரசின் தோல்விக்கான காரணங்களை பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றம்புட்டான் பழப் பருவகாலம் தற்போது ஆரம்பித்துள்ளது. அதையடுத்து தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட றம்புட்டான் பழங்கள் யாழ்.நகரில் பல பகுதிகளிலும் விற்பனை செய்யப் படுகின்றன. (ந–135)

# போதை விற்பனையாளர்களுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடோம்

## அத்துரலியே ரத்ன தேரர் திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 22

போதைப் பொருள் விற்பனையாளர்கள், நாடோடி அரசியல்வாதிகளுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பை வழங்கும் எந்த கட்சியுடனும் தமது கட்சி கூட்டணி வைக்காது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

தூய்மையான எதிர்காலத்திற்கான தேசிய சபையின் கம்பஹா மாவட்ட கூட்டம் மீரிகம பிரதேசத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பிரித்தானியருக்கு பின்னர், சேனாநாயக்கவினர், பண்டாரநாயக்கவினர் போன்ற நிலப் பிரபுக்கள் நாட்டுக்கு தலைமை தாங்கினர்.

எனினும் விருப்பு வாக்கு முறையினால் நாட்டில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அதிகாரமும் பணமும் இருப்பவர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குச் சென்றனர்.

தோற்றவர்களும் இந்த முறையினால் நாடாளுமன்றத்திற்கு சென்றனர். விருப்பு வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்கு செல்ல முடிந்தாலும் பெரிய கட்சிகளில் இருக்கும் பணம் படைத்தவர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குசென்றனர்.

மது விற்பனை நிலையங்களை நடத்தி, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்தும், ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்தும் அல்லது அரசியலில் கொள்ளையிட்டும், சண்டித்தன அரசியலில் ஈடுபட்டும் செல்வந்தர்களாக மாறியவர்கள் நாடாளுமன்றத்திற்கு செல்லும் முறையை மாற்ற வேண்டும்.

கடந்த காலங்களில் மோசடிகளில் ஈடுபட்ட மற்றும் சேவைகளை செய்யாத அமைச்சர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வெளியேற்ற மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

20வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாத வகையில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுகிறது. அத்துடன் கடந்த தேர்தலில் தாம் தோற்றுப் போனதை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் மறந்துள்ளனர்.

நாங்கள் ஜாதிக ஹெல உறுமய என்ற கட்சியாக எண்ணி செயற்படவில்லை. நாட்டின் அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் விரிவான தேசிய சக்தியாக கருதியே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.– என்றார். (ந)

# வெளிநாட்டு மதுபானங்கள் சிக்கின பொலிஸாரிடம்



கொழும்பு, ஜூன் 22

12 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு மதுபானப் போத்தல்களை நீர்கொழும்பில் வைத்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மதுபான வகைகளை விற்பனை செய்த நபரையும் கலால் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் பயன்படுத்திய அதிசொகுசுரக வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

60 லட்ச ரூபா பெறுமதியான டொயோடா பிரிமியர் ரக வாகனமொன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் தீர்வை செலுத்தப்படாத வெளிநாட்டு மதுபான வகைகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தையில் 6 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஜொனி வோல்கர் ரக மதுபானத்தை இந்த நபர் 3 ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார்.

கொழும்பு நட்சத்திர ஹோட்டல்களில் நடைபெறும் திருமணம் உள்ளிட்ட வைபவங்களுக்கு இந்த நபர் வெளிநாட்டு மதுபான வகைகளை குறைந்த விலையில் விநியோகம் செய்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட மதுபான போத்தல்களை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகாமையில் உள்ள இடமொன்றில் பெற்றுக்கொண்டதாக சந்தேகநபர் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

மதுபான வகைகளை கொள் வனவு செய்யச் செல்வது போன்று வேடமிட்டு சென்று அவற்றைக் கைப்பற்றி, சந்தேக நபரை கலால் திணைக்களத்தினர் கைது செய் துள்ளனர்.

நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட நபரை எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ந)

# முடியுமென்றால் வெல்லுங்கள்

## ராஜிதவின் மகன் மஹிந்தவுக்கு சவால்

கொழும்பு, ஜூன் 22

நீங்கள் 1977ஆம் பெலியத்தை தொகுதி ஊடாக தேர்தலில் களமிறங்கியிருந்தால் மீண்டும், பெலியத்தை தொகுதி ஊடாகவே தேர்தலில் களமிறங்க வேண்டும். நான் பெலியத்தை தொகுதி ஊடாக தேர்தலில் களமிறங்குவேன். முடியும் என்றால் பெலியத்தை தொகுதி ஊடாக தேர்தலில் போட்டியிட்டு உங்களுடைய அரசியல் வாழ்க்கையை முடித்துக்கொள்ளுங்கள். – இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சவால் விடுத்துள்ளார் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மகன் சத்துர சேனாரத்ன.

ஜனநாயக தேசிய இயக்கத்தின் தேசிய மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு சுகததாச உள்ளக மைதானத்தில் இடம்பெற்றுள்ளது. அதன் தலைவராக சத்துர சேனாரத்ன செயற்பட்டுள்ளார். அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஒருவருக்கு தலா இரண்டாயிரம் ரூபா வரையில் வழங்கி, இரண்டு லட்சம் வரையில் பஸ்களுக்கு செலுத்தி மாத்தறைக்கு மக்களை அழைத்து வருகின்றார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஊரான மெதமுல்ல பிரதேசத்தில் உள்ள மக்களை இரண்டு பஸ்களில் நிரப்பிக்கொள்வதற்கு 3 மணித்தியாலங்களும் 41நிமிடமும் ராஜ பக்ஷ தரப்பினர் வீணடித்தார்கள். எங்களிடம் அதற்கான காணொலிகளும் உள்ளன.

மோசடிக்காரர்களுக்கு வேட்பு மனு பட்டியல் வழங்க மாட்டோம் என நல்லாட்சியில் வாக்குறுதி வழங்கியிருந்தார்கள். அதனை மீறி வழங் கினால் சிறி கொத்தா தலைமை யகத்தை நாங்கள் சுற்றி வளைப் போம். – என்றார். (ந)

# அரசியல் பிச்சைக்காரர் அல்ல மஹிந்த ராஜபக்ஷ

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபட்டுள்ளதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் பொறுப்புக் கூற வேண்டும் என முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்அவர் இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் குருணாகல் மாவட்ட அமைப்பாளர்கள், மாகாண சபை உறுப்பினர்களை அழைத்து மஹிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது, பிரதமர் வேட்பாளராகவும் அவர் நிறுத்தப்பட மாட்டார், அதனால், காலத்தை வீணடிக்க வேண்டாம் எனக் கூறியுள்ளார்.

இதன் பின்னர், அரசின் ஊடகப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன,மஹிந்தவுக்குபிரதமர்பதவியோ, தேர்தலில் போட்டியிடும் வாய்ப்போ, தேசிய பட்டியலில் இடமோ வழங்கப்பட மாட்டாது எனக் கூறினார்.

ராஜித சேனாரத்ன கூறுவது சுத்தப் பொய், மஹிந்த ராஜபக்ஷ என்பவர் அரசியல் பிச்சைக்காரர் அல்ல. அவர் எந்த பதவியையும் கோரி எவர் பின்னாலும் செல்லவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இப்படி அவமதிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்.

இதன் மூலம் மஹிந்த மைத்திரியை ஐக்கியப்படுத்தும் விடயத்தை விரும்பாதவர்கள் இருவர் இருக்கின்றனர் என்பது தெளிவாகியுள்ளது. ஒருவர் ராஜித சேனாரத்ன மற்றையவர் சந்திரிகா அம்மையார்.– என்றார். (ந)

# தேர்தல் நடத்தப்பட்டால் ஐ.தே.கட்சியே வெல்லும்

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 22

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ, ஜே.ஆர். ஜெயவர்த்தன மற்றும் சந்திரிக்காபண்டாரநாயக்ககுமாரதுங்க ஆகிய முன்னாள் ஜனாதிபதிகளிடம் முன்னுதாரணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தனகல்ல தொகுதியில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில்உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நாட்டில் தற்போதுள்ள அரசியல் நிலைமையில் உடனடியான தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால், ஐக்கிய தேசியக் கட்சியே வெல்லும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஒப்படைத்த போதிலும் அதனைக் கொண்டு நடத்த அவர் இடமளிப்பதில்லை. – என்றார். (ந)

# நிதி மோசடியில் ஈடுபடவில்லை

## பஸில் ராஜபக்ஷ கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 22

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் தாம் நிதி மோசடிகளில் ஈடுபட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என முன்னாள் பொருளாதார அபிவிருத்தியமைச்சர் பஸில்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் பணத்தை நான் பதுக்கி வைத்துள்ளதாகவும் என் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான குற்றச்சாட்டுகளில் உண்மை தன்மையில்லை. – என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:–

என்னிடம் பெருந்தொகையான பணம் இருந்தால் தானே என்னால் வெளிநாடுகளில் பணத்தை பதுக்க முடியும். என்னிடம் அந்த அளவில் பணம் இல்லை. திவிநெகும திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தை மோசடி செய்யவில்லை.

அமெரிக்காவில் ஒரு வங்கிக் கணக்கு இருப் பதாகவும் அங்கு வாழ்ந்து வருவதனால் ஒவ்வொரு ஆண்டும் அது பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.– என்று அவர் தெரிவித்தார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரை கண்டிக்காமையே சீர்கேடுகளுக்குக் காரணம்

## தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டுகின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 22

பாடசாலைகளில் கண்டிப்புடன் நடந்துகொள்ளும் ஒவ்வொரு அதிபரும், ஆசிரியரும் இரவுப்பொழுதை பயத்துடனே கழிக்கின்றனர். இதற்கு முழுக்காரணம் மாணவர்களின் எந்தவொரு நடத்தையையும் எவரும் கண்டிக்காததே. மாறாக மாணவர்கள் பக்கம் நின்று அதிபர்களையும், ஆசிரியர்களையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதே இன்னுமொரு காரணமாகும்.– இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாற்பது வயதைத்தாண்டிய எந்தவொரு தமிழ் பேசும் மகனை எடுத்தாலும் அவர்களுக்குக் கற்பித்த கண்டிப்பான ஆசிரியர்கள் பற்றியே பேசுகின்றார்கள். அவர்களாலேயே தாங்கள் உயர்வடைந்ததாகக் கூறுகின்றார்கள். இப்போது அதுபோன்ற ஆசிரியர்களும் இல்லை. கண்டிப்பை ஏற்றுக் கொண்டு வழிப்படும் மாணவர்களும் இல்லை.

இதற்கு உறுதுணையாக எம்மினத்தின் மத்தியில் புகுத்தப்படுகின்ற வேண்டப்படாத, ஆபத்தை உண்டு பண்ணும் போதைப் பொருள்களும், பழக்க வழக்கங்களுமே காரணமாகும்.– என்றும் அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாடசாலை மாணவர்களை சரியாக வழிப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு, சட்டத்துறை என்பன அதிபர்கள், ஆசிரியர்களுக்கு முறையான அங்கீகாரம் வழங்க வேண்டும். மாணவர்களை முழுமையாகக் கண்காணிக்கும் உரிமை வழங்கப்படவேண்டும். எந்தவொரு ஆசிரியரும் மாணவனை எதிரியாகப் பார்ப்பதில்லை. அவனை வழிப்படுத்தவே எண்ணுகின்றார். அத்தகைய உணர்வை மாணவர் உணரும் வகையில் பாடசாலை நிர்வாகக் கட்டமைப்புகளில் மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும்.

பாடசாலைகளில் ஒழுக்கத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே தமது கடமைகளைச் செய்கின்றனர்.

எனவே அதிபர்கள், ஆசிரியர்களில் குறை சொல்வதனை நிறுத்தி குற்றவாளிகளைச் சரியாக இனங்கண்டு கூண்டோடு அழித்தால் மட்டுமே இதற்கு தீர்வு கிடைக்கும். எமது பிரதேசங்களில் போதைப் பாவனை, வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்பதனைத் தடுப்பதற்கு பாடசாலையின் அதிபர்கள் ஒத்துழைப்பதில்லை என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும், உளசமூக உத்தியோகத்தரும் குற்றம் சுமத்தியிருப்பதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மாணவ சமூகம் சீரழிவதற்கு பல்வேறு காரணிகள் பின்னணியில் உள்ளன. அவற்றைக் கண்டறிந்து தீர்வு காண்பதனை விட்டுவிட்டு அதிபர்கள் ஒத்துழைப்பதில்லை என்ற நொண்டிச்சாட்டை முன்வைப்பது வேடிக்கையான ஒன்று.

இன்று மாணவர்களைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ திராணியற்றவர்களாக அதிபர்களும், ஆசிரியர்களும் உள்ளனர். மாறாக மாணவர்களைக் கண்டிக்க முற்படும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இன்று எமது சமூகத்தில் என்ன நடக்கின்றது என்பதனை அறிந்துகொள்ளாதவர்களே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

அதுமட்டுமன்றி பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்யும், அல்லது வழங்குவோருக்கு பகிரங்க தண்டனையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பாடசாலையில் பாவிப்பதனை முற்றாகத் தடைசெய்ய சட்டரீதியாக கட்டளை வழங்கப்படவேண்டும். – என்றுள்ளது. (ற–4)

# பயங்கரவாதக் குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை

## குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பல வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் வவுனியா மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டு அண்மையில் அவர் விடுதலை செய்யப்பட்டார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விமலசிங்கம் தனுயுகன் என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

அவர் 2009 ஆம் ஆண்டு ஓமந்தையில் பாடசாலையில் பலருடன் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் அவர் கொழும்பு 4 ஆம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். பின்னர் பூசாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சில வருடங்களின் பின்னர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார்.

2004 ஆம் ஆண்டில் வவுனியாவில் புலிகள் அமைப்பின் புலனாய்வுப்பிரிவில் இணைந்து ஆய்வு கூடத்தில் பணியாற்றியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. விசாரணைகளின் பின்னர் 2013 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் குறித்த குற்றம் சுமத்தப்பட்டது. எதிரி குற்றத்தை மறுத்ததால் அவர் தொடர்பான வழக்கு விசாரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டு வவுனியா மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

அந்த வழக்கு விசாரணையில் இருந்து வந்த நிலையில் விசாரணையின் மூலமாக குறித்த சந்தேக நபர் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட வாக்குமூலம் தொடர்பில் உண்மை விளம்பல் விசாரணை இடம்பெற்றது. அதன்படி குறித்த வாக்குமூலம் குறித்த சந்தேக நபரால் வழங்கப்பட்டிருக்கவில்லை என்று தீர்மானித்து குறித்த நபரை நீதிமன்று விடுதலை செய்தது. (ற–4)

# மோட்டார் சைக்கிள் - பஸ் விபத்தில் முதியவர் சாவு

## பஸ்ஸின் பிரேக் சீராக இல்லை என்று முறைப்பாடு


யாழ்ப்பாணம், ஜூன் 22

மோட்டார் சைக்கிளும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்ஸும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

குறித்த பஸ்ஸின் பிறேக், கிளச் என்பன பழுதடைந்த நிலையில் இருந்தது என்றும் அது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு ஏனைய பஸ் சாரதிகள் அறிவுறுத்தியிருந்த நிலையில் இந்த விபத்து நடந்துள்ளது என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூளாய் மாவடிச் சந்தியில் நேற்று முன்தினம் மதியம் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்லையா துரைசிங்கம் (வயது 68) என்பவரே உயிரிழந்தார்.

விபத்தையடுத்து சங்கானை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்திய சாலைக்குமாற்றப் பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். விசா ரணைகளின் பினன்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட் டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். (ற–4)



# குடாநாட்டில் டெங்குத் தொற்று ஆயிரத்தை தாண்டியது

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்.குடாநாட்டில் டெங்குத் தொற்று இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கையில் அவ்வாறு தொற்றுக்குள்ளாகியோரின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளது என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

முன்னைய மாதங்களைவிட குறைந்த அளவில் தொற்று இனங்காணப்பட்ட போதும் அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தமாதம் கடந்த வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் 37 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த மாதம் 66 பேரும் கடந்த ஏப்ரலில் 48 பேரும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இதுவரை யாழ்.குடாநாட்டில் ஆயிரத்து 96 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

தவிர வடக்கில் முல்லைத்தீவில் 85 பேரும், மன்னாரில் 74 பேரும், வவுனியாவில் 81 பேரும், கிளிநொச்சியில் 35 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதுதவிர நாடளாவிய ரீதியில் 15 ஆயிரத்து 568 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சுத் தெரிவித்தது. (ற–4)

# பொலிஸ் அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு

## சிறுமி தொடர்பான விடயத்தில் மனித உரிமை ஆணைக்குழுவிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

சிறுமியுடன் தொடர்புடைய விடயம் ஒன்று தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுமி பாலியல் முறைகேட்டுக்கு உட்படுத்தப்பட்டார் என்று வதந்தி பரப்பியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரிய போதும் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நடவடிக்கை எடுக்காது, வதந்தி பரப்பி யவர்களுடன் சமாதானமாகப் போகுமாறு தம்மைக் கட்டாயப் படுத்துவதாகவும் சிறுமியின் பெற்றோர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவிலுள்ள சிறுமியே பாலியல் முறைகேட்டுக்கு உள்ளாக்கப்பட்டதாக அதே இடத்தைச் சேர்ந்தவர்கள் வதந்தி பரப்பியுள்ளனர் என்பது சிறுமியின் பெற்றோரின் வாதமாக உள்ளது. அதனடிப்படையிலேயே சிறுமியின் குடும்பத்தார் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அவரது பிரிவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோரிடம் அறிக்கை கோரியுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார். (ற–4)

# டைனமற் வைத்திருந்த மூவருக்கு 5 வருடங்கள் ஒத்தி வைத்த சிறை

டைனமற் வெடிபொருள்களைத் தமது உடைமையில் வைத்திருந்த 3 பேருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்த யாழ். மேல் நீதிமன்று அந்தத் தண்டனையை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தது.

2006 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை பிரதேசத்தில் குறித்த வெடிபொருள்களை உடைமையில் வைத்திருந்தபோது அதே இடத்தைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் தொடர்பான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தி னால் கடந்த ஜனவரியில் யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. அந்த வழக்கு நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்டது.

விசாரணை ஆரம்பத்தின்போதே 3 சந்தேக நபர்கள் மேல்நீதிமன்றில் முன்னிலையாகி தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்தே அவர்களுக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. தவிர மூவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப் பட்டது.

இந்த வழக்கில் விசாரணைகளுக்கு சமுகமளிக்காமல், தலைமறைவாகியுள்ள 2 ஆவது சந்தேக நபருக்கு எதிரானவழக்கைத்தொடர்ந்துநடத்துமாறும் நீதிமன்று பொலிஸா ருக்கு உத்தரவிட்டுள்ளது. (ற–4)

# நிரந்தர நியமனம் கோரி வன்னி தொண்டராசிரியர் போராட்டம்

## இன்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக

> தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் பேச்சளவிலேயே காணப்படுகின்றது என்று வன்னி தொண்டர் ஆசிரியர் சங்க தலைவர் ஜெயராஜ் தெரிவித்தார்.

கொழும்பு, ஜூன் 22

நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வன்னி தொண்டர் ஆசிரியர் சங்கத்தினர் இன்று காலை 9 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக வன்னி தொண்டர் ஆசிரியர் சங்க தலைவர் ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் பேச்சளவிலேயே காணப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதையடுத்தே இன்று வன்னி தொண்டராசிரியர்களால் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளது என்றும் வன்னி தொண்டராசிரியர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

வன்னிப் பகுதியைச் சேர்ந்த மடு, வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, கிளிநொச்சி வலயங்களில் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களே இவ்வாறு போராட்டத்தை முன்னெடுக்க உள்ளனர்.

இந்த கவனவீர்ப்பு போராட்டத்தின் போது தொண்டர் ஆசிரியர்களுக்கான காத்திரமான முடிவுகள் எட்டப்படவேண்டும் எனவும் இல்லை என்றால் தொடர் போராட்டத்தை நடத்த உள்ளதாகவும் தலைவர் தெரிவித்துள்ளார். (ற–21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் காற்றால் கடற்றொழில் பாதிப்பு: மீனவர்கள் கவலை

மன்னார், ஜூன் 22
கரையோரப் பகுதியில் கடந்த மே மாதம் முதல் வீசி வரும் பருவக்காற்று கடும் வேகத்துடன் காணப்படுவதால் மன்னார் மாவட்டத்தில் தற்போது கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருவதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
இதனால் தாம் நாளாந்தம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.
குறித்த பருவக்காற்றை மீனவர்கள் சோளக் காற்று என கூறுகின்றனர். குறித்த பருவக் காற்று மே மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலான சுமார் 6 மாதங்கள் வரை கடல் சார் கரையோரப்பிரதேசங்களில் வீசும். இதனால் குறித்த 6 மாத காலங்களிலும் மீனவர்களின் கடற்தொழில் நடவடிக்கைகள் பாதிப்படையும்.
ஆயினும் தற்போது குறித்த பருவக்காற்றின் வேகம் அதிகரித்துள்ளதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர். இதனால் ஆழ்கடலுக்குச் செல்வதை குறைத்து கரைவலை தொ ழிலை மீனவர்கள் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-56)



# ஐந்து மாடி கட்டட திறப்பு விழா இன்று

மானிப்பாய், ஜூன் 22
யாழ். – கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டத்தின் கீழ் நவீன வடிவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய ஐந்து மாடிக் கட்டடம் இன்று யாழ்.நகர் மத்தியில் திறந்து வைக்கப்படவுள்ளது.
இதற்கான ஏற்பாடுகளை யாழ்கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதார திட்டத்தின் திட்ட பணிப்பாளரும் வடக்கு உதவிப் பொது முகாமையாளருமான எந்திரி தி. பாரதிதாசன் மேற்கொண்டுள்ளார்.
மேற்படி நவீன ஐந்துமாடி கட்டடம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வடக்கு உதவி பொது முகாமையாளர் மற்றும் யாழ்.பிராந்திய முகாமையாளர் ஆகியோரது அலுவலகங்களை ஒருங்கே கொண்டிருக்கும்.
காலை 9 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வுக்கு நகர அபிவிருத்தி நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைச்சர் ரவூப் ஹக்கீம், மகளிர் விவகார பிரதி அமைச்சர் கௌரவ திருமதி விஜயகலா,மகேஸ்வரன் வடமாகாண ஆளுநர் எச்.எம். ஜி.எஸ் பளிஹக்கார, வடமாகாண முதல்வர் க.வி.விக்னேஸ்வரன், நீர்வழங்கல் சபையின் பிரதி அமைச்சர் துனேஷ் கங்கந்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
நிகழ்ச்சிகளை நகர அபிவிருத்தி நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு செயலாளர் கருணா சேனா ஹெட்டியராச்சி ஒருங்கிணைக்கவுள்ளார். (ற-50)

# மாஞ்சோலை வைத்தியசாலையின் சிற்றூண்டிச்சாலை தீயால் நாசம்




முல்லைத்தீவு, ஜூன் 22
முல்லைத்தீவு மாஞ்சோலை மாவட்ட பொதுவைத்தியசாலையின் சிற் றூண்டிச்சாலையில் நேற்று ஞாயி ற்றுக்கிழமை அதிகாலை 3. 30மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதில் சிற்றுண்டிச்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.
சிற்றூண்டிச்சாலையின் ஓய்வறையில் அங்கு கடமையாற்றும் இருவர் படுத்துறங்கியுள்ளனர். அதிகாலை 3.30 மணியளவில் திடீரென சிற்றூண்டிச்சாலைக்குள் தீப்பற்றியுள்ளது. அதையடுத்து அங்கு படுத்துறங்கியவர்கள் வெளியே வந்து வைத்தியசாலை ஊழியர்களின் உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டுள்ளனர். முள்ளியவளை பொலிஸ் மற்றும் இரா ணுவத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர்களின் உதவியுன் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. சம்பவ இடதுக்கு வந்த முள்ளியவளை பொலிஸாரும், முள்ளியவளை 591 படை முகாம் இராணுவ அதிகாரிகளும் கூட்டாக இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும் பல இலட்சம் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.
இந்தத் தீவிபத்துச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ற-433,422)


# மணலுக்கு தட்டுப்பாடு

## கிளிநொச்சி மாவட்டத்தில்

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டுத் திட்டத்தில் வீடுகளை அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருபவர்கள் வீடுகள் அமைப்பதற்குத் தேவையான மணலைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வெளியி டங்களுக்கு பெருமளவில் மணல் கொண்டு செல்வதையடுத்து, கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமாக நடைபெறும் மணல் அகழ்வு தொடர்பாக விவரங்களை சேகரிக்குமாறு மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.
இதனால் மணல் அகழ்வதற்கான அனுமதிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமையால், உரிய முறைகளில் மணல் பெற்றுக்கொள்பவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
வீடுகளைக் கட்டுவதற்காக ஆற்றுப் படுக்கைகளில் அனுமதியுடன் மணல் அள்ளுவதற்கு அப்பகுதியிலுள்ள இராணுவத்தினர் அனுமதி வழங்குவதில்லை என்றும் கூறப்படுகின்றது.
சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துடன் தங்களுக்கு தேவையான மணலைப் பெற்றுக் கொள்ளவும் வழிசெய்யுமாறு வீடுகள் கட்டும் மக்கள் கோருகின்றனர். (ற)

# சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நேற்று வடக்கு, கிழக்கில் நிகழ்வுகள்





யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற யோகா பயிற்சி நிகழ்வு



ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச யோகா தினம் நேற்று வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் கொண்டாடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்
யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்பாணத்தில் சர்வதேச யோகா தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. சர்வதேச யோகா தினத்தை கொண்டாடும் முகமாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரகமானது பெரும் யோகா பயிற்சி நிகழ்வொன்றை யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்திருந்தது.
இந்நிகழ்வு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. அதற்கு இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராஜா தலைமை தாங்கினார். இந்த யோகா தின நிகழ்வில் உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

திருகோணமலை
திருகோணமலையிலும் யோகா தினம் கொண்டாடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
யோகா தின நிகழ்வாக விழிப்புணர்வு நடைபவனி ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றது. உவர்மலை இளைஞர் விளையாட்டு மைதானத்தில் இருந்து ஆரம்பித்த நடைபவனியானது உள்துறைமுக வீதியூடாகச்சென்று பின் கடல்முக வீதியூடக மின்சார நிலைய வீதியை அடைந்துபின்தபால்நிலையவீதியூடாக பயணித்து பின் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் கோயிலை சென்றடைந்தது.
காலை 9.30 மணியளவில் பத்திரகாளி அம்பாள் கோயில் சோமஸ்கந்தர் மண்டபத்தில் யோகாபற்றிய விழிப்புணர்வு கலந்துரை யாடல் நிகழ்வும் இடம்பெற்றது.
இந்த நடைபவனியில் பெரும் திரளான மக்கள் கலந்துக்கொண்டனர். யோகாவின் முக்கியத்துவம் பற்றி துண்டுபிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

மட்டக்களப்பு
சர்வதேச யோகா தினம் நேற்று மட்டக்களப்பு மஹாஜனா கல்லூரி பிரதான மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. அதனை மட்டக்களப்பு யோகா ஆரோக்கிய இளைஞர் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.
யோகா சிகிச்சை நிபுணர் செல்லையா துரையப்பா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.கிரிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.
இந்த நிகழ்வில்மட்டக்களப்புயோகா ஆரோக்கிய இளைஞர் கழகத்தால் யோகா பயிற்சி கண்காட்சியும் இடம்பெற்றது.

காலிமுகத்திடல்
சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை காலி முகத்திடலில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.
இந்திய உயர் ஸ்தானிகராலயம், உள்ளூர் சமுதாய யோகா மற்றும் ஆன்மீக அமைப்புக்களுடன் இணைந்து சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகள் காலை 6.30 முதல் 8.30 வரை நடத்தப்பட்டன.(ற, 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆண்டு ஆட்சியில் ஏன் வரவில்லை '20'?

## கேள்வி எழுப்புகின்றார் கிரியெல்ல



கொழும்பு, ஜூன் 22
அரசியல் அமைப்பில் 20 ஆவது திருத்தத்தை உடன் கொண்டு வந்து அதன் பிறகே தேர்தல் நடத்தக் கோரும் எதிர்க்கட்சி, ஏன் கடந்த 20 வருட கால ஆட்சியில் அதனைக் கொண்டு வரவில்லை? என கேள்வியெழுப்பிய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, எதிர்க்கட்சியினர் போலி கோரிக்கைகளையே முன்வைத்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

கண்டி, மலைநாட்டு கலை சங்க மண்டபத்தில் ஐ.தே.க.வின் ஹேவாஹெட்ட தேர்தல்தொகுதி மத்தியகுழு ஒழுங்கு செய்த கூட்டம் ஒன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது:–

இனவாதத்தைத் தூண்டி அதன் மூலம் கடந்த தேர்தலில் வெற்றி பெற முயற்சித்தவர்களுக்கு புத்தி சாதுர்யமாக மக்கள் நல்ல பாடம் புகட்டினர்.

1977ஆம் ஆண்டு யுகத்தை மீண்டும் நாம் ஏற்படுத்துவோம். கம் உதாவ வீடமைப்புத்திட்டம், பாரிய மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற பாரிய செயல் திட்டங்களை மீண்டும் உருவாக்குவோம். அதன் மூலம் உள்ளூரில் இலட்சக் கணக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்க உள்ளோம்.

கடந்த பல வருடங்களாக ஆட்சியில் இருந்த எதிர்க்கட்சி 20ஆவது திருத்தத்துக்கு போராடுகிறார்கள். 20ஆவது திருத்தம் வேண்டும் என்று கோஷமிடும் அவர்களால் கடந்த ஆட்சியில் ஏன் அந்த நிறைவேற்ற முடியாது போனது.

அவர்களுக்குத் தேவை 20ஆவது திருத்தம் அல்ல. அதனைக் காரணம்காட்டிசர்வாதிகாரியாகிக்கொண்டு போகும் நாடாளுமன்றத்தை இழுத்தடிப்பதாகும். தொடர்ந் தும் இன்னும் சிலகாலத்துக்கு ஆட்சி அதி காரத்தில் இருப்பதே அவர்களது நோக்கமாகும்.

பழைய முறையிலோ அல்லது புதிய முறையிலோ தேர்தல் ஒன்றை நடத்தி பொதுமக்கள் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள நாம் தயார். பொது மக்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள். நாம் தேர்தலுக்குப் பயப்படவில்லை.– என்றார். (ற)

# சோபித தேரர் ஏற்றுக்கொண்டமை எமக்குக் கிடைத்த பெரும் வெற்றி

## தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 22
சிறு மற்றும் சிறுபான்மை கட்சிகளின் இரட்டை வாக்கு கோரிக்கையை வண. சோபித தேரர் ஏற்றுக்கொண்டமை எமக்கு கிடைத்துள்ளமிகப்பெரும்வெற்றிஎனதமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரி வித்தார்.

சிறு மற்றும் சிறுபான்மை கட்சி பேரவைக்கும், விகாராதிபதி வண. சோபித தேரருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் கோட்டே நாக விகாரையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர்மேலும் தெரிவித்ததாவது:–

உடனடியாக தேர்தல்முறை மாற்ற 20 ஆம் திருத்த வர்த்தமானி பிரகடனத்தை மீளப் பெறுங்கள். அதை மீளப்பெற்ற பின்னர் சிறு மற்றும் சிறுபான்மைக் கட்சிகளுடன் புதிய சுற்றுப்பேச்சுநடத்தி, இரட்டை வாக்கு முறைமையை தேர்தல் முறை மாற்ற யோசனைத் திட்டத்தில் உள்வாங்கி, அதைநாடாளுமன்றம் கொண்டு சென்று சட்டமாக்குங்கள். இந்த இரண்டையும் செய்ய முடியாவிட்டால், இந்த காலாவதியான பாராளுமன்றத்தை உடன் கலைத்து விட்டு, புதிய தேர்தலை, நடப்பு தேர்தல் முறையின் கீழ் நடத்தி, புதிய நாடாளுமன்றத்தை உருவாக்கி, அதில் தேர்தல் சட்டம் உட்பட நாட்டின் முக்கிய பிரச்சினைகளை தீர்க்கும் புதிய அரசமைப்பைச் சட்டமாக்குங்கள்.

எங்களுடனான பேச்சையடுத்து மேற்கண்ட மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்ட வண. சோபித தேரர் அரசுக்கு அவற்றை முன் வைத்ததுடன் தொடர்ந்து எம்முடன் இணைந்து பணியாற்ற உடன்பட்டுள்ளார். இது எமது சிறு மற்றும் சிறுபான்மை கட்சி பேரவைக்கு கிடைத்துள்ள பெரும் வெற்றியாகும்.– என்றார். (ற)

# 20ஆவது திருத்தத்தை ஆதரிக்கப் போவதில்லை

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 22
சிறுபான்மைக் கட்சிகளின் கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் செவிமடுக்காமல் அவற்றை புறந்தள்ளி அவசரமாக வர்த்தமானியில் பிரசுரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 20 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கப் போவதில்லை. அதனை சுருட்டிக் கொண்டு போகுமாறு நாம் கோருகின்றோம். – இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர அபிவிருத்தி நீர் வளத்துறை அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி குயின்ஸ் ஹோட்டல் மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்டி நகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சிறுபான்மைக் கட்சிகளின் கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எந்தவொரு விரிவான பேச்சுக்கும் செவிமடுக்காமல் அவற்றை புறந்தள்ளி அவசரமாக 20 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட்டு நாடாளுமன்றத்துக்கு கொண்டு வருவது ஏன்? இதற்கு எமது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமன்றி மக்கள் விடுதலை முன்னணி இ.தொ. கா உட்பட 20 சிறுபான்மைக் கட்சிகள் எதிர்ப்பைத் தெரிவித்து வருவதுடன் போராட்டம் நடத்தவும் தயாராகவுள்ளன.

இவ்வாறான நிலையில் 19 ஆம் திருத் தச் சட்டத்துக்கு கிடைக்கப் பெற்ற தைப் போன்று 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு 2/3 பெரும்பான்மை ஆதரவு நாடாளுமன்றத்தில் கிடைக் கப் போவதில்லை.

எனவே சிறுபான்மைக் கட்சிகளின் கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் இடமளிக்காமல் கொண்டு வரப்படும் 20 ஆவது திருத்தச் சட்டத்தை சுருட்டிக் கொள்ளுமாறும் வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ளதையும் உடனடியாக அகற்றிக் கொள்ளுமாறும் நாம் கேட்டுக்கொள்வதுடன் இது தொடர்பாக ஜனாதிபதியினதும் பிரதமரினதும் கவனத்துக்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.– என்றார். (ற)

# ஒற்றுமையை வளர்த்தெடுக்க அனைவரும் ஒன்றிணைவோம்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவிப்பு



திருகோணமலை, ஜூன் 22
கிழக்கு மாகாணசபையின் செயற் பாடுகளில் தொடர்ந்தும் இனங் களுக்கிடையில் சமத்துவத்தையும் ஒற்றுமையையும் வளர்த்தெடுப் பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையில் நல்லாட்சிக் கான நிதிக் கொள்கை நடை முறைப்படுத்த வேண்டும்என்ற தனிநபர் பிரே ரனை தொடர்பாக அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகள் ஊடாக மூவின மக்களின் இன ஒற்றுமைக்கு வித்திட்டோம். இவ்வாறு பெரும்தியாகத்தின் மத்தியில் உருவாக்கப்பட்ட இன ஒற்றுமையை தற்போதைய கூட்டாட்சியின் கீழ் நடைபெறும் சில தவறான செயற்பாடுகள் சமூகங்கள் மத்தியில் சந்தேக நிலைமையை உருவாக்கியுள்ளது.

எனவே, கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகளில் தொடர்ந்தும் இனங்களுக்கிடையில் சமத்துவத்தையும் ஒற்றுமையையும் வளர்த்தெடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் அமைய இருக்கும் கிழக்கு மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளும் சமூகங்கள் மத்தியில் சந்தேகங்களை உருவாக்க சந்தர்ப்பங்களை வழங்கியதாக அமைந்துவிடும்.

முஸ்லிம் காங்கிஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து கூட்டாட்சி உருவாக்கப்பட்டு 03 மாதங்கள் சென்ற பின்னும் இது வரை கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் வெளிவரவில்லை. அமைச்சரவைத் தீர்மானங்களும் வெளியே வரவில்லை. வரவு –செலவு திட்ட நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவரங்கள் ஆளுங் கட்சியினர்களுக்கே தெரியாது என்ற நிலமை உருவாகியுள்ளது.

கிழக்கு மாகாண கூட்டாட்சியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சரியான பாதையில் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எங்களிடம் உள்ளது. இந்த நம்பிக்கை வீண் போகாத வகையில் கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு உள்ளது.– என்றார். (ற)

# நாட்டு மக்கள் அனைவருமே சமாதானமாக வாழ்கின்றனர்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



பொத்துவில், ஜூன் 22
நாட்டில் இன்று பௌத்த, தமிழ், கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மக்கள் மிகவும் ஒற்றுமையாகவும் சமாதான மாகவும் வாழ்கின்றனர். இதற்கு மதகுருமார்களின் சிறந்த வழிகாட்டுதல்கள் பிரதான காரணியாக இருக்கின்றன என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேசத்திலுள்ள தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தின் முகுது மகா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 60 அடி உயரமான பௌத்த விகாரையை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது:–

30 வருடங்களாக நடைபெற்ற போரை வெற்றிகொண்டு விட்டோம் என்ற சந்தோசத்தில் நாம் இருக்கின்றோம். இருந்த போதும் போர் எதனால், எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது? என்பதை நாம் ஒவ்வொருவரும் படிப்பினையாகக் கொள்ளவேண்டும்.

நான் சுகாதார அமைச்சராக இருக்கும் போது, இங்கு இருக்கும் சிரேஷ்ட வைத்தியர் கபில தலைமையிலான குழுவினர் வைத்தியர்களாக மாத்திரம் நாட்டிற்கு சேவையாற்றவில்லை. பின்தங்கிய கிராமங்களில் பௌத்த கலாசாரத்தை மேம்படுத்துவதற்காக தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டார்கள். [illegible] விகாரையாகும்.– என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் துணைபுரிவீர்கள்.

**இடபம்:** இனிய பேச்சால் மற்றவரைக் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பால் மகிழ்ச்சி கூடும்.

**மிதுனம்:** அறிமுகமில்லாதவரிடம் சொந்த விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் பெருகும். உறவினர் வருகையால் வீட்டில் கலகலப்பு ஏற்படும். பயனற்ற பொருள்களை வாங்க வேண்டாம்.

**கடகம்:** புதிய சவால்களைத் திறமையுடன் எதிர் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். அக்கம் பக்கத்தினர் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசியல்வாதிகள் புதிய பதவி பெற யோகம் உண்டு.

**சிங்கம்:** யாருக்கும் தகுதி மீறிய வாக்குறுதி கொடுக்கக் கூடாது. தொழில், வியாபாரத்தில் தடை ஏற்பட்டு மறையும். இலாபம் சுமாராக இருக்கும். உணவு விடயத்தில் எச்சரிக்கை தேவைப்படும். நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும்.

**கன்னி:** கடந்த கால அனுபவத்தால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமை நிறைந்திருக்கும். பிள்ளைகளின் செயற்பாடு கண்டு மகிழ்வீர்கள்.

**துலாம்:** சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்படுவீர்கள். பெற்றோர் ஆலோசனை நல்வழி காட்டும். தொழிலில் கூடுதல் பணவரவு கிடைக்கும். மனைவி விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம்:** விடாமுயற்சியால் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் வரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை செலுத்துவீர்கள்.

**தனுசு:** குடும்பத்தினரின் எதிர்ப்புக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**மகரம்:** நல்லெண்ணத்துடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் சீரான ஆதாயம் கிடைக்கும். உறவினர் வருகையால் சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்களின் உதவியைக் கேட்டுப் பெறுவீர்கள்.


**கும்பம்:** செயல்களில் நேர்மை நிறைந்திருக்கும். சமயோசிதத்தால் தொழில் வியாபாரத்தில் இலாபம் காண்பீர்கள். மனைவி வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். ஆடம்பரச் செலவைக் குறைப்பது நல்லது.

**மீனம்:** எதிலும் பொறுமையைக் கடைபிடிப்பது நல்லது. திடீர் செலவால் சேமிப்பு கரைய வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். உறவினரை உபசரிக்க இயலாமல் போகலாம்.

## எப்படிப் பொருந்திப் போகின்றன என்பதை விழித்துப் பாருங்கள்









## வித்தியாபாலன் வித்தியாசமானவர்

ரசிகர்களோ பொதுப் பார்வையாளர்களோ தங்களை நெருங்கும் நேரத்தில், அவர்களைத் தடுப்பதற்காகவே பல நடிகைகள் பாதுகாவலர்களை வைத்திருக் கிறார்கள். அவர்களிலிருந்து வித்தியாசமானவர் வித்யா பாலன்.

தன்னை சைட் அடிப்பவர்களையும், நக்கல் செய்பவர்களையும் விரும்புகிறாராம். அழகாக இருப்பதால் தானே ஆசைப்படுகிறார்கள். ரசித்துவிட்டுப் போகட்டும், என்று பெருந்தன்மையோடு சொல்கிறார் வித்தியா.

## அம்மா ஆகிறார் சினேகா

நடிகை சினேகாவின் வளைகாப்பு எளிமையான முறையில் சென்னை தியாகராயநகரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமைநடைபெற்றது.

நடிகை சினேகாவும், நடிகர் பிரசன்னாவும் 'அச்சமுண்டு அச்சமுண்டு' திரைப்படத்தில் ஜோடியாக நடித்தார்கள். அப்போது இரண்டு பேருக்கும் இடையே காதல் மலர்ந்தது. பெற்றோர்கள் சம்மதத்துடன் இருவரும் திருமணம் செய்துகொண்டார்கள்.

கடந்த 2012 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. சினேகா இப்போது 7 மாதம் கர்ப்பமாக இருக்கிறார். அவருக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் குழந்தை பிறக்கும், என்று வைத்தியர்கள் கூறியிருக்கிறார்கள்.

7 மாத கர்ப்பிணியான சினேகாவுக்கு சென்னை தியாகராயநகரில் உள்ள நட்சத்திர விடுதியில் வளைகாப்பு நடந்தது. சினேகாவின் தந்தை ராஜாராம், தாயார் பத்மாவதி, பிரசன்னாவின் தந்தை கிருஷ்ண மூர்த்தி, தாயார் புவனேஸ்வரி மற்றும் நெருங்கிய உறவினர்கள், வளைகாப்பில் கலந்துகொண்டார்கள்.

நடிகர்கள் சிபிராஜ், நரேன், நடிகைகள் மீனா, சங்கீதா, பாடகர் கிருஷ், இயக்குநர் ஹரியின் மனைவி பிரீதா ஹரி ஆகியோர் வளைகாப்புக்கு வந்து சினேகா–பிரசன்னா ஜோடியை வாழ்த்தினார்கள்.

## கொசுவைப் பிடிக்க விமானம்

கொசுக்கள் மூலமாகத்தான் அதிக அளவில் வைரஸ் கிருமிகள் பரவுகின்றன. எனவே கொசுக்களைப் பிடித்து அவற்றை ஆய்வு செய்வதன் மூலம் புதிய வகை கிருமிகள் பரவுவதை தடுக்கலாம் என்ற நோக்கில் மைக்ரோசொப்ட் ஆய்வு நிறுவனம் ஆள் இல்லாத குட்டி விமானத்தை உருவாக்க இருக்கிறது.

இதில் இணைக்கப்படும் கருவி, கொசுக்களை கவர்ந்து இழுக்கும். குறைந்த அளவு பட்டரி சக்தியால் இயங்கும் இந்த கருவி மூலம் கொசுக்களை எளிதாகப் பிடிக்க முடியும் என்றும், அதனைத் தொடர்ந்து ஆய்வு நடத்தி டெங்கு, பறவை காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் முன்னதாகவே அவற்றை தடுத்து நிறுத்த முடியும் என்றும் அந்த நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.



## கொஞ்சம் சிரிங்க பாஸ்...



மனைவி: காதலிக்கும் போது அடிக்கடி என் மேல கொள்ள ஆசையா இருக்குன்னு சொல்லுவீங்க. இப்போ ..?
கணவன் : கொல்ல ஆசையா இருக்கு!

ஒருவர்: கல்யாணம் முடிந்த கையோடு பொண்ணையும் மாப்பிள்ளையையும் கோவிலுக்கு அனுப்புறாங்களே! எதுக்குங்க?
மற்றொருவர் : செய்த தப்புக்கு பிராயசித்தம் தேடிக்கத்தான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன் 22
விதவைகள் தினத்தை முன்னிட்டு வடமாகாண சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பெண் தலைமைத்துவ குடும்ப தலைவிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்மேளத்தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்வார். (ஐ)

## ஆலய திருவிழா

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சியில் பிரச்சித்திபெற்ற கிளிநொச்சி வட்டக்கச்சி அருள்மிகு கந்த சுவாமி ஆலய வருடாந்த தேர் திருவிழாவானது இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்

11 தினங்கள் நடைபெறும் இந்த திருவிழாவின் உற்சவமானது தினமும் காலை 9மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 11 மணியளவில் நிறைவு பெறுவதாகவும் அதே போன்று மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நேர உட்சவமானது 6.30 மணிவரை நடைபெறுவதாகவும் எனவே அடியார்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ற)

## மாணிக்கவாசகர் குருபூசை

தென்மராட்சி, ஜூன் 22
மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இந்து மாமன்றத்தின் மாணிக்கவாசகர் குருபூசைதின விழாஇன்று திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு வித்தியாலய நூற்றாண்டு விழா மண்டபத்தில் இடம்பெறும்.

மன்றத் தலைவர் செ.ஜெனார்த்தனன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி அலுவலர் திருமதி ச.யுதானந்தசிவமும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய சைவ சமய பாட ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கமும் கௌரவ விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் அலுவலர் சி.அபராஜிதனும் கலந்து கொள்வர்.

ஆசிரியர் த.நாகேஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (ற-9)


**தேவை**

**SINGLE PHASE**

கருவாடு அரைக்கும் இயந்திரம் தேவை.

தொடர்பு: 021 205 1861,
071 654 7086 (சி.17700) (45.3.7)

**வேலையாள்கள் தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவர்களும் ஆண் பெண் இருபாலாரும் தேவை. மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:077 2026 295

**மணமகள் தேவை**

யாழ் இந்து ,மலேசியா வாசியான மண மாகாத பொறியியலாளராகக் கடமை யாற்றும் 56 வயதுடைய மண மகனுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.

தொடர்பு: pnmal1@yahoo.co.uk
T.P: 006 012 2822 117
076 591 2520 (தற்காலிகம்)

**மேசன்மார் தேவை**

சங்கென் ஸ்தாபனத்தின் கைதடி வேலைத்தளத்திற்கு திறமை மிகுந்த மேசன்மார், Tilers தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். ரூபா 2000 வரை தங்குமிட வசதியுண்டு (கொம்பனி நேரடி சம்பளம்)

விவரங்களுக்கு: 071 534 9942
071 238 7076


## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஸ்கான் வசதி

யாழ்ப்பாணம், ஜூன் 22
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இன்று காலை 8 மணி தொடக்கம் ஸ்கான் படப்பிடிப்பு இடம்பெறவுள்ளதனால் தேவையானவர்கள் வந்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று வைத்தியசாலைத் தரப்பு அறிவித்துள்ளது. ஸ்கான் செய்வதற்கென ஏற்கனவே பதிவு செய்தவர்களும் மற்றும் ஸ்கான் செய்ய வேண்டிய தேவைஉள்ளவர்களும் வந்து அதனைப்பெற்றுக் கொள்ளலாம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)


## வலிகாமம் வடக்குபிரதேசசபை, காங்கேசன்துறை. மல்லாகம்
## வேலைக்கான கேள்வி அறிவித்தல் – 2015

சபை நிதி மூலம் மேற்கொள்ளப்படும் வேலைக்கான கேள்விகள் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது. கீழ்க் குறித்த வேலைக்கான கேள்விவைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

- கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி **22.06.2015–06.07.2015** பிப 03.00 மணிவரை.
- கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி **07.07.2015** நப 12.00 மணிவரை.
- கேள்விகள் திறக்கப்படும் திகதி **07.07.2015** பிப 02.00 மணிக்கு.

கேள்விகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்கக்கூடியவாறு இணைப்பிரதிகளில் (Original ,Duplicate)தயாரிக்கப்பட்டு இரண்டு பிரதிகளையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு "**தவிசாளர்,வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, காங்கேசன்துறை. மல்லாகம்** " என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

1. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
2. இக்ராட் (ICTAD)வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியகணியவியலாற்றலையும் (SLS:573:1982) நியம அளவீட்டு முறைமையையும் அறிந்திருத்தல் வேண்டும்.
3. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD)பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. மேலதிக விவரங்களை வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | அண்ணளவான மதீப்பிட்டுத் தொகை (மில்லியன்) ரூபா | இருக்கவேண்டிய ஆகக் குறைந்த (ICTAD) தரம் | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | வாகனத்தரிப்பிடம் அமைத்தல் வறுத்தலைவிளான், தெல்லிப்பழை. | 0.65 | C 9 அல்லது அதற்குமேல் | இரண்டு மாதங்கள் | 9.000.00 | 1.000.00 |

வலிகாமம் வடக்கு, பிரதேசசபை,
காங்கேசன்துறை (மல்லாகம்)
22.06.2015

(சி.18335) (45.6.7)

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

**விவசாயமும் கமநலசேவைகளும், கால்நடைஅபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல், உணவு வழங்கலும் விநியோகமும், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்திஅமைச்சு, வடமாகாணம்**

## பெறுகை அறிவித்தல்
## 2015/2016 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவைக்கான விலைமனுக்கோரல்

தலைவர். மாகாண அமைச்சுப் பெறுகைக்குழு அவர்களினால் வட மாகாண விவசாய அமைச்சுக்குட்பட்ட காரியாலயங்களுக்கான ஓகஸ்ட் 2015 தொடக்கம் ஓகஸ்ட் 2016 வரையான காலப்பகுதிக்குரிய பாதுகாப்புச் சேவையை (Security Service) பின்வரும் மாவட்டங்களில் வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து தனித்தனியான பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | பாதுகாப்புச் சேவை வழங்க வேண்டிய மாவட்டம் | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை | மீளளிக்க முடியாதவைப்பு | மீளளிக்கக் கூடியவைப்பு |
|---|---|---|---|---|
| NP/06/03/SEC/2015/01 | யாழ்ப்பாணம் | 29 | 500.00 | 100,000.00 |
| NP/06/03/SEC/2015/02 | வவுனியா | 29 | 500.00 | 100,000.00 |
| NP/06/03/SEC/2015/03 | கிளிநொச்சி | 19 | 500.00 | 75,000.00 |
| NP/06/03/SEC/2015/04 | மன்னார் | 13 | 500.00 | 50,000.00 |
| NP/06/03/SEC/2015/05 | முல்லைத்தீவு | 20 | 500.00 | 80,000.00 |

1) சேவை வழங்குநர்கள் பாதுகாப்புச் சேவையை வழங்குதலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒருநபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும். அத்துடன் சேவை வழங்குநர்கள் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் வடக்கு மாகாணத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன். சேவையை வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
3) சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை இல 04 புளூடிலேன் அரியாலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வட மாகாண விவசாய அமைச்சு அலுவலகத்தில் 23.06.2015 தொடக்கம் 13.07.2015 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் முப 9.00 மணிமுதல் பிப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
4) பெறுகை ஆவணங்கள் 14.07.2015 **ஆம் திகதி பிப 2.00 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியவாறு "**தலைவர். மாகாண அமைச்சு பெறுகைக் குழு. விவசாய அமைச்சு. வடமாகாணம். இல 04. புளூடிலேன். அரியாலை. யாழ்ப்பாணம்**". என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது வடமாகாண விவசாய அமைச்சு அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5) சகல பெறுகைகளுடனும் கேட்கப்பட்ட பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.
6) கிடைக்கப் பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**மயூற்றிக் டிறஞ்சன்**
**தலைவர்.மாகாண அமைச்சு பெறுகைக்குழு.**
**விவசாய அமைச்சு. வடமாகாணம்.**
**04.புளூடிலேன் அரியாலை**
**யாழ்ப்பாணம்.**
**திகதி : 22.06.2015**

(சி.16327) (45.3.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் ஒருவர் காயம்

அளவெட்டி, ஜூன் 22

நேற்று முன்தினம் பி.ப. 2.30 மணியளவில் தெல்லிப்பழை அம்பனை வீதியில் அம்பனைச் சந்திக்கும் மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் கொல்லங்கலட்டி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கிச்சென்று கொண்டிருந்த தனியார் போக்குவரத்து மினிபஸ் மீது பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் பயணம்செய்த காங்கேசன்துறை பொலிஸ் நிலைய பொலிஸ் வாகனச் சாரதியான பொன்னியாஸ் திலகாகுரூஸ் (வயது–49) என்பவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ற–36)

# எரியூட்டப்படும் குப்பைகளால் பொதுமக்கள் கடும் அவஸ்தை

மட்டக்களப்பு, ஜூன் 22

மட்டக்களப்பு ஏறாவூர் நகரப் பிரதேசத்தில் கடந்த ஒரு வாரகாலமாக கழிவுகள் மற்றும் குப்பைகள் எரிக்கப்படுவதால் ஏற்படும் புகை மூட்டம் காரணமாக பிரதேசவாசிகள் அவஸ்தைப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

ஏறாவூர் வாவிக் கரையோர குப்பை மேடுகள் தீ வைக்கப்பட்டதன் காரணமாக, ஏறாவூர் நகர பிரதேசத்தின் வாவிக்கரையோரப் பகுதி புகை மூட்டத்தினால் சூழப்பட்டுள்ளது. இதன் விளைவாக அப் பிரதேசத்திலுள்ள குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வாவிக் கரையோரப் பகுதிகளில் கொட்டப்படும் குப்பைகள் காரணமாக இயற்கை வளங்களும் பாதிக்கப்படுவதாக தெரிவந்துள்ளது.

குப்பைகளை கொட்டுவதற்கு பிரத்தியேகமான இடம் ஒதுக்கப்படாமை பெரும் குறைபாடாக காணப்படுவதாக ஏறாவூர் நகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.எம். நஸீர் தெரிவித்தார்.



ஏறாவூர் நகர பிரதேச செயலக நிர்வாகத்துக்குட்பட்ட நிலப்பரப்புக்குள் காணிப் பிரச்சினைகளைக் கையாளக்கூடிய அதிகாரம் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்படாமலிருப்பது கவலைக்குரியது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ற)

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை ஜோசப்சௌந்தரநாயகம்



யாழ்ப்பாணம், சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, இறம்பைக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜோசப்சௌவுந்தரநாயகம் அவர்கள் 13.06.2015 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மேரியோசேப்பின் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு திருமதி தேவநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகனும் மேரிறெஜீனா(பபா) அவர்களின் அன்புக் கணவரும் விஜீத்தா (டுபாய்), விமல்ராஜ்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராணி, கிறேஸ், புனிதம், மரியதாஸ் தங்கராஜா, யோகன் ஆகியோரின் மூத்த சகோதரரும் சுதர்சன், பமிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் புஸ்பம், பிளசம், அரியநாயகம், இமெல்டா(பேபி), ராஜி, வசந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெவோன், ஏரன் ஆகியோரின் அன்புப் பேரனும் சுரேஸ், ரமேஸ், காஞ்சி(கனடா), லங்கேஸ் (கனடா), பிரதீஸ், வினோ, நிறோஷ், சதீஸ், டயானா, டொறின், செறின், பாஸ்கரன்(இத்தாலி) தினேஷ் ஆகியோரின் மாம னாரும் ஆனந் (கனடா) நிலக்ஷன், நிருஷன், ஜெனி, பிறாயன் (ஜேர்மனி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2015) திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக இறம்பைக்குளம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

தகவல்: சகோதரர்கள்,
பெறாமக்கள்.

### திருமதி விக்ரோறியா(சொர்ணம்) இராசையா

(உரிமையாளர் ஜெமினி சலூன் யாழ்ப்பாணம்)



மண்ணகம் 30.03.1918 | விண்ணகம் 19.06.2015

99/9, புகையிரத ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்ரோறியா (சொர்ணம்) இராசையா 19.06.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அவுரார் அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான இராசம்மா, ஜோசேப்பு, செல்லம், ஆசீர்வாதம், தம்பிமுத்து ஆகியோரின் சகோதரியும் அழகரெட்ணம் (அழகு - முன்னாள் ஊழியர் நீர்விநியோகப்பகுதி யாழ்) குலரெட்ணம்(குலம் - பிரான்ஸ்), பாலரெட்ணம்(பாலா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும்திரேசா(சவுதா), தனம்(பிரான்ஸ்), பற்றீசியா(சாந்தா - பிரான்ஸ்)ஆகியோரின் அன்பு மாமியும் அனித்தா - பப்பா(கனடா) றினித்தா, சுனித்தா - பிரபு, கெவின் -. அனு, காலஞ்சென்ற மேவின் மற்றும் துஜித்தா - ஜோன்சன்(ஜேர்மனி), நர்மதா - பயர்சன், நர்மதன், தர்சனா, நிருஜன், றெக்ஷன், கிப்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஏரியானா, பிரியானா, ஜாக்சிலின், ஆரோன், ஐரோன், ஏனோஸ், ஏதர் ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான முத்து, அருளப்பு, மரியம்மா, சவிரிமுத்து, தவமணி, ரோசம்மா, மரியம்மா, பொன்னம்மா, சவீனம்மா, இராசம்மா, இராசமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(23.06.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் யாழ்அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
அழகு - 077 189 4474
குலம்(பிரான்ஸ்) - 061 522 6497
பாலா(பிரான்ஸ்) - 0033 6097 07...
077 932 8701

99/9,புகையிரத ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(61197) (3.6.9)

# கூட்டுச் செயற்பாட்டின் தொனியாக சனசமூக நிலையம் அமைய வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு



மாங்குளம், ஜூன் 22

சனசமூக நிலையமானது அங்கத்தவர்களின் சிந்தனைகளுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டு விடாது சமூக மட்டத்திலுள்ள சமூகப் பாதுகாப்பு, பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவற்றை உள்வாங்கி ஒரு கூட்டு செயற்பாட்டின் தொனியாக அமைய வேண்டும் – என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா, மன்னார் வீதியில் அமைந்துள்ள வேப்பங்குளம் பாரதி சனசமூக நிலைய திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்கள், நூல் நிலையங்கள், விளையாட்டுக்குழு ஒன்றியங்கள் என பல பரிமாணங்களில் மக்கள் நன்மைபெறக்கூடிய நிலையங்கள் பல திறக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் பல நிலையங்கள் மிகச்சிறப்பாக இயங்குகின்ற போதும் சில பெயரளவில் வெறும் கட்டடங்களுடன் நின்றுவிடுகின்றன.

உண்மையிலேயே ஒரு கிராமத்தின் அபிவிருத்தியானது அக்கிராமத்தின் சனசமூக நிலையச் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது என்று கூறலாம். சனசமூகநிலையங்கள் சிறப்பாக இயங்குவதற்கு நிதி மூலதனமே முதன்மையானது என்று எம்மிடையே ஒரு தவறான கருத்து நிலவுகின்றது.

எதற்கெடுத்தாலும் மாகாண சபையிடமிருந்து கிடைக்கும் நிதி மூலம் கிடைக்கவில்லை அல்லது நகர சபையில் இருந்து நிதி மூலம் கிடைக்கவில்லை. ஆகையால் ஒன்றும் செய்யமுடியவில்லை எனக் கூறுகின்றனர். நாம் வேண்டுமெனில் வலுவுள்ள சனசமூக நிலைய அங்கத்தவர்களாக மாறி எமது கிராமத்திலுள்ள மூலதனங்களை அத்திபாரமாக வைத்து சனசமூக நிலையங்களை திட்டமிட்ட வகையில் முன்னேற்ற முடியும்.

பிரதேச ரீதியாக அடையாளம் காணப்படும் பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்வுகளை அல்லது ஆலோசனைகளையும் விவாதித்து சமூக மட்டத்தில் தீர்க்கக்கூடிய விடயங்களை சமூக மட்டத்திலும் ஏனையவற்றை பிரதேச மட்டங்கள் அல்லது மாகாண மட்டங்களுக்கு எடுத்துரைப்பதன் வாயிலாகவும் மாகாண நல்லாட்சியில் பொறுப்புடன் பங்களிக்க முடியும்.

மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களின் குரலாக மாகாண சபைகள் செயற்படுவதற்கு இத்தகைய சனசமூக நிலையங்களின் அர்ப்பணிப்புடனான சேவைகள் அவசியமாகும். சனசமூக நிலையங்கள் என்பது வெறும் வாசிகசாலைகளை மட்டும் நடத்துவது அல்ல என்பதை நாம் முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பல சனசமூக நிலையங்கள் வாசிகசாலைகள் நடத்துவதுடன் மட்டும் தமது பணி நிறைவடைந்து விட்டது என்ற ஒரு தவறான கருத்தைக் கொண்டிருக்கின்றனர்.

தமது சமூகம் சார்ந்த அல்லது கிராமம் சார்ந்த ஆற்றல், ஆளுமை, திறன் விருத்தி என்பவற்றை அடையாளம் கண்டு அவற்றை விருத்தி செய்வதற்கான ஒரு களத்தை அமைத்துக் கொடுப்பதே சனசமூக நிலையத்தின் பாரிய பொறுப்பாகும் அப்போதுதான் சனசமூக நிலையங்கள் பயனுறுதி மிக்க சிறந்த நிலையங்களாக மாற்றப்படும். ஒவ்வொரு கிராமமும் சுத்தத்துடனும் சுகாதாரத்துடனும் வைத்திருக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இதை ஒவ்வொரு சனசமூக நிலையமும் உறுதி செய்து கொள்ளலாம்.– என்றார். (ற–402)

## மரண அறிவித்தல்

### கந்தையா இராசதுரை



யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் 4ஆம் கட்டை பூநகரியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா - இராசதுரை 19.06.2015 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - கதிராசி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பர் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், கமலாதேவியின் பாசமிகு சகோதரரும் விஜயராஜா (ஜேர்மனி) காலஞ்சென்ற விஜயகுமார் (பூநகரி), விமலேஸ்வரன்(வவுனியா) காலஞ்சென்ற ரவீந்திரன் (பூநகரி), விக்னேஸ்வரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வளாஜாதேவி (கனடா) காலஞ்சென்ற இராஜேஸ்வரி(பூநகரி), சிவரஞ்சினி(பிரான்ஸ்), சசிகலாதேவி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் Dr.விதுனா(கனடா), துவாரகா, மிதுர்சா, துருபரன்(பூநகரி), தனுஜா(பிரான்ஸ்), தக்ஷிகா(பிரான்ஸ்), சதுர்சன், மதுசா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேரனும் வல்லிபுரத்தின் (முள்ளியவளை)அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈனச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ஆம் கட்டை, நெடுங்குளம், பூநகரி.
077 644 8882

(61166) (3.6.9)

தகவல்:
குடும்பத்தினர்.

## கிரிக்கெட் விளையாடிய சிறுவன் காயம்

அளவெட்டி, ஜூன் 22

நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் குளமங்கால் மல்லாகம் பகுதியில் கிரிக் கெட் விளையாடும் போது பந்தை ஓங்கி அடிக்க முற்பட்ட வேளையில் கால் இடறி கீழே விழுந்ததால் தோள் மூட்டுப் பகுதியில் முறிவு ஏற்பட்ட நிலையில் அதே இடத்தைச் சேர்ந்த டக்ளஸ் (15 வயது) என்பவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற–36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுளை ரயில் தடம்புரண்டது

## மலையகத்துக்கான ரயில் சேவை பாதிப்பு



கொழும்பு, ஜூன் 22

கொழும்பிலிருந்து பதுளை வரை சென்ற ரயில் ஹற்றன் மற்றும் ரொசல்ல ஆகிய புகையிரத நிலையத்துக்கு இடையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தடம் புரண்டுள்ளது.

இதன் காரணமாக மலையகத்துக்கான புகையிரத சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தது.

இதனால் புகையிரதத்தில் பயணித்த பயணிகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றொரு புகையிரதத்துக்கு மாற்றப்பட்டனர்.

புகையிரத பாதையை சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி புகையிரத கட்டுப்பாட்டு நிலையம் தெரிவிக்கின்றது. (ற)

# சிறுமி மீது துஷ்பிரயோக முயற்சி: வயோதிபருக்கு மறியல்

நெல்லியடி, ஜூன் 22

வடமராட்சி வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் 9 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டில் 65 வயதுடைய சந்தேகநபர் வல்வெட்டித்துறை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நகர் யாழ்.சிறுவர் நீதி மன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

குறித்த சிறுமி வீதியால் சென்று கொண்டிருந்தபோது வழிமறித்த வயோதிபர் சிறுமியிடம் 100 ரூபாவை கொடுத்த பின் தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டு சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றார் என்று சந்தேக நபர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சிறுமி அங்கிருந்து தப்பிச்சென்று பெற்றோருக்கு நடந்ததை தெரிவித்ததை அடுத்து குறித்த சிறுமியை அழைத்து கொண்டு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

உடனடியாக பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து யாழ். சிறுவர் நீதிமன்றில் முற் படுத்தினர் வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிவான் அவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ற-109)

# கல்விக் கண்காட்சி

மாங்குளம், ஜூன் 22

யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் கல்வி கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் முதல்வர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ற-422)


# வவுனியாவில் வீடு ஒன்று எரிந்து நாசம்

வவுனியா, ஜூன் 22

வவுனியா பட்டிகுடியிருப்பு பகுதியில் வீடொன்று எரிந்து நாசமாகியுள்ளது.

இதுகுறித்துத் தெரிவித்த வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பணிப்பாளர் ரின்.என்.சூரியராஜ், நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு வவுனியா வடக்கு பகுதியில் உள்ள பட்டிகுடியிருப்புப் பகுதியில் சண்முகநாதன் கணேசமூர்த்தியின் வீட்டில் வீட்டார் விளக்கு ஏற்றிவிட்டு தமது வீட்டு வேலைகளில் ஈடுபட்ட சமயம் விளக்கு திடிரென தீப்பற்றி மண்ணெண்ணெய் போத்தல் ஒன்றுடன் சேர்ந்து பற்றியுள்ளது. அதை யடுத்து வீடு முற்றாக எரிந்து நாசமாகியது. அதனால் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுள்ள பொருள் இழப்பு ஏற்பட்டது. - என்றார். (ற-402)

# வயோதிபரின் சடலம் மீட்பு



மன்னார், ஜூன் 22

மன்னார் பாப்பாமோட்டை பகுதியில் வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் காலை சடலம் மீட்கப்பட்டுள்ளதாக அடம்பன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 73 வயதான ஆரோக்கியம் பேதுரு என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அடம்பன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாப்பாமோட்டை பகுதியில்அமைந்துள்ள கள்ளுத் தவறணையில் குறித்த வயோதிபர் காவலாளியாக கடமையாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த வயோதிபர் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. குறித்த சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் அடம்பன் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இருவரை கைதுசெய்துள்ளதோடு, மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் மகேந்திரன் சசீந்திரன்

மண்ணில் 13.10.1984

விண்ணில் 22.06.2009

புன்னகையும் பூமுகமும் கொண்ட அன்பு மகனே !
நீ பேசிய வார்த்தைகளும் நாம் சேர்ந்து சிரித்த நாள்களும்
நினைவுகளும் என்றும் எம் கண்களுக்குள் கண்ணீராக !
வாழ்க்கையின் ஏதேனும் சில தருணங்கள்
நமக்கு உணர்த்தும் நாம் தவறவிட்ட உறவுகளை
காலம் உணர்த்தும் போதுதான் கண்கள் கலங்கும்
நாம் வாழும் காலங்களோ - உன்னை
எண்ணி அழுவதற்கு என்றாகிப் போனது
ஆனால் நீயோ..... எம் மனதில்
சித்திரமாய் மட்டுமல்ல சரித்திரமாயும் வாழும் - உன்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

31, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்(சாதுஜன் பென்சி)

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி கிறிஸ்துராஜா கௌதினி

மண்ணில் 07.02.1986

விண்ணில் 22.06.2014

செல்லுமிடம் சொல்லிவிடும் கண்மணியே
சென்ற இடம் சொல்லவில்லை - எம்மிடமே
சென்றபின்னும் வந்திடுவாய் நம் அருகே
சென்ற நீ திரும்பவில்லை எங்கடியோ
பெயர் சொல்லி அழைத்து நின்றோம் ஆசையுடன்
இன்று பெயர் சொல்ல நீயில்லை வந்துவிடு
நாம் எழுவதற்கு நீவேண்டும் வந்துவிடு.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

12, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## 33 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



அமரர்
ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ்
(றீகன்)

மலர்வு 22.06.1982

உதிர்வு 14.11.2010



வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப் பிள்ளையாக வாழ்ந்தவேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றோம்
ஆறவில்லை எம்மனம் காயவில்லை எம் ஈரவிழிகள்
கனத்த இதயமுடன் இந்நாளில் கண்ணீருடன்
வாழ்த்துகின்றோம் உம்மை

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

ஜஸ்ரின் குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் இராசம்மா (இரத்தினம்) தாமோதரம்பிள்ளை

தோற்றம் 18.07.1922

மறைவு 24.05.2015

கடந்த 24.05.2015 இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் இராசம்மா(இரத்தினம்) தாமோதரம்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.06.2015) செவ்வாய்க்கிழமை காலை5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் சபிண்டீகரணக் கிரியைகளும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும்.

தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சபிண்டீகரண, மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்

அத்தாய்,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(59755)
(45.5.6.3)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா

கொழும்பு, ஜூன் 22

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பி.ப 1மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் பொ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதமவிருந்தினராக, கல்லூரியின் பழைய மாணவனும், வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளருமான இ.இரவீந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர், திருமதி உ.யசோதாவும், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ஆசியுரையை கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளார். பரிசளிப்பு விழாவில்பாடசாலைமாணவர்களின்கலைநிகழ்வுகளும்நடைபெறவுள்ளன. (ற)



வட்டுக்கோட்டை, உடுக்கியவளை மகாகணபதிப் பிள்ளையார் கோவிலில் இயங்கும் இந்து தர்ம சபாவின் அனுசரணையில், பௌராணிகர்கள் மற்றும் ஓதுவார் மூர்த்திகள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். அதேவேளை, வட்டு. கார்த்திகேய வித்தியாலயத்தில் பயிலும் சுமார் நூற்றைம்பது மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மகா கணபதிப்பிள்ளையார் கோயிலில் அன்னதானப் பணியும் மேற்கொள்ளப்பட்டது. (அ)


சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பதிவு இல. J/15 94 பதிவு திகதி:/11.03.1972

## பதவி வெற்றிடம்

01. பதவி - விற்பனை உதவியாளர் (01)

குறியீட்டு இலக்கம் : 308/17 (66/2006 இன் படி)

சம்பள அளவுத்திட்டம் : 8950-65x10-70x10 - 10300.00

வயதெல்லை : 18-45 வரை

பால் : ஆண்

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ்

அல்லது

(ஆ) 08 ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (3) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

விண்ணப்ப முடிவுதிகதி: 06.07.2015

குறிப்பு:

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "விற்பனை உதவியாளர் (308/17) பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு தலைவர் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் டச்சு வீதி,சாவகச்சேரி எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
சி.பரராசசிங்கம்,
தலைவர். (சி.18346) (45.6.7)

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்,
டச்சு வீதி, சாவகச்சேரி.


# மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

காரைநகர், ஜூன் 22

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் குருபூசை நிகழ்வு இன்று திங்கட்கிழமை ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற உள்ளது.

ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில் காலை 7 மணி முதல் திருவாசக முற்றோதலும், நண்பகல் 11.30 மணிக்கு மணிவாசகப் பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனைகளும் பி.ப. 3.30 மணிக்கு சபையின் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் மணிவாசகர் விழாவும் நடைபெற உள்ளன.

இந்த விழாவில் மணிவாசகர் குருபூசையை ஒட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் முதலிடங்களைப் பெற்ற மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெற உள்ளதுடன் சிறப்புச் சொற்பொழிவினை சிம்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் நிகழ்த்த உள்ளார். மாணவர்களுக்கான பரிசில்களை பேராசிரியர் வே.தர்மரட்ணம் வழங்குவார். (ற-250)

# சுகாதாரமற்ற இனிப்புப் பண்டம்: ரூ.40,000 அபராதம்

மாங்குளம், ஜூன் 22

சுகாதாரமற்ற முறையில் இனிப்புப் பண்டங்களை விற்ற நால்வருக்கு நாற்பதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. புளியங்குளம் புதூர் நாகதம்பிராம் கோவிலின் வருடாந்த பொங்கல் விழாவின் போது சுகாதாரமற்ற முறையில் இனிப்புப் பண்டங்களை விற்ற நால்வருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த கிழமை நடைபெற்ற புதூர் நாகதம்பிரான் கோவிலின் வருடாந்த பொங்கல் விழாவின் போது வவுனியா வடக்கு சுகாதார பணிமனையால் மேற்கொள்ளப்பட்டுள்ள உணவு கையாளும் இடங்களின் மீதான பரிசோதனையின் போது சுகாதார சீர்கேட்டுடன் இனிப்புப் பண்டங்களை விற்ற நால்வரை பொலிஸாருடன் சுகாதாரப் பரிசோதகர்கள் கைது செய்தனர். அவர்களை வவுனியா நீதிமன்றில் முற்படுத்தியபோது குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதையடுத்து குற்றவாளிகள் நால்வருக்கும் தலா பத்தாயிரம் ரூபா வீதம் தண்டப்பணமாக விதிக்கப்பட்டதுடன் அவ் இனிப்புப் பண்டங்களை நீதிமன்றில் அழிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ற)


## பொது அறிவித்தல்

இல.134, ஜெயந்தி நகர், கிளிநொச்சி, இலங்கை எனும் முகவரியிலுள்ள கே.கே.கே. அப்பரல்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் (KKK Apparels (pvt) Ltd) சில இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் என்பன லான்ட் ஓ'லேக்ஸ் (Land O'Lakes) நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும் VEGA/BIZ+ வியாபார அபிவிருத்தித் திட்டத்தின் வெளிப்படையான எழுத்து மூலமான சம்மதமின்றி விற்கப்படவோ அல்லது உரிமை மாற்றம் செய்யப்படவோ முடியாதென, பொது மக்களும் மற்றும் ஆடை உற்பத்தி கைத்தொழில் பிரதிநிதிகளும் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். ஒரு அரச- தனியார் பங்குடமையின் பகுதியாக, ஓர் எழுத்து மூலமான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் கீழ், அதன் ஆடை உற்பத்தி வசதிகளை விரிவுபடுத்துவதற்கு கே.கே.கே. அப்பரல்ஸிற்கு பொருட்களாக நன்கொடையளிக்கப்பட்ட, இனங்காணப்படக் கூடிய மற்றும் பட்டியல்படுத்தப்பட்ட சொத்துக்கள், 33 சிங்கர் கைத்தொழில் தையல் இயந்திரங்கள், ஒரு சிங்கர் அலங்காரத் தையல் (Embroidery) இயந்திரம், 14 துணை உதவி இயந்திரங்கள், ஒரு கேர்லோஸ்கர் 62.5 கி. வோ மின்பிறப்பாக்கி (Kirloskar 62.5 KV), ஒரு டிமோ டாடா லொறி, மற்றும் ஒரு லங்கா அசோக் லேலான்ட் போக்குவரத்துப் பேருந்து என்பவற்றை உள்ளடக்குகின்றன. அத்தகைய அனைத்து சொத்துக்களும் சர்வதேச நன்கொடை நிதிகளால் நிதியளிக்கப்பட்டவை என்பதுடன் கிளிநொச்சி சமூகத்திலுள்ள 100க்கும் மேற்பட்ட தனிப்பட்டவர்களுக்காக அர்த்தமுள்ள வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு மட்டும் உபயோகிக்கப்பட வேண்டிய பொதுப் பொருட்களாக கவனத்தில் கொள்ளப்படும். நன்கொடையாக அளிக்கப்பட்ட அனைத்து பொருட்களும் வற் (VAT Free) வரியின்றி இலவசமாக கொள்வனவு செய்யப்பட்டவை என்பதற்கான விசேட கவனம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். விற்பனை, உரிமை மாற்றம், அல்லது சொத்துக்களின் கொள்வனவு இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கணிசமான வரிக் கடப்பாட்டை ஏற்படுத்தலாம். இந்த அறிவித்தல் பற்றிய மேலதிக விசாரணைகளுக்கு 011-7391890 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.



## தொழிலாளர்கள் தேவை

சோடாப் போத்தல்கள் ஏற்றி இறக்குவதற்கு பிற்பகல் ஒரு மணியிலிருந்து இரவு10.00மணி வரை வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் தேவை. நாள் சம்பளமாக 900/= வழங்கப்படும்.கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
முஸ்லிம் கல்லூரி வீதி, ஒட்டுமடம்.
தொடர்பு:021 222 5595



சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலய ஆனி மஹோற்சவ பூரணைத் தீர்த்தமும் தீ மிதிப்பு விழாவும் - 2015

அம்பாள் அடியார்களே! மன்மத வருடம் ஆனிமாதம் 07 ஆம் நாள் இன்று(22.06.2015) திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பித்து 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாள்களும்அம்பாள் உள்வீதியுலா வந்து அருள்பாலித்தலை அடியார்கள் கண்டு பேரானந்தப் பெருவாழ்வு வாழ்க.

01.07.2015 புதன்கிழமை தீ மிதிப்பு வைபவமும், கொடியிறக்கமும் தீர்த்தமும் இடம்பெறும்.

வழிபாட்டிற்குரிய பொருள்கள் அனைத்தும் கொடுத்து அருள் பெறுவீர்களாக.

ஆலய ஞானகுரு இந்திரன்ஐயா
ஆலயத் தொண்டர் சபை.
(61190)(3.6.9)



அக மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது கல்லூரி அதிபர்
உயர்திரு
முருகேசு சத்தியசீலன்
(SLPS - 1)
அவர்கள் பதவியுயர்வு பெற்று இன்று ஊர்காவற்றுறை கல்விக்கோட்டப் பணிப்பாளராக பதவி ஏற்கும் அவர்களை மனதாரப் பாராட்டுவதோடு, மேன்மேலும் உயர்வுகளைப்பெற்று உயரிய சேவை ஆற்ற இறை அருள் ஆசிவேண்டி வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/புங்குடுதீவு கமலாம்பிகை
கனிஷ்ட மகா வித்தியாலயம்


# லிப்கோ பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஜூன் 22

தென்மராட்சி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின்(லிப்கோ ) பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் மு.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு முதன்மை விருந்தினராக வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும் கலந்து கொண்டனர்.

நடப்புவருடநிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் செ.சுப்பிரமணியம், உப தலைவர் உ.பரமநாதன், செயலாளர் பா.பேரின்பன், உறுப்பினர்களாக பதவி வழியாக சாவகச்சேரி கால்நடை மருத்துவர் க.இரகுநாதன் மற்றும் கந்தசாமி யுகந்தினி, பொபிரசாந்தன்சிஜெய சங்கர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுண்ணறிவு சோதனையில் மனிதர்களை வென்ற கணினி

சமகாலத்தில் பாவிக்கப்படும் கணினிகள் நான்காவது சந்ததியைச் சார்ந்தவை என்பதுடன், ஐந்தாவது சந்ததியாகிய செயற்கை நுண்ணறிவு படைத்த கணினிகளை உருவாக்கும் ஆய்வுகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றமையும் அனைவரும் அறிந்ததே.

இவ்வாறிருக்கையில் நுண்ணறிவு சோதனையில் மனிதர்களுக்கு சவால் விடக்கூடிய அளவில் கணினி புரோகிராமை சீன ஆராய்ச்சியாளர்கள் தயாரித்துள்ளனர்.

ஆழமான கற்றல் (Deep Learning) எனும் நுட்பத்தைப் பிரயோகித்து உருவாக்கப்பட்ட இந்த புரோகிராமின் ஊடாக சிறந்த நுண்ணறிவு கொண்ட வடிவமைத்தலுடன், மூன்று தடவைகள் மேற்கொள்ளப்பட்ட நுண்ணறிவு சோதனையில் இரு தடவைகள் மனிதனை தோற்கடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேகத்தடுப்புக்கள் தொடர்பில் புதிய தகவல்

வாகனங்களில் மிகவும் வேகமாகப் பயணிக்கும் போது வீதியில் போடப்பட்டுள்ள வேகத்தடுப்புக்களை கடப்பதற்கு போதியளவு கட்டுப்பாடு இல்லாமையினால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.


இதனை உணர்ந்த ஹிண்டாய் நிறுவனம் இவ்வாறான வேகத்தடுப்புக்கள் இருப்பதை முன்கூட்டியே தெரியப்படுத்தும் முறைமையை உருவாக்கியுள்ளது.

இதனால் குறிப்பிட்ட இடங்களில் வேகத்தைக் குறைத்து பாதுகாப்பாக பயணிக்க முடியும்.

கமரா, ஜி.பி.எஸ்., சென்சார் என்பவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த முறைமையின் ஊடாக இரவு நேரங்களிலும் வேகத் தடுப்புக்களை துல்லியமாக இனம்கண்டு பாதுகாப்பாக பயணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.




# தொலைக்காட்சி அலைவரிசைகளை மாற்ற நவீன தொழில்நுட்பம்



தொலைக்காட்சிகளை தொலைவிலிருந்து இயக்கும் ரிமோர்ட் கென்ரோலர்களுக்கு விரைவில் விடை கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

அதாவது BBC நிறுவனமானது புதிய வகை ஹெட்செட் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றது.

இந்த ஹெட்செட்களினால் மனிதர்களின் மூளையின் ரசனையை அறிந்து, அதற்கு ஏற்றாற்போல் தொலைக்காட்சிகளின் அலைவரிசைகளை மாற்ற முடியும்.

இதற்காக லண்டனை தளமாகக் கொண்ட விஞ்ஞானிகள் குழு ஒன்று முழுவீச்சில் செயற்பட்டு வருகின்றனர்.

# சுகாதாரத் தொண்டர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

அம்பாறை, ஜூன் 22

கல்முனை பிராந்திய வைத்திய சாலைகளில் 15 வருடங்களாக சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றுபவர்களை நிரந்தரமாக்குவதற்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் நடவடிக்கை எடுத்துள்ளதாக, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் சுகாதாரத் தொண்டர்கள் சங்கத்தின் தலை வருமான ஐ.எல்.எம். நஸீர் தெரி வித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளிலும் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திலும் சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றும் சுகாதாரத் தொண்டர்கள் சங்கத்தின் மாதாந்தக்கூட்டம் நேற்று ஞயிற்றுக்கிழமை அட்டாளைச்சேனை டாக்டர் ஜலால்டீன் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றுகையிலேயே ஐ.எம். நஸீர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கல்முனைப் பிராந்தியத்தில் சுமார் 140 பேர் எவ்வித கொடுப்பனவுமின்றி வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக கடமையாற்றி வருகின்றார்கள். இவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதில் கடந்த அரசுகள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அதனால் நாங்கள் எவ்வித வருவாயுமின்றி பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம்.

சுகாதாரத் தொண்டர்களை நிரந்தரமாக்குமாறு கடந்த 16ஆம் திகதி கிழக்கு மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கோரிக்கைகளை விடுத்த போது, மிகவிரைவில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு வாக்குறுதியளித்துள்ளார். இது தொடர்பாக ஜனதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எங்களது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்த நியமனம் வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.– என்றார். (ற)

# கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாய்க்காலுக்குள் கவிழ்ந்தது

அம்பாறை, ஜூன் 22



சவளக்கடை மத்திய முகாம் வீதியின் ஆலயடிக்கு அருகே நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் சிறியரக டிப்பர் வீதியின் அருகிலுள்ள வாய்க்காலில் வீழ்ந்து மூழ்கியுள்ளதாக மத்தியமுகாம் பொலிஸார் தெரிவித்தனர்.

தெய்வாதீனமாக சாரதி மற்றும் டிப்பரில் பயணித்த இன்னொருவரும் உயிர் பிழைத்துள்ளனர். சாரதியின் கவனவீனம் காரணமாகவே டிப்பர் கட்டுப்பாட்டை இழந்து வாய்க்காலுக்குள் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சாரதிக்கு அருகில் இருந்தவர் ஆசனப் பட்டியணிந்திருந்ததால் தப்பிக்க முடியாது அவஸ்தைப்பட்டதாகவும் அதனையடுத்து பொதுமக்களின் முயற்சியினால் அவர் மீட்கப்பட்டு மத்தியமுகாம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு தெய்வாதீனமாக உயிர் தப்பியவர் மருதமுனையை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை மத்தியமுகாம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)


# மரண அறிவித்தல்

## திருமதி குணநாயகி மகாதேவா



அரியாலையைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 25, புறூடிலேனை வசிப்பிடமாகவும் கொண்ட Shorter மகாதேவா என்று அன்பாக அழைக்கப்பட்ட மகாதேவாவின் அன்பு மனைவி குணநாயகி 18.06.2015வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயரெட்ணம் (லண்டன்), மகேந்திரன் (லண்டன்), லோகேந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான புஸ்பராஜா, சவுந்தரநாயகி, துரைராஜா மற்றும் செல்வநாயகி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Michelle;Felly; ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கமலா, ஷண்முகநாதன், பாலசுப்பிரமணியம் மற்றும் சுகுணவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், Nesan, Selena, Roy, Evangeline, Murali, Krishna ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஜெயா (மகன் 076 640 5741 021 222 9815)

25, புறூடிலேன், அரியாலை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உலக யோகா தினத்தை முன்னிட்டு டில்லி ராஜபாதையில் யோகா பயிற்சி நடந்த அதே நேரத்தில் மத்திய அரச அலுவலகங்களிலும், இந்தியா முழுவதிலும் நேற்று யோகா பயிற்சி நடைபெற்றது.

# அகதிகளுக்கு ஆதரவு தெரிவித்து ஐரோப்பாவில் போராட்டம்







பெர்லின்,ஜுன் 22

சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு ஜேர்மனியின் தலைநகரான பெர்லினில் புகலிடம் தேடி வந்த அகதிகளை நாடுகடத்துவதற்கு எதிராக அகதிகளின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியின் எதிர்கட்சிகள் மற்றும்சிலசமூகநலஅமைப்புக்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள்நேற்று முன்தினம்மாபெரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் கலந்துகொண்ட ஒட்டுமொத்த நபர்களும் ஜேர்மனி மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குத் தஞ்சம் கோரி வரும் வெளிநாட்டு மக்களுக்கு தங்களுடைய ஆதரவு உண்டு எனக் கோஷம் எழுப்பினர்.

சுமார் 2 ஆயிரத்து 500 பேர் கலந்துகொண்ட அந்த ஊர்வலம் க்ரொயிட்ஸ்பேர்க்நகரிலிருந்து புறப்பட்டு பெர்லின் நகரின் மையத்தில் உள்ள பிராண்டன்பேர்க் பகுதி வரை சென்றது.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து அகதிகளை நாடு கடத்துவதற்கு எதிராக கோஷம் போட்ட அவர்கள், ஜேர்மனி நாட்டுக்கு புகலிடம் கேட்டு வரும் வெளிநாட்டினருக்கு தங்களுடைய ஆதரவு எப்போதும் உண்டு என உணர்ச்சி பொங்க கோஷம் எழுப்பினர்.

ஐரோப்பிய நாடுகளில் குடியேற முயற்சித்து மத்திய தரைக்கடலில் ஆயிரக்கணக்கானோர் இறந்ததற்கு இரங்கல் தெரிவித்த அவர்கள், உள்நாட்டு போர்களினால் பாதிக்கப்பட்டு வரும் மக்களுக்கு உடனடியாக தஞ்சம் அளிக்காதது ஏன் எனக் கேள்வி எழுப்பினர்.

ஜேர்மனி நாடு சுமார் 30 ஆயிரம் அகதிகளுக்கு புகலிடம் அளிக்க வேண்டும் என ஐ.நா. சபை வலியுறுத்தியுள்ளது. ஆனால், அந்த எண்ணிக்கை போதாது என்றும் ஜேர்மனி நாடு ஒரு மில்லியன் அகதிகளுக்கு தஞ்சம் அளிக்க வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

குறிப்பாக கிரேக்க நாடு கடன் தொல்லையில் அவதியுற்ற வரும் நிலையில், அந்த நாட்டைச் சேர்ந்த மக்கள் ஜேர்மனியில் தஞ்சம் கோரி வர வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அகதிகளுக்கு தஞ்சம் அளிக்கும் விவகாரங்களில் ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் விரைந்து செயற்பட வேண்டும் என்பதே போராட்டத்தில் கலந்துகொண்டவர்களின் ஒட்டுமொத்த கோரிக்கையாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சொத்துக்குவிப்பு வழக்கில் கர்நாடக அரசு மேல்முறையீடு

சென்னை,ஜுன் 22

முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் இன்று திங்கட்கிழமை கர்நாடக அரசு சார்பில் மேல்முறையீடு செய்யப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சொத்துக்குவிப்பு வழக்கில் பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் ஜெயலலிதா உள்ளிட்ட நால்வருக்கும் வழங்கிய தண்டனைகளை கர்நாடக உயர் நீதிமன்றம் கடந்த மாதம் அளித்த தீர்ப்பில் தள்ளுபடி செய்து, ஜெயலலிதாவை விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பில் கணக்கியல் பிழைகள் இருந்ததால் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகள் தெரிவித்தன.

நீண்ட இழுபறிக்கு பின்னர் கர்நாடக அரசும், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு முடிவு செய்வது என்ற முடிவுக்கு ஒப்புதல் அளித்தது.

அரச வழக்கறிஞர் ஆச்சாரியா தலைமையில், தயாரிக்கப்பட்டு வந்த மேல்முறையீட்டு மனு தொடர்பான பணிகள் முடிந்துவிட்ட நிலையில் இன்று உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



அந்த மனுவில், உயர் நீதிமன்ற தீர்ப்பிலுள்ள குளறுபடிகளை சுட்டிக்காட்டி, ஜெயலலிதாவை மக்கள் பிரதிநிதி என்ற அந்தஸ்தில் இருந்து தகுதி நீக்கம் செய்ய வேண்டும் எனக் கேட்கப்படவுள்ளது. இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டால், ஜெயலலிதா முதல்வர் பதவியில் இருந்து இறங்க வேண்டி வருவதோடு, ஆர்.கே.நகர் இடைத் தேர்தலிலும் அவர் போட்டியிட முடியாத சூழ்நிலை உருவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மும்பை நகரம் வெள்ளத்தில் மூழ்கியது

புதுடில்லி,ஜுன் 22

மும்பை நகரம் கனமழையால் வெள்ளத்தில் மிதப்பதால் மக்கள் வெளியே வரவேண்டாம் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஒரே நாளில்மட்டும்28.3செ.மீமழை அங்கு பதிவாகியுள்ளது. அதன் காரணமாக சாலைகளில் வெள்ளமாக மழை நீர் பெருக் கெடுத்து ஓடியது.

அதனால் மத்திய, மேற்கு மற்றும் துறைமுக வழித்தடங்களில் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வீதி மற்றும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் பொதுமக்கள் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர்.

மும்பையில் கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டதாலும், அலைகளின் சீற்றம் அதிகமாக இருந்ததாலும் பாந்திரா–ஒர்லி கடல் வழி பாலம் மூடப்பட்டுள்ளது. அவசரகால நிலைக் கானமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

# அழிவை நோக்கி பூமி

வொஷிங்டன்,ஜுன் 22

அமெரிக்காவில் உள்ள மூன்று பிரபல பல்கலைக்கழகங்கள் கூட்டாக நடத்திய ஆய்வின் முடிவில், பூமியானது ஒரு புதிய அழிவுக் காலத்தை நோக்கி பயணம் செய்து கொண்டிருப்பதாக அதிர்ச்சித் தகவல்களை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

அதில், பூமியானது ஒரு மிக மோசமான அழிவை நோக்கி பயணம் செய்துக்கொண்டிருப்பதால் மனிதர்கள் மற்றும் முதுகெலும்பு உள்ள விலங்குகள் இந்த அழிவுக்கு உட்படும் உயிரினங்கள், போன்றவை இந்தத் தாக்கங்களால் அழிவடையும் என அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர்.

அதவாது காணாமற் போகும் அல்லது சாவடையும் முதுகெலும்புள்ள விலங்குகளின் சராசரி ... னது கடந்த வருடங்களை ... முறை மிக அதிக அளவில் அதிகரித்துச் செல்கிறது.

இந்த அதிகரிப்பின் மூலம் பேரழிவு ஏற்படுத்தும் ஆறாவது காலத்துக்குள் பூமியானது தற்போது நுழைந்துள்ளது.

இதுபோன்ற ஒரு பேரழிவு 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் பூமியை ஒரு எரிக்கல் தாக்கி டைனோசர்கள் இறந்த காலத்தில் தான் நிகழ்ந்துள்ளது.

அதுபோன்ற ஒரு பேரழிவு ஏற்படுத்தும் காலகட்டத்துக்குள் தான் தற்போது பூமி நுழைந்துள்ளதாக விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

இந்தப் பேரழிவு நிகழ அனுமதித்தால், பூமியில் மீண்டும் உயிரினங்கள் தோன்ற பல மில்லியன் வருடங்கள் ஆகும் எனவும் எச்சரித்துள்ளனர்.

இந்த ஆய்வானது, காணாமற்போன ... களை சேகரித்து அதனை நன்கு ஆராய்ந்த பின்னர் விஞ்ஞானிகள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

இவ்வளவு பெரிய இழப்பு என்பது பூமியில் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் இழப்பாகும். ஆனால், ஒரு நூற்றாண்டிலேயே 400 முதுகெலும்பு விலங்குகள் காணாமற் போயுள்ளமை விஞ்ஞானிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கால நிலை மாற்றம், மோசமான சுற்றுச்சூழல், காடுகளை அழித்தல் உள்ளிட்டவைகள் தான் இந்த அழிவு ஏற்படுவதற்கு மிக முக்கிய காரணங்களாக உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

உலக நாடுகள் ஒன்றுப்பட்டு நீர் நிலைகள், வானிலை மாற்றம், சுற்றுச் சூழலை தீவிரமாக பாதுகாத்து வந்தால், இந்தப் பேரழிவிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை எதிர்த்த 77 பேர் கொலை

## புருண்டியில் ஏப்ரல் முதல் கொடூரம்



புஜும்புரா,ஜூன் 22
கிழக்கு ஆபிரிக்க நாடான புருண்டியில் பாதுகாப்புப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் இதுவரை 77 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்து அந்த நாட்டின் மனித உரிமை அமைப்பின் தலைவர் போனிம்பா கூறியதாவது:
புருண்டியில் அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் தொடங்கிய கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து இதுவரை 77 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு சிறையில் துன்புறுத்தலுக்கு ஆளாகி வருகின்றனர்.
நாடு முழுவதும் பயணம் செய்து, நேரடியாக ஆதாரங்களைத் திரட்டிய பின்னரே இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வெளியிடுகிறோம் எனத் தெரிவித்துள் ளார்.
புருண்டியில், ஜனாதிபதி பியர் குருன்சிஸா மூன்றாவது முறையாக தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டு மக்கள் கடந்த ஏப்ரல் மாதம் முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டத்தை ஒடுக்க பாதுகாப்புப் படையினர் மிகக் கடுமையாக நடந்து கொள்வதாகக் கூறப்படுகிறது.
தலைநகர் புஜும்புராவில் மட்டும் பொலிஸாரின் நடவடிக்கையில் 24 பேர் உயிரிழந்ததாகவும், 591 பேர் காயமடைந்துள்ளதாகவும் சர்வதேச செஞ்சிலுவை அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

## கொடிய நோய்களுக்கு மருந்து வடகொரியா புதிய அறிவிப்பு



பியாங்யாங்,ஜூன் 22
உயிர்க்கொல்லி நோய்களான எயிட்ஸ், எபோலா, புற்றுநோய், சொர்ஸ், மொர்ஸ் உள்ளிட்ட நோய்களை குணப்படுத்தும் ஒரே ஒரு மருந்து தங்களிடம் இருப்பதாக வட கொரிய ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிவிப்பால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.
வட கொரிய நாட்டின் அரசு செய்தி நிறுவனம் ஒன்று அண்மையில் வெளியிட்டுள்ள செய்தியில், எய்ட்ஸ் நோய் மட்டுமன்றி உலக அளவில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள எபோலா, புற்றுநோய், சொர்ஸ் மற்றும் மொர்ஸ் உயிர்க்கொல்லி நோய்களை குணப்படுத்தக்கூடிய அற்புதமான மருந்தை வட கொரிய அரசு தயாரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.
பல்வேறு வகையான உரங்கள் மற்றும் உணவுப்பொருள்களிலிருந்து அந்த மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.
ஆனால், குறிப்பாக எந்த வகையான மூலக்கூறுகளிலிருந்து அந்த அற்புதமான மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது என்ற எந்த தகவலையும் அந்த செய்தி நிறுவனம் வெளியிடவில்லை.
இந்த மருந்தை பெறும் நோயாளிகளில் பாதி பேர் முற்றிலும் குணமடைந்துவிட்டதாக வட கொரியாவின் ஜனாதிபதி கிம்–யோன் அன் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளதாக அந்தச் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.
உலக அளவில் இந்தச் செய்தி பரபரப்பாக வெளியிட்டிருந்தாலும், அதில் எந்த அளவுக்கு உண்மைத் தன்மை இருக்கிறது என்பது தொடர்பான ஆதாரங்களை அந்தச் செய்தி நிறுவனமோ, ஜனாதிபதியோ வெளியிடவில்லை. (ஐ)

## சீனாவில் கன மழை

### 18 பேர் சாவு



பீஜிங்,ஜூன் 22
சீனாவின் தெற்குப் பகுதியில் கடந்த ஒரு வாரமாகப் பெய்து வரும் கன மழை காரணமாக 18 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 4 பேர் காணாமல் போனதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
தெற்குமாகாணங்களில்தொடர்ந்து இரு நாள்கள் மழை பெய்துள்ளது. அதன் காரணமாக பல நகரங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.
மழை காரணமாக சுவர் இடிந்து விழுந்தும், நிலச்சரிவில் சிக்கியும் சிலர் உயிரிழந்துள்ளனர். மேலும் சிலர், மின்னல் தாக்கியும், வெள்ளத்தில் மூழ்கியும் உயிரிழந்துள்ளனர்.
மிக அதிக அளவில் மழையால் பாதிக்கப்பட்ட ஹபெய் மாகாணத்தில் மட்டும் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.
அருகிலுள்ள ஹுனன் மாகாணத்தில் 5.27 லட்சம் பேர் வீடுகளை இழந்து தவித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## துப்பாக்கி வன்முறைகள் அதிகரிப்பு

வொஷிங்டன், ஜூன் 22
வளர்ந்த நாடுகளான பிரான்ஸ், இஸ்ரேல் மற்றும் ஜப்பானை விட அமெரிக்காவில் துப்பாக்கி வன்முறை மிக மோசமாக உள்ளதாக அந்த நாட்டின் ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.
கடந்த வாரம் அந்த நாட்டின் தேவாலயம் ஒன்றில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் உயிரிழந்த நிலையில், நேற்று மீண்டும் அங்குள்ள டெட்ராய்ட் நகரில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது.
இந்தநிலையில்பெருகிவரும்துப்பாக்கிசூட்டுக்குஎதிராகநாம்ஏதாவதுசெய்தாக வேண்டிய தருணம் இது என்றும் ஒபாமா கருத்துத் தெரிவித்துள்ளார்.
அந்த நாட்டில் வசிக்கும் 100 பேரில் 88 பேர் துப்பாக்கி வைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## இராணுவத்திலிருந்து விடைபெறுகிறார் ஹரி



லண்டன்,ஜூன் 22
இளவரசர் ஹரி பிரிட்டன் இராணுவத்தில் இருந்து விடைபெற்றுள்ளதாக அரச குடும்பத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த 10 வருடங்களாக பிரிட்டன் இராணுவத்தில் பணியாற்றி வந்த இளவரசர் ஹரி நேற்று முன்தினத்துடன் விடைபெற்றுள்ளார்.
இதையடுத்து அவர் விலங்குகளை பாதுகாப்பது தொடர்பான திட்டங்களுக்காக ஆபிரிக்கா செல்ல உள்ளார். அங்கு அவர் மூன்று மாதங்கள் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக பிரிட்டனின் அரச குடும்பத்தின் அதிகாரபூர்வ டுவிட்டர் வலைத்தளமான கென்சிங்டன் அரண்மனை செய்தி வெளியிட்டுள்ளது. ஹரி முழுமையாக தனது பணிகளை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.
மேலும் அவரது தந்தை சார்ள்ஸ் மற்றும் அவரது அண்ணன் வில்லியம்சை போல் அவரும் வனவிலங்கு பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தருவதாகவும், எனவே எதிர்வரும் மாதங்கள் அவர் ஆபிரிக்காவின் வனவிலங்கு பாதுகாப்பு தொடர்பான திட்டங்களில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பிரிட்டன் அரசுக்கு எதிராக லட்சம் பேர் திரண்டனர்




லண்டன்,ஜூன் 22
பிரிட்டனில் அமைந்துள்ள புதிய அரசின் சிக்கன நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து லட்சக்கணக்கான மக்கள் நாடளுமன்றத்தின் முன்னர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
பிரிட்டனில் அமைந்துள்ள புதிய அரசு நாட்டின் வரவு செலவு பற்றாகுறையை குறைக்க சிக்கன நடவடிக்கைகளை எடுக்க முடிவு செய்துள்ளது.
இந்த நிலையில் நிதியமைச்சர் ஜார்ஜ் ஓஸ்பார்ன் அரச துறைகள் மக்களுக்கு செலவு செய்யும் தொகையை குறைத்துகொள்ள வேண்டும் என்று தான் விரும்புகிறார் எனத் தெரிவித்துள்ளார்.
மேலும் மக்களின் சமூக பாதுகாப்பு நலனுக்காகச் செலவு செய்யப்படும் தொகையில் இருந்து 12 பில்லியன் பவுண்ட்ஸை குறைக்கவும் அரசு முடிவு செய்ததாகத் தகவல் வெளியாகியது.
இந்த முடிவு மக்களை அதிர்ச்சியடைய செய்துள்ளது. எனவே அரசுக்கு தங்கள் எதிர்ப்பை காட்ட முடிவு செய்தனர்.
அதன்படி லட்சக்கணக்கான மக்கள் லண்டனில் உள்ள நாடளுமன்றத்தை நோக்கி பேரணி நடத்தினர். தங்களில் கைகளில் அரசின் நடவடிக்கைக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்றனர்.
பின்னர் நாடளுமன்றத்தை அடைந்ததும் அரசின் முடிவுக்கும் பிரதமர் கமரூன், நிதியமைச்சர் ஆஸ்போர்ன் ஆகியோருக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.
சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது எனவும், மக்களுக்குச் செலவு செய்யப்படும் தொகையைக் குறைக்ககூடாது எனவும் தெரிவித்தனர். இந்தப் பேரணியில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் கிலாஸ்கவ் மற்றும் லிவர்பூல் ஆகிய இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா

# பன்மொழி அறிவு அவசியம்

26.5.2015 உதயனில் 05ஆம் பக்கத்தில் வெளியான முதலமைச்சரின் செய்தியில் பன்மொழி அறிவின் முக்கியத்துவம் குறித்து உரத்துச் சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொருத்தருக்கும் இது மந்திரமாக அமையட்டும். என்னையும் சேர்த்துத்தான் இதனை மொழிகின்றேன்.

ஒரு கால கட்டத்தில் தமிழ் மட்டும் தெரிந்தால் அதுவே பெரிய தகுதியாக இருந்தது. நாமே நமக்கு வெற்றிவாகை சூட்டியும் இருந்தோம். இப்போ உலகம் எமது கைக்குள்ளேயே வந்து விட்டபடியால், அது மட்டுமே சமாளிபிக்கேசன் (SAMALIFICATION) ஆகாது. உடல் மொழி (BODY LANGUAGE) எமக்குக் கை கொடுத்தாலும் எல்லாக் கருத்துக்களையும் அதனாலும் நாம் வெல்லமுடியாது. ஆகவே ஒரு மனிதனின் தேவையாக ஒன்றுக்கு மேற்பட்ட பல மொழிகளில் பாண்டித்தியம் வேண்டப்படுகிறது. அதிலும் சிறப்பாக ஆங்கிலம், சிங்களம், தமிழ், ஹிந்தி எனப் பல மொழிகளைச் சில மாணவர்கள் பயின்று வருவது மகிழ்வைத் தருகிறது. சமஸ்கிருதம் கூட விதிவிலக்கல்ல.

இப்போ பாருங்கள்! நாம் எங்கே நிற்கின்றோம்? நாம் எம்மை வளர்த்துக் கொள்வதில்லை. எனக்கு எல்லாம் தெரியும், நான் தான் உலக நாயகன் என்ற ஒரு முடிவுக்குக்கூடப் பலர் வந்து விடுகிறார்கள். பன்மொழி கற்றவன் ஒரு மூலையில் அமைதியாக இருப்பான். ஆரவாரப்படமாட்டான். வீதியில் நடந்து போகின்றவன் மெய், வாய், கண், மூக்கு, செவி ஐந்தினாலும் நொடிக்கு நொடி, நிமிடத்துக்கு நிமிடம் படித்துக் கொண்டே பையப் பையப் போகின்றான்.

வாகனத்துக்குள் இருப்பவர்களுக்குக் கண்ணாடியையும் மூடி, குளிரூட்டியையும் போட்டுவிட்டால் பிறகென்ன வானமும் வசமாகும். இப்போ நாங்கள் வானத்திலேயே நிற்கின்றோம். கதவைத் திறந்து பூமிக்குள் காலைப் புதைக்க வேண்டும். நாங்கள் மேலேயும் இல்லை. கீழேயும் இல்லை. இடைநடுவிலே நிற்கின்றோம். இறங்கினால்தானே படிக்கலாம். முதலில் நாம் இறங்குவோம். கற்றது கைம்மண்ணளவு என்பதைப் புரிந்து கொள்வோம். பையப் பையப் படிப்போம்.

இந்தியாவில் சின்னச் சின்னக் குழந்தைகளே நன்றாக ஆங்கிலம் கதைப்பார்கள். நாங்கள் நன்றாகத் தமிழ் கதைப்போம். யாழ்ப்பாணத் தமிழ் கதைக்கும்போது அவர்களுக்கு வாயூறுகிறது. இந்த மண்ணுக்குச் சொந்தம் நம் தமிழ். மானிடர்க்கு ஆங்கிலமே பந்தம். காலியிலிருந்து காங்கேசன்துறை வரை, பாதைகள் திறக்கப்பட்ட காரணத்தால் அரசியலோடு ஆன்மிகமும் வளரவேண்டிய தேவை கைகூடி விட்டது. இரண்டும் பிரிக்க முடியாத துறைகளாகி விட்டன. அதேபோலத்தான் மொழியும்.

போர் நடைபெற்றபோதும், பின்னரும் ஆலயங்களும் சரி, பாடசாலைகளும் சரி, மக்களும் சரி, வாழ்விடங்களும் சரி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில், உலக துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளவும், பரோபகாரம் செய்யவும் பங்காளிகளாக நாம் மாற வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. இதனால் மக்களின் தலைவர்க்ள் ஆங்கிலப் புலமையால் நடந்ததை நடப்பவற்றை நேர்வழி சொல்கிறார்கள். ஆனால் வெளி உலகமோ மதம் சார்ந்த தலைவர்களின் வாக்கினையே பெறுமதியாகக் கருதுகிறது. எனவே நமது சமயத்தின் குரலாக, வெவ்வேறு மொழி சார்ந்தவர்கள் பேட்டி காண வேண்டிய நிலையில், முழுமையான வரலாற்றையும் தொகுத்து, இடித்துரைத்து, உரத்து, உணர்வுபூர்வமாக, சுயமாக, சுதந்திரமாக, தளம்பாமல் நியாயம் சொல்லக்கூடிய ஆங்கிலப் புலமை சார்ந்த தலைமைத்துவம் இந்து சமயத்துக்குத் தேவையாக உள்ளதைக் காலம் வினாவாக்கியுள்ளது என்பதை யாருமே தவறாக எடுக்க மாட்டார்கள்.

அண்மையில் எமது சமயத் தலைவராகப் போற்றப்படும் சின்மய மிஷன் சுவாமிகள், இலங்கையின் முக்கிய பதவி வகிக்கும் ஒரு பிரதான மந்திரிக்கு மொழி பெயர்ப்பு செய்ய வேண்டிய கைங்கரியத்தைச் சிறப்பாக ஆற்றியிருந்தமை யாவராலும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறானவர்களை முதனிலைப்படுத்துவதற்கு காலம் தவம் செய்ய வேண்டியுள்ளது. சின்மய சுவாமிகள் நிறைந்த ஞானமுடையவர். தமிழ், சைவம், இலக் கியம், பகவத் கீதை, இதிகாசங்கள், புராணங்கள், ஆங்கிலம், சமஸ்கிருதம் மற்றும் சமயோசித மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளார். நல்லூர் திரு விழாவின்போது அடியவர்களை அரவணைத்து பஜனைக்கான ஒரு சந்ததியை உருவாக்கி வருகிறார். சமூக முரண்பாடுகளைக் களைவதில் தைரியமானவர். வேள்விகளைத் தடுப்பதற்காக அயராது பாடுபடுபவர். இவரது சேவைகளை காலம் கரம் கூப்பி வணங்குகிறது. பேராசை, ஆடம்பரம், பட்டம், பதவி, புகழ், சிம்மாசனம் வாகன சுவாத்தியம் யாதொன்றையுமே விரும்பாதவர். ஒன்றை ஒழுங்காக நீதியாக ஒரு மனதோடு செய்வார். இன்னும் முக்கியமானதொன்று யாதெனில், இறைவனை ஆழ்ந்த பக்தி மூலம் சிக்கெனப் பிடிப்பவர். பகவத்கீதை சுலோகங்களைச் சரளமாக எடுத்துரைத்து இலகுவாக்கும் எளிதானவராக மாட்சி பெறுகிறார். தன்னைப் பெரிதாக்குவதில்லை.



ஆம்! சின்மய சுவாமிகள் போன்று பல சீடர்களை உருவாக்க வேண்டிய தேவையைக் காலம் வேண்டி நிற்கின்றது. அவரைப்போல பன்மொழிப் புலமையுள்ளவர்களாக இந்து மதத் தலைவர்களும் வர ஊக்கமளிக்க வேண்டும். தூர நோக்கோடு எமது சமயத்தை வளர்ப்பதற்கு பொருத்தமான அடுத்த சந்ததிக்கு இடமளிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் இல்லாமல் இல்லை. இந்து மத குருக்கள் பரப்பரையில் வந்தவர்கள் பலர் படித்துப் பாண்டித்தியம் பெற்று அரச உயர் அதிகாரிகளாகவும் பேராசிரியர்களாகவும்கூட இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மதத் தலைமை என்கிற பதவியை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனை ஏற்றுக் கொண்டவர்கள் அனேகர் ஏனோ பன்மொழிப் புலமையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனைய மதங்களில் பன்மொழிப் புலமையுடன் ஏராளமான தலைவர்கள் உருவாக்கப் படுகிறார்கள். எமது சமயத்தில் பல வெற்றிடங்களையே உருவாக்கியுள்ளோம். அரசியலில் மாற்றங்கள் அவசியம்போல ஆன்மிகத்திலும் மாற்றங்கள் அவசியமானதே.

> அண்மையில் எமது சமயத் தலை வராகப் போற்றப்படும் சின்மய மிஷன் சுவாமிகள், இலங்கையின் முக்கிய பதவி வகிக்கும் ஒரு பிர தான மந்திரிக்கு மொழி பெயர்ப்பு செய்ய வேண்டிய கைங்கரியத் தைச் சிறப்பாக ஆற்றியிருந்தமை யாவராலும் அவதா னிக்கப்பட்டது. இவ் வாறானவர்களை முத னிலைப்படுத்துவதற்கு காலம் தவம் செய்ய வேண்டியுள்ளது. சின் மய சுவாமிகள் நிறைந்த ஞான முடையவர். தமிழ், சைவம், இலக் கியம், பகவத் கீதை, இதி காசங்கள், புராணங்கள், ஆங் கிலம், சமஸ் கிருதம் மற்றும் சமயோசித மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

புங்குடுதீவு பற்றி கேள்விப்பட்ட உடனேயே உரத்துக் கண்டனம் தெரிவித்து இருப்பதும் தர்மம் தாமதிக்காமல் நியாயத்தை வழங்கும் என்று நம்பலாம். இறைவனைத் தட்டிக் கேட்கும் நீதியென்பதனால் அந்த இறைவனோடு சதாவாழ்கின்ற பெருந்தலைவர்களிடம் சென்று இது பற்றி பேட்டியெடுத்து அவற்றைப் பிரசுரித்து ஒரு விழிப்புணர்வுக் கண்டனத்தை ஒவ்வொரு சமயமும் அழுத்தமாகச் சொல்லும் போது, மக்களும் மிகவும் அவதானமாக இருப்பார்கள் அல்லவா? மேலும் தமிழ், ஆங்கிலம், சிங்களம், ஹிந்தி மொழி சார்ந்த பன்மொழி கலாசாரம் மூலம் உலகத்தின் பார்வையில் குற்றவாளிகள் கவனிக்கப்பட்ட வாய்ப்புள்ளதல்லவா? இதன் தாற்பரியம் பன்மொழி தெரிவதனால் உலகத்தை வெல்லவும் முடியும். உலகுக்கு உணர்த்த முடியும், உலகை வரவழைக்கவும் முடியும் என்பது தான்.

இப்போது யாழ்ப்பாணம் சர்வதேசமயமாகிவிட்டது. உலகம் ஒவ்வொரு நாடாகத் தினம் தினம் இங்கு வந்தவண்ணம் உள்ளது. அப்படி வருபவர்களுக்கு எமது நாடியைப் பிடித்துச் சொல்லக்கூடிய ஆற்றலை நாம் வளர்த்தேயாக வேண்டும். எல்லாநேரமும் மொழிபெயர்ப்பாளரை நாம் வாடகைக்கு அமர்த்த முடியாமல் போய்விடும். வி.பொன்னம்பலம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு தலைவராக இருந்தபோது எந்த நாடு, எந்தமொழி, எந்த விருந்தினர் வந்தாலும் சிறந்த மொழிப்பெயர்ப்பாளராக தமிழ் மக்களாலும் உலக மக்களாலும் வரவேற்கப்படுவார். அடுத்தது அவரது மொழிபெயர்ப்பில் எந்தவொரு தவறும் வந்துவிடாது பார்த்துக்கொள்வார்.

நாதஸ்வரமேதை ஷேக் சின்ன மௌலானா அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையில் வாசித்தபோது மக்கள் வெள்ளத்தை சமாதானப் படுத்தி இசையைக் கேட்க வைத்த பெருமை பன்மொழிப்புலமை வாய்ந்த வி.பொன்னம்பலம் அவர்களாலேயே முடிந்தது.

ஆகவே ஒவ்வொருவரும் சிறப்பாக எம்து சமயம் சார்ந்த அனைவரும் மூன்று மொழிகளிலாவது பன்மொழிப் பாண்டியத்தியம் பெற்றிடுவார்களாக இருந்தால் எமது சமயத்துக்கு நிகரேது? இற்றைக்கு 5,000 ஆண்டுகளுக்கும் முற்பட்ட வரலாற்றைக் கொண்ட மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகங்களோடு எம்மைப் பேறாக்கிச் சிவ சம்பத்துக்களுக்கு மகிமை சேர்க்கலாம் அல்லவா!

நீங்கள் ஒரு தலைவராகவோ அல்லது ஒரு நல்ல குடிமகனாகவோ வெல்லப்பட வேண்டுமாயின் பன்மொழியறிவு உங்களை ஆட்சி புரியட்டும். தயவு செய்து ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க, மொழிபெயர்க்க, கலந்துரையாட, பேட்டிகொடுக்க எம்மை ஓர் இந்துவாகத் தயார்படுத்துவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களையும் கவனத்தில் எடுங்களேன்!

கைதடி தெற்கு, வடிசாலை, கைதடி எனும் விலாசத்தில் வசிக்கும் மக்களாகிய நாங்கள் குடி தண்ணீர் பிரச்சினையை எதிர் நோக்கி வருகின்றோம். இங்கு கிணற்று நீர் உவர் நீராகக் காணப்படுவதே இதற்கான காரணம்.
மழை காலத்தில் வீடுகளைச் சுற்றி நீர் நிரம்பி விடுகின்றது. காரணம் கடற்கரை அருகில் இருப்பது. அதனால் வீதிகளின் குறுக்காக வாய்க்கால்கள் வெட்டப்படுகின்றன. இது வாகனங்கள் செல்வதற்குச் சிரமத்தை ஏற்படுத்துகிறது.
வாய்க்கால்கள், சிறுவீதிகள் சீரமைக்கப்படாமல் உள்ளதால் அருகில் இருக்கும் கடைக்குக்கூட சுற்றிச் செல்ல வேண்டி உள்ளது. பொது மைதானமாக இருந்த இடம் குடியிருப்புக்கான காணியாகக் கொடுக்கப்பட்டுவிட்டதால் இப்போது எமது பிள்ளைகள் விளையாட இடம் இல்லாது சிரமப் படுகிறார்கள்.
இந்த விடயங்கள் தொடர்பாக எல்லா அதிகாரிகளிடமும் தெரிவித்த போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சாவகச்சேரி பிரதேச செயலகத்து ஒரு சில அதிகாரிகள் இது தொடர்பாகத் தங்களுக்குத் தொந்தரவு தர வேண்டாம் என்று கூறி அனுப்புகின்றனர். 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் வந்தகாசு பத்து லட்சம் ரூபாவையும் கைதடி தெற்கு வாசிகசாலை மைதானத்துக்கு மண் போடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அந்த வாசிகசாலையை இடித்து வெளிநாட்டு உதவியுடன் மேல்மாடியாகக் கட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
எங்கள் கிராமத்துப் பிரச்சினையை யாரும் ஏற்றுக் கொள்கின்றார்கள் இல்லை. ஏழைகளாகிய எங்கள் தண்ணீர்ப் பிரச்சினையைக்கூட ஏற்றுக்கொள்கின்றார்கள் இல்லை. நீர்ப் பிரச்சினையைவிட வாசிக சாலை மைதானத்திற்கு மண் போடுவதுதான் முக்கியம் என்று கூறுகின்றனர். நேர்மையான அதிகாரிகள் இருந்தால் எங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கு மாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*பாதிக்கப்பட்ட மக்கள்*

## குடிதண்ணீரை வீணடிக்காது இருப்போம்!

நீரைச் சேமிப்போம், சொட்டு நீரும் நமக்குச் சொர்க்கம்! என்று சொல்லப்படும் இந்தக் காலத்திலேதான் அதுவும் சுன்னாகத்திலேயே அதற்கு மாறான கைங்கரியமும் நடைபெறுகிறது.
குறிப்பாக சுன்னாகம், கந்தரோடை வீதியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தண்ணீர் விநியோகக் குழாய்களில் ஒன்றில் இப்படி தண்ணீர் வீணடிப்புத் தாராளமாக நடைபெறுகிறது.
இங்கு நீர் எடுக்க வரும் சிலர் தமது நீர் ஏந்தும் பாத்திரங்களை வீடுகளிலே வைத்துக் கழுவிக் கொண்டு வராமல் இங்கு வைத்துத்தான் அவைகளை குலுக்கிக் கழுவி எடுக்கிறார்கள். இன்னும் சிலர் கால் முகம் கழுவுவதற்கும் செருப்புக் கழுவுவதற்கும் இங்குதான் வருகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், இங்கு சொட்டு நீரல்ல, அதிகளவு குடிதண்ணீ தினமும் வீணடிக்கப்படுகிறது. இந்தச் சுற்றாடலும் எந்நேரமும் சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது.
கந்தரோடைப் பகுதிக்கு அந்தக் காலத்திலிருந்தே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினராலேயே காலை மாலையில் நீர் வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது, அப்படியல்லாமல் தாராளமாக நீர் வழங்கப்படுவதும், இந்த நீர் வீணடிப்புக்குக் காரணமாக இருக்குமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.
இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்திலெடுத்து நன்னீர் வீணடிக்கப்படுவதையும் சுற்றாடல் மாசடைவதையும் கழிவு நீர் தேங்கி நிற்பதையும் தடுத்தாக வேண்டும்.

*போனாச்சானா கந்தரோடை*

## வாசகர் திருமுகம்




## வெங்காயமோ வெங்காயம்!

மனதினுள் எதனையும் வைத்திருக்காது, அப்பாவித்தனமாக நடந்து கொள்பவர்களை, விவேகம் இல்லாது செயற்படுபவர்களை வெங்காயம் என்றும் அதற்கும் மேலாக, உரித்த வெங்காயம் என்றும் சொல்வது வழமை. ஆனால் சமையலுக்கு இந்த வெங்காயம் இல்லாவிட்டால் ஒன்றுமே நடக்காது. அந்த அளவுக்கு சமையலுக்கு வெங்காயம் முக்கியமாகிறது. இந்த வெங்காயம் இன்று எமது பகுதி விவசாயிகளை, இல்லத்தரசிகளை சிப்பிலியாட்டிக் கொண்டிருக்கிறது.
அபரிமிதமாக வெங்காயம் விளைந்தால் அவற்றை அறுவடை செய்து சந்தைப்படுத்துவதில் விவசாயிகள்படும் சிரமம் சொல்லும் தரமன்று. கிலோ ஒன்று இருபது ரூபாவரை இறங்கு முகமாகிவிடும் வேளையில் உரிக்காமலே விவசாயிகளை கண்ணீர் சிந்த வைத்து விடும் இந்த வெங்காயம், இன்று ஏறுமுகமாகி இல்லத்தரசிகளை கண்ணீர் சிந்த வைத்திருக்கிறது . இன்று வெங்காயத்தின் விலை கிலோ ஒன்று 140–180 ரூபாவரை எகிறி நிற்கிறது.திடீரெனப் பெய்த பெருமழை வெங்காயப் பயிர்களின் அழிவுக்குக் காரணமாகி விட்டதால் இந்த நிலைமை.
இருக்கும் சந்தை நிலைவரத்தைப் பார்த்து இவற்றைப் பயிரிட கூடுதல் ஆர்வம் காட்டுவோர், இன்னொரு இயற்கை இடர்வந்தால்தான் தமது உற்பத்திகளை உச்ச விலைக்குத் தள்ளமுடியும்? அல்லது தவிக்க வேண்டியதுதான்.
இப்படியாக மாறிமாறி வெங்காயம் பயிரிடுவோரையும் பாவனையாளரையும் வெங்காய மாக்கும்இந்த நடவடிக்கை தொடராதிருக்க வழி என்ன என்பதுதான் புரியாதிருக்கிறது.

*லோகேஸ், கொட்டடி*

### கேலிச் சித்திரம்




# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை எப்போது ?

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தொடர்ந்து பேசப்பட்டு வந்தாலும் இன்னும் ஒருவரும் விடுதலை செய்யப்படாத நிலைமையே இருக்கின்றது. புதிய அரசின் ஆட்சியிலாவது தமக்கு விடுதலை கிடைத்து விடும் என்று நம்பியிருந்த, தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியிருக்கின்றது.
தமிழ் அரசியல் கைதிகளை அண்மையில் சந்தித்த பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம், தமது விடுதலைக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்த வேண்டி வரும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர். அத்துடன் கடந்த ஆட்சியில்தான் தமது விடுதலை தாமாகியது. இந்த ஆட்சிக் காலத்திலாவது விடுதலை கிடைக்கும் என்று எண்ணியிருந்த நிலையில் அதுவும் ஏமாற்றமாகிப் போவதை தமது மனக்குமுறல்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர்.
ஆனாலும் அரசைப் பொறுத்த வரையில் இலங்கையில் தமிழ் அரசியல் கைதிகள் என்று எவருமே இல்லை என்பதைத்தான் நிலைப்பாடாகக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி மைத்திரி தொடக்கம், அமைச்சர்கள் வரையில் அந்த நிலைப் பாட்டில்தான் இருக்கின்றனர். தமிழ் பேசும் கைதிகள். பயங்கரவாத குற்றச் செயல்களுக்கு உதவி புரிந்தவர்கள். அவர்களைத் தமிழ் அரசியல் கைதிகள் என்று குறிப்பிட முடியாது என்பது அரசின் வாதம்.
சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி இடம் கொடுக்கவில்லை என்று கூறுவதைப் போல, அரசு, கைதிகள் விடயத்தில் விடுதலைக்குரிய நடவடிக்கை எடுத்தாலும், சிங்கள - பேரினவாத ஊடகங்கள் அவர்களை விடுவிக்கும் அரசின் நடவடிக்கையை தடுப்பதில் குறியாக இருக்கின்றன.
மஹிந்த அணியினரும் இதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றனர். விடுதலைப் புலிகளை விடுதலை செய்கின்றனர் என்று பரப்புரைகளை தெற்கில் பரப்புகின்றனர். இதனால் ஏற்படும் தலையிடிக்காக, தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் புதிய அரசும் பாராமுகமாகச் செயற்படுகின்றது.
தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையை எதிர்க்கும் சிங்கள - பேரினவாத ஊடகங்களும், மஹிந்த அணியினரும், விநாயக மூர்த்தி முரளிதரன், குமரன் பத்மநாதன் உள்ளிட்டோரை மஹிந்த அரசு மரியாதையுடன் வைத்திருக்கும் போது ஏன் வாய் மூடி பேசாமல் இருந்தார்கள்.
அப்பாவிக் கைதிகளை, எந்தக் குற்றங்களும் சுமத்தப்படாமல் வருடக் கணக்கில் வாடும் - தமது இளமையைத் தொலைத்து விட்டவர்களை - எஞ்சிய நாள்களையாவது தங்களது குடும்பங்களுடன் சந்தோசமாக இருக்கக் காத்திருப்பவர்களை விடுதலை செய்ய முற்படும் போது மாத்திரம் பேரினவாதக் கூக்குரல் எழுப்பப்படுகின்றது.
இதற்காக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை தாமதப்படுத்தும் புதிய அரசின் நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் மக்கள் தனித்து மஹிந்த ராஜபக்ஷவை மாற்றுவதற்காக மட்டும் வாக்களிக்கவில்லை. தங்கள் வாழ்வில் அதனால் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்றுதான் வாக்களித்தார்கள்.
இவ்வாறான நிலையில், புதிய அரசு, தமிழ் அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்யும் என்றும், நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஒரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்படவுள்ளது. ஆனால் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது இன்னமும் நடந்தபாடாகத் தெரியவில்லை.
பொன்சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் பட்டமும், சிராணி பண்டாரநாயக்காவுக்கு மீளவும் பிரதம நீதியரசர் பதவியும் வழங்கிய மைத்திரியால், தனது வெற்றிக்குக் காரணமாக அமைந்த தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்றாகிய, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைச் செய்ய முடியவில்லை.
வெறுமனே, சிங்கள பேரினவாதத்தின் கூக்குரலுக்கு அஞ்சி அரசியல் கைதிகளின் விடுதலையை இனியும் தாமதப்படுத்தக் கூடாது. நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னதாக, ஒரு தொகுதி அரசியல் கைதிகள்ாவது விடுவிக்கப்பட வேண்டும்.
நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்ளும் தரப்புக்கள், தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கையில் ஒன்றான அரசியல் கைதிகளின் விடுதலையில் கரிசனை காட்டி - அரசுக்கு அழுத்தம் கொடுத்து விடுதலைக்கு நட வடிக்கை எடுக்க வேண்டும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிறுபான்மை கட்சிகளுக்கு ஏமாற்றம் தானா?

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட தேர்தல் நடை முறைகளில் மாற்றங்கள் செய்வதற்கான 20 ஆவது திருத்தச் சட்ட முன்வரைவு இப்போது வர்த்தமானியிலும் பிரசுரிக்கப் பட்டுவிட்டது.

இந்தத் திருத்தச் சட்ட முன்வரைவு எவ்வாறேனும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி சிறிசேன குறியாக இருப்பது தெரிகின்றது. அதற்குக் காரணம் ஜனாதிபதி தேர்தலுக்கான பரப்புரைகளின்போது அவர் சார்பில் மக்களுக்கு வழங்கப்பட்ட முக்கியமான வாக்குறுதிகளில் இதுவும் ஒன்றாகும்.

ஆனால் இந்தத் திருத்தச் சட்ட முன்வரைவு, சிறுபான்மை மக்களின் மற்றும் சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை வெகுவாகப் பாதிப்பதாக இருக்கும் என்று கருதப்படுவதால், அவ்வாறான சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் போர்க் கொடி தூக்கியிருப்பது ஜனாதிபதி சிறிசேனவின் எதிர்கால நகர்வுகளுக்கு நல்ல சகுனமாக அமையப் போவதில்லை.

ஜனாதிபதியின் தேர்தல் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தவர்கள் என்பது மட்டுமன்றி, அவரது எதிர்கால மக்கள் நலன் நாடிய செயற்பாடுகளுக்கும் கூட அவர்கள் பக்கபலமாக இருப்பார்கள் என்பதை மறுக்க முடியாது. இந்த உண்மையை சிறிசேனவும் நன்குணர்ந்தே இருக்கின்றார்.

முக்கியமான கொள்கை கலந்துரையாடல்களின் போதெல்லாம் சிறுபான்மைகட்சிகளும் சிறிய கட்சிகளும் தமக்கு வழங்கியிருந்த ஆதரவை அவர் எடுத்தியம்பியதுண்டு. அது மட்டுமல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலிருந்து எதிர்தரப்புக்கு வந்து உயிரையும் துச்சமெனக் கருதாமல் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் குதித்திருந்த தமக்கு, ஐ.தே.கட்சியினரும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அளித்த ஆதரவையும் பாதுகாப்பையும் கூட அவர் பல தடவைகள் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில், சிறுபான்மை இனத்தவர்களும் சிறிய கட்சிகளும் பாதிக்கப் படக்கூடியதான ஒரு தேர்தல் திருத்தச் சட்ட வரைவை அவர் முன்மொழிந்திருப்பதற்கான காரணம் தெரியவில்லை.

இந்தத் திருத்தங்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் வரவேற்றுள்ளனர். அந்தக் கட்சியின் முக்கிய பிரமுகரும் இப்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான நிமல் சிறிபால டி சில்வா சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் கோரிக்கைகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களுக்கு இடங்கொடுக்க முடியாது. அவர்களின் போராட்டங்களைக் கண்டு அஞ்சப் போவதில்லை என்ற வகையில் தூக்கி எறிந்து கருத்து வெளியிட்டுள்ளார் .


அந்தக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபாலவும் அதேவித கருத்தைக் கொண்டிருப்பாரானால் அது கவலைக்குரியதே துரதிர்ஷ்டமானதே.

அதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் இன்று ஜனாதிபதியுடன் சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் பிரதிநிதிகள் சந்திப்பு ஒன்றை நிகழ்த்தவிருப்பதாக தெரியவந்துள்ளது. வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்ட முன்வரைவு திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட வேண்டும். சிறுபான்மை கட்சிகளுடன் மீண்டும் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும். அதன்பிறகே திருத்தச்சட்ட முன் வரைவு தாக்க்ல் செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் ஏற்கனவே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகள் ஏற்கப்படாவிடில் நாடளாவிய ஆர்ப்பாட்டங்களை நடத்துவது மட்டுமன்றி, இந்தச் சட்டம் நிறைவேற்றப் படுவதை எதிர்த்து நீதிமன்றம் செல்வதற்கும் அவர்கள் தீர்மானித்திருப்பதாக அரசல் புரசலாகத் தகவல் வந்துள்ளது.

ஜே.வி.பி., த.தே.கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, சமசமாஜக் கட்சி, இ.தொ.காங்கிரஸ் முதலிய 17 கட்சிகள் ஒருங்கிணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

ஜனநாயகப்பிரியரும், சிறுபான்மை மக்கள் மற்றும் சிறியகட்சிகளின் ஆதரவில் எதேச்சதிகார ஆட்சியொன்றை வீழ்த்தி பதவியில் அமர்ந்தவருமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பேகும் பதில்தான் என்ன? ஏமாற்றமளிப்பதாக இருக்க மாட்டாதென்று நம்புவோமாக.

# பௌத்தத்திற்கு கறுப்புப் பக்கத்தை உருவாக்கும் முயற்சி



“ கலகொட அத்தே ஞானசார தேரர் அவர்கள் மட்டுமல்ல, அவரைப்போன்று வக்கிர மனம் கொண்ட ஏனையோரும்கூட மஞ்சள் அங்கிகளை அணிந்து கொண்டு பௌத்ததுறவி களாகக் காட்சியளிப்பதும் நடமாடுவதும் பௌத்தமதத்துக்கு இழைக்கும் துரோகம் மட்டுமல்ல, அவர்கள்தான் அந்த மதத்துக்கான பிரச்சினையும் கூட.

■ வந்தியத்தேவர்

பௌத்த குருமார் சிலருக்கு இப்போது சித்தார்த்தரின் போதனைகள் சில கசந்துவிட்டன போல் தெரிகின்றது. அதனால் கட்சிகளையும் அமைப்புக்களையும் ஏற்படுத்திநாடாளுமன்றத்தில்நுழைந்து அரசியல் செய்வதில் நாட்டம் கொள்ளத் தொடங்கியுள்ள னர்.

பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தேஞான சார தேரர் இதில் முன்னிலை வகிக்கத் தொடங்கியுள்ளார். அதற்காக தென்னிலங்கை வகுப்புவாத அரசியல் வாதிகளின் கைவசம் உள்ள இனவாதம் என்கிற ஆயுதத்தைத் தாங்கிப்பிடிக்க கச்சை கட்டிக் கொண்டு புறப்பட்டுள்ளார்.

பௌத்த மதம் அன்பு, கருணை ஆகிய நெறிகளைத் தன்னகத்தே கொண்டது. சாவைக் கண்டு மனம் வெதும்பிய சித்தார்த்தன் அரசைத் துறந்து ஞானம் பெற்று தர்ம போதத்தினூடாக பௌத்தத்தை உலகிற்கு நல்கியவர். காவியுடை பூண்ட அந்த மகானின் உபதேசங்களால் கவரப்பட்ட மக்கள் பௌத்தமதத்தைக் கடைப்பிடித்தனர். அந்தப் புனிதமான மதம் இலங்கையில் சில பீடைகளால் பாதிக்கப்பட்டுள்ளது. அது புத்த பெருமானின் போதனைகளை மெல்லமெல்ல அரித்துச் சிதைத்து வருகிறது. இப்போது புத்தரின் போதனைகளாக வன்முறைகளையும் பஞ்சமா பாதகங்களையும் முன்வைக்கத் தொடங்கியுள்ளது. பொதுபல சேனா என்ற ஓர் அமைப்பினூடாக புத்த தர்மத்தை அழிக்கக் கிளம்பியுள்ளார் அதன் செயலாளர் என்னும் பதவியுடன் அலையும் அத்தேஞானசார தேரர்.

நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து விடவேண்டும் என்பதில் அக்கறை கொண்ட அத்தேஞானசாரதேரர் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களையாவது தனது அமைப்பினூடாகப் பெற்றிடவேண்டும் என்று விரும்புகிறார். அதற்காக அவர் எடுத்துள்ள ஆயுதம் பௌத்தமதம். அரசியலில் உள்ள பௌத்த, சிங்களத் தலைவர்கள் பௌத்தர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதவர்களாக இருப்பதும் பௌத்தர்களின் கோரிக்கை களுக்குச் செவிசாய்ப்பவர்களாக இல்லை என்பதும் தாம் தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணமாக அவர் முன்வைப்பவை.

பௌத்தம் என்ற முகமூடிக்குள் மறைந்திருக்கும் போலித்துறவியான இந்தத் தேரரால் தனது சுயரூபத்தை எத்தனை நாள்களுக்கு மறைத்திருக்க முடியும்? அனைத்து உயிர்களையும் நேசித்த அன்பு கருணையைப் போதித்த புனிதரின் சிந்தனைகள் கோட்பாடுகள் உபதேசங்களை காவி யுடை தரித்துப் போலித்துறவு பூண்ட ஆசாடபூதிகளால் எவ்வளவு காலம் பின்பற்ற முடியும்? அத னால் அரசைத் துறந்த அந்த ஞானி யின் பெயரைக் கூறிக்கொண்டு வன்முறை அரசியலுக்குள் புகத் தயாராகியுள்ளார். பௌத்தர்களுக்கு இந்த நாட்டில் பெரிய பிரச்சினைகள் இருப்பதாகத் தவறான தகவல்களைப் பரப்பித் தன்னைப் பௌத்த மதத்தின் பெருங் காவலராகச் சித்திரிக்க முனைகின்றார் இந்தத் தேரர்.

பௌத்த மதத்தில் கறுப்புப் பக்கம் கிடையாது என்று கூறுகின்றார் ஞானசாரர். பௌத்தமதத்தில் மட்டுமல்ல எந்த ஒரு மதத்திலுமே கறுப்புப் பக்கம் என்பதில்லை. ஆனால் பௌத்தமதத்தில் கறுப்புப்பக்கம் இல்லை என்று கூறிக்கொண்டே அதற்குப் புதிதாக ஒரு கறுப்புப் பக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார் இவர்.

உடலில் மஞ்சள் உடையை அணிந்திருந்தாலும் மனதில் கறுப்பு ஆடையைப் போர்த்திருக்கும் இவரால் பௌத்த மதத்தில் புதிதாக ஒரு கறுப்புப் பக்கம் உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மதங்கள் கூறும் நற்சிந்தனைகளை வீசிவிட்டு மக்களை இம்சைப்படுத்தும் சிங்களத் தலைமைகளுக்கு ஊக்கமளித்து அதனூடாக சொகுசு வாழ்க்கையை நோக்கி நகர விரும்பும் ஒருவராகவே இவரது கருத்துக்கள் இவரை இனங்காட்டுகின்றன.

முஸ்லிம் மக்களது மசூதிகளை உடைத்தமை, மஹிந்தவின் ஆட்சியின்போது கோத்தபாயவின் ஆசீர்வாதத்துடன் முஸ்லிம் மக்கள் மீது வன்முறைகள் இடம்பெறக் காரணமாக இருந்தமை எனப் பல குற்றச்சாட்டுக்கள் இவர் மீது உள்ளன. இவரால்தான் பௌத்த மதத்துக்குள் பிரச்சினைகள் உருவாகப் போகிறது.

வடக்கில் புத்தர் சிலைகள் அகற்றப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் எனவும் பௌத்தர்களுக்காக குரல் கொடுத்தால் தம்மைத் தேசத்துரோகிகளாகக் காட்டுகிறார்கள் எனவும் எந்த ஒரு கட்சியும் அரசியல்வாதியும் பௌத்தர்களுக்காக இல்லை என்றும் இனவாதத்துடன் மத வாதத்தையும் சேர்ந்தே கக்குகிறார்.

இன்று தென்பகுதியில் உள்ள பௌத்த விகாரைகள் அரசியல் மேடைகளாக மாற்றப்பட்டு வரும் போது பௌத்தத்துக்காகப் பேசும் இவரால் அதற்கு எதிராக கிளர்ந்தெழும்ப முடியாமல் போவது ஏன்?

உண்மையான ஒரு பௌத்த துறவியாக இருந்திருந்தால் அவர் குரல் கொடுத்திருப்பார். அதுதான் இல்லையென்றாகிவிட்டதே!

பௌத்த தர்மத்தை, சித்தார்த்தரின் தூய்மைமிக்க துறவறத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் எல்லாம் ஏதோ சந்தர்ப்பத்தில் மஞ்சள் உடையால் உடலை மூடிக் கொண்டால் பௌத்த துறவியாகி விடலாம் என்று கருதுவது அந்த மதத்தை இழிவுபடுத்துவதற்குச் சமமானது. துறவறத்தால் வாழ்க்கையை வளப்படுத்த முயலும் அரசியல் வாதிகளுக்கு இணையாகத் தம்மையும் தயாராக்க விரும்பும் ஒருவருக்கு புத்தபெருமானை வணங்கும் தகுதியும் கிடையாது. அவரின் போதனைகளைப் புதைத்துவிட்டு அங்கிகளை அணிந்து கொண்டால் மட்டும் உண்மையான பௌத்த துறவியாகி விடமுடியாது. கலகொட அத்தே ஞானசார தேரர் அவர்கள் மட்டுமல்ல, அவரைப்போன்று வக்கிர மனம் கொண்ட ஏனையோரும்கூட மஞ்சள் அங்கிகளை அணிந்து கொண்டு பௌத்ததுறவிகளாகக் காட்சியளிப்பதும் நடமாடுவதும் பௌத்தமதத்துக்கு இழைக்கும் துரோகம் மட்டுமல்ல, அவர்கள்தான் அந்த மதத்திற்கான பிரச்சினையும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமூலம்–உபுல் யோசெப் பெர்னாண்டோ
தமிழில் – வீ.எஸ்.ரீ.



# நரிக் கல்யாணம்

2004ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதா? இல்லையா? என முடிவு செய்ய இயலாது சந்திரிகா தடுமாறிக் கொண்டிருந்த வேளையில் "நாடாளு மன்றத்தைக் கலைத்து விடுமாறு என்னிடம் கூறச் சொல்லி என் வீட்டு நாய்க்குக்கூட நீர் பாடம் கற்பித்தீரா?" என்று ஆத்திரம் மேலீட்ட மங்கள சமரவீரவிடம் கேட்டாராம். இதனைப் பின்பொரு சமயம் தான் கலந்து கொண்ட பத்திரிகையாளர் சந்திப்பில் சந்திரிகாவே பகிரங்கப்படுத்தியிருந்தார். பின்னபொரு சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவதெனத் தாம் மேற்கொண்ட முடிவு தவறானதொன்றானது எனச் சந்திரிகா தெரிவித்திருந்தார். உண்மையில் சந்திரிகாவினது அந்தத் தீர்மானமே மஹிந்த அரசியலில் முன்னிலை பெறக் காரணமானது.

அன்று ரணிலின் அரசை வீழ்த்த நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதா? இல்லையா? எனத் தீர்மானிக்க இயலாமல் சந்திரிகா சிரமப்பட்டமைபோன்று, இன்று மைத்திரியும், ரணிலுக்கு அரசமைக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக நாடாளுமன்றத்தைக் கலைப்பதா? இல்லையா? எனத் தீர்மானிக்க இயலாது சிரமப்படுகிறார். அன்று சந்தரிகாவும் – ரணிலும் தம்மிடையே முரண்பட்டுக் கொண்டபோது, தாம் பிரதமர் பதவியைக் கைப்பற்றி அதன் மூலம் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்ற மஹிந்த எதிர்பார்த்தமை போன்று இன்றும் மைத்திரியும் – ரணிலும் தம்மிடையே முரண்படுவதனூடாக தாம் பிரதமர் பதவியைக் கைப்பற்றி பின்னர் ஜனாதிபதியாகவும் வாய்ப்பு ஏற்படுமென மஹிந்த மீண்டும் நம்புகிறார்.

**மங்கள சமரவீரவும் ஜே.வி.பி. யினரும் கொடுத்த கயிறு**

அன்று நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுமாறு சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுத்தவர்கள் மங்கள சமரவீர மற்றும் ஜே.வி.பியினரே. நாடாளுமன்றத்தைக் கலைக்காவிடில் தாம் அரசியலைத் துறந்துவிட்டு வெளிநாட்டுக்குச் சென்று விடப்போவதாக மங்கள சமரவீர, சந்திரிகாவுக்கு அச்சுறுத் தல்கூட விடுத்தார். நாடாளுமன்றைக் கலைக்க சந்திரிக்காவுக்கு அழுத்தம் கொடுக்குமாறு அவருக்கு ஆதரவளித்து வந்த தரப்பினரையும் மங்கள சமரவீர தூண்டிக் கொண்டே இருந்தார்.

> **மைத்திரியையும், ஐ.தே.கட்சியையும் பிளவு படுத்தி மைத்திரியைத் தனிமைப்படுத்தி மைத்திரியின் தந்திர பாதுகாவலராகத் தம்மை ஆக்கிக் கொள்வதே மஹிந்தவின் தற்போதைய திட்டம். இதனைப் புரிந்து கொள்ளாத மைத்திரியைச் சூழவுள்ள ஐ.தே. கட்சிக்கு விரோத மானவர்கள், இன்று மஹிந்தவுக்குக் கொடி பிடிக்க முன்னிற்கின்றனர்.**

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்னர், ரணிலிடம் இருந்து மூன்று முக்கிய அமைச்சுக்களைச் சந்திரிகா தம்வசப்படுத்தியமை திருடனுக்கு முன்னால் பணப் பெட்டியைப் போட்டுப் பார்த்த ஓர் உத்தி. ஆனால் அந்தச் சம்பவம் தொடர்பில் சந்திரிகாவுடன் பேச்சு நடத்தி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளுமாறு சமாதான முயற்சியில் ஈடுபட்ட சர்வதேச சமூகம் ரணிலுக்கு அழுத்தம் பிரயோகித்தது. ரணிலும் அதனை ஏற்று தமது சார்பில் பேச்சுக்களில் கலந்துகொள்ள மலிக் சமரவிக்கிரமவை நியமித்தார். அதேசமயம் சந்தரிகா சார்பில் மனோதித்தவெல நியமிக்கப்பட்டார். பேச்சுக்களின்போது, பாதுகாப்பு அமைச்சுத் தவிர்ந்த மற்றிரு அமைச்சுக்களையும் மீண்டும் ரணிலிடம் ஒப்படைக்க சந்திரிகா ஒப்புக்கொண்டார். ஆனால் ரணிலோ பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களின்றி சமாதானப் பேச்சைத் தம்மால் முன்னகர்த்திச் செல்ல இயலாதெனத் தெரிவித்து விட்டார்.

கடைசியில் முதலில் அந்த மூன்று அமைச்சுக்களது பொறுப்பையும் மீண்டும் ரணில் தலைமையிலான அரசுக்கு வழங்கி முன்பிருந்த நிலைமையை ஏற்படுத்திவிட்டு, பின்னர் பேச்சுக்களின்போது பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை ரணிலிடம் ஜனாதிபதி சந்திரிகா கையளிக்க ஒப்புக் கொள்ளும் நிலை ஏற்பட்ட வேளையில், மங்கள சமர வீர மற்றும் ஜே.வி.பி தரப்பினரது அழுத் தங்கள் காரணமாக ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றைக் கலைப்பதாகப் பிரகடனப்படுத்தினார். ஆனால் அதன் பின்னர் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் அரசமைக்கத் தேவைப்பட்ட நாடாளுமன்றப் பெரும்பான்மையைச் சந்திரிகாவால் ஈட்ட முடியவில்லை. சுதந்திரக்கட்சி சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர்களில் பலர் தோல்வி கண்டிருந்தனர். கூட்டணி சார்பில் போட்டியிட்டவர்களில் ஜே.வி.பி. வேட்பாளர்களே பாதிக்கு மேல் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தனர்.

சந்திரிகாவால் பிரதமர் பதவிக்குக்கூட ஒருவரை நியமிக்க இயலாது போயிருந்த நிலையில், மஹிந்த ராஜபக்ஷ ஏதோ வகையில் பிரதமர் பதவியைத்தாம் கைப்பற்றிக் கொண்டார். சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளராக அந்த வேளையில் செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவைப் பயன்படுத்தியே மஹிந்த பிரதமர் பதவியைக் கைப்பற்றிக் கொண்டார். அதேபோன்று சந்திரிகாவுடன் நெருக்கமாகச் செயற்பட்டு வந்தவர்களது ஆதரவையும் மஹிந்தவால் ஈட்டிக் கொள்ள முடிந்தது. ஜே.வி.பி. தரப்புக்குப் பக்கச் சார்பாகச் செயற்பட்ட அநுர பண்டாரநாயக, லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர ஆகியோரில் ஒருவரை பிரதமர் பதவிக்கு நியமித்தால், சந்திரிகா, ஜே.வி.பியினரிடம் சிறைப்பட்ட நிலை உருவாகுமெனவும், அதனால் சுதந்திரக்கட்சி அழிவடைய நேருமெனவும் பரப்புரை செய்தே மஹிந்த பிரதமர் பதவியைத் தாம் கைப்பற்றிக் கொண்டார்.

சந்திரிகாவின் நெருங்கிய ஆதரவாளரான மனோ தித்தவெல போன்றோரும்கூட மஹிந்த கொடுத்த அந்தக் கயிற்றை விழுங்கிக் கொண்டனர். மைத்திரிபாலகூட மஹிந்த கொடுத்த அந்த மருந்தை விழுங்கிக் கொண்டு மஹிந்தவையே நாம் பிரதமராக்குவோம் எனச் சந்திரிகாவுக்கு ஆலோசனை கூறினார். இவற்றின் காரணமாகவே சந்திரிகாவும் மஹிந்தவைப் பிரதமராக நியமிக்க ஒப்புக் கொண்டார். கடைசியில் மஹிந்த பிரதமராகி, சந்திரிகாவின் நம்பிக்கைக்குரிய மங்கள சமரவீர மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரின் பரம எதிரியாக இருந்து வந்தார். ஆனால் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தைப் பெற்றதும் அந்த இருவரையும் தமக்கு ஆதரவானவர்களாக மஹிந்த ஆக்கிக் கொண்டார்.

**ஜனாதிபதியானதும் மஹிந்த மேற்கொண்ட களையெடுப்பு**

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் அவர் முதலில் மேற்கொண்ட பணி, மங்கள சமரவீரவையும் ஸ்ரீபதி சூரியராச்சியையும் அரசிலிருந்து வெளியேற்றியமையே ஆகும். அதற்கு முன்னரே அவர் சந்திரிகாவை ஓரம் கட்டி விட்டார். அதற்குப் பின்னர் மைத்திரிபால, மஹிந்தவின் புறமொதுக்கலுக்கு ஆளாக நேரிட்டது.

இன்று மஹிந்தவைச் சுற்றி, அவருக்கு ஆதரவளித்து வருவோர் யாவரும் இந்த வரலாறு தெரியாதவர்கள் எனக் கூறினால் அது ஆச்சரியத்துக்கு உரியதொன்றே. இன்று பிரதமர் பதவிக்கான வேட்பாளர் நியமனத்தைப் பெற்றுக்கொள்ள மைத்திரிபாலவின் தீவிர ஆதரவாளர்களை வளைத்துப் போட முயன்று வருகிறார் மஹிந்த. நாடாளுமன்றத்தைத் தற்போது கலைக்காமல் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரொருவரைப் பிரதமர் ஆக்கிப் பார்க்க மைத்திரிக்குக் கயிறு கொடுக்க முயலும் ஒரு தரப்பினர் தற்போது மைத்திரியின் பக்கம் உள்ளனர். அவர்கள் மஹிந்தவின் பழைய எதிரிகளானாலும், இன்று மஹிந்தவின் தாளத்துக்கு ஆடுகின்றனர்.

மைத்திரியையும், ஐ.தே.கட்சியையும் பிளவு படுத்தி மைத்திரியைத் தனிமைப்படுத்தி மைத்திரியின் தந்திர பாதுகாவலராகத் தம்மை ஆக்கிக்கொள்வதே மஹிந்தவின் தற்போதைய திட்டம். இதனைப் புரிந்து கொள்ளாத மைத்திரியைச் சூழவுள்ள ஐ.தே. கட்சிக்கு விரோதமானவர்கள், இன்று மஹிந்தவுக்குக் கொடி பிடிக்க முன்னிற்கின்றனர்.

ஐ.தே.கட்சி அரசமைக்கவிடாது, மைத்திரியின் தலைமையில் சுதந்திரக்கட்சியின் அரசொன்றை நிறுவித் தருமாறு கோருவதன் மூலம் மஹிந்த பிரதமர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கு இவர்கள் பாதை வகுத்துக் கொடுக்கவுள்ளனர்.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐ.தே. கட்சி பெரும்பான்மையுடன் வெற்றியீட்டி அரசமைக்குமானால், தாம் தமக்கு விரும்பிய அமைச்சுப் பதவிகளைப் பேரம்பேசிப் பெற்றுக்கொள்ள இயலாது போய் விடக்கூடும் என அந்தத் தரப்பினர் அஞ்சுகின்றனர். தமக்கு விருப்பமான அமைச்சுப் பதவிகளை மைத்திரியூடாக ஐ.தே.கட்சியை வற்புறுத்திப் பெற்றுக்கொள்ள இயலாது போய்விடும் என்பதே அவர்களது அச்சம்.

முன்னர் மங்கள சமரவீரவும், ஜே.வி.பியினரும் இத்தகைய வழிமுறைகளையே கையாண்டனர். ஐ.தே.கட்சி மீதான தமது வைராக்கியத்தை இவ்விதம் அவர்கள் தீர்த்துக் கொள்ள நினைத்த போதிலும், கடைசியில் அவர்களது பரம எதிரியான மஹிந்தவை ஜனாதிபதியாக்க வேண்டி ஏற்பட்டமைக்குக் காரணம் ஐ.தே.கட்சி மீதான அவர்களது வைராக்கியமே. அப்படியிருந்த போதும் கடைசியில் ஜே.வி.பியைப் பிளவு படுத்தி நலிவுறச் செய்தவர் இந்த மஹிந்தவே.

நான் எனது வாழ்க்கையில் எடுத்த தவறான அரசியல் முடிவுகளிலொன்று, ரணிலின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசை வீழ்த்தும் நோக்கில் நாடாளுமன்றத்தைக் கலைத்தமையாகும் என சந்திரிகா ஒரு கட்டத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறார். மற்றையது மஹிந்தவைப் பிரதமராக நியமித்து, பின்னர் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக்கியதாகும் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

சந்திரிகாவுக்கு நேர்ந்தது நரியைத் தம்முடன் சேர்த்துக் கொண்ட கோழிகளுக்கு நேர்ந்த கதிதான். மஹிந்த இந்த நாள்களில் மைத்திரியின் வீட்டைச் சுற்றிச் சுழல்வதற்குக் காரணம், கோழிகளைச் திருடிசெல்லத் தருணம் பார்த்துச் சுற்றிச்சுற்றி வரும் நரியின் தேடலை ஒத்ததாகும். மைத்திரி தமது கோழிகளை நரியிடம் பறிகொடாது காத்துக் கொள்வாரா? என்பது குறித்துத் தற்போது எதுவும் கூற இயலாதுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## அவர்களுக்கு உணவு நமக்கு நஞ்சு ஆகலாம்

நமது இயல்புக்குத் தக்கபடி நாம் வளர்ந்து முன்னேற வேண்டும். அன்னிய நாட்டுச் சமூகங்கள் நம்மீது ஒட்டவைத்திருக்கும் முறைகளின் வழியில் நாம் செயற்பட முயலுவது வீண் ஆகும். அது நடவாது நம்மைத் திரித்து, மாற்றிச் சித்திரவதை செய்து பிற தேசங்களின் உருவில் ஆக்க முடியாது. இங்ஙனம் அருளிய ஈசனை நாம் போற்றுவோமாக. இதனால் பிற இனத்தவரின் சமூக ஏற்பாடுகளை நான் கண்டிக்கவில்லை. அவை அவர்களுக்கு நல்லது, நமக்கல்ல. அவர்களுக்கு அமுதம் ஆவது நமக்கு நஞ்சு ஆகலாம். நாம் கற்கவேண்டிய முதற்பாடம் இது. இவர்களின் சாஸ்திர ஆராய்ச்சிகளுக்கும் சமூக ஏற்பாடுகளுக்கும் அவர்களது பரம்பரையான கொள்கைகளுக்கும் ஏற்றவாறு அவர்கள் தற்கால நிலையை அடைந்திருக்கின்றனர். நமக்கு நம்முடைய புராதன அனுஷ்டான முறை உள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் கர்மபலன் பின்னணியாக இருக்கிறது. நாம் நமது இயற்கைக்கு ஒத்த முறையில்தான் வளர்ந்து முன்னேற வேண்டும். நமது பாட்டையில்தான் நம்மால் ஓடமுடியும்.

# வாய் நாற்றத்தை தடுக்க..



நல்ல சுவையான உணவுகளை உண்ட பின்னர், வாயிலிருந்து வரும் நாற்றத்தை தாங்கவே முடியாது. ஏனெனில் அதில் பூண்டு, வெங்காயம் போன்றவற்றை அதிகம் சேர்ப்பதால் நாற்றம் ஏற்படுகிறது. ஆகவே நிறைய பேர் சாப்பிட்ட பின்னர், வாய் நாற்றத்தைப் போக்க கடைகளில் விற்கும் நறுமண மிக்க பாக்குகளை, ஏதேனும் சுயிங்கம் களை வாங்கி மென்று கொண்டு இருப்பார்கள். ஆகவே அவ்வாறெல் லாம் கஷ்டப்பட்டு கடைகளில் விற்கும் வாய் நாற்றத்தைப் போக்கும் பொருள் களை வாங்குவதை விட, வீட்டில் இருக் கும் உடலுக்கு ஆரோக்கியத்தையும் தரும் ஒரு சில பொருள்களை மெல்லலாமே!

**ஏலக்காய்:** உணவு உண்ட பின்னர், பாக்குகளை போடாமல் அப்போது சமையலறையில் இருக்கும் ஏலக்காயை வாயில் போட்டு 20 நிமிடம் மென்றால், துர்நாற்றம் இல்லாமல் இருக்கும்.

**கராம்பு:** உணவில் காரம் மற்றும் மணத்துக்கு பயன்படும் பொருளான கராம்பு வாய் துர்நாற்றத்தையும் தடுக்கும். மேலும் ஆயுள் வேதமருத்துவத்தில்கராம்பை சாப்பிட்டால், சளி மற்றும் இருமல் சரியாகிவிடும் என்று சொல்லப்படுகிறது. அத்தகைய சிறப்பான கராம்பு துர்நாற்றத்தை மட்டும் நீக்காமல், தொண்டை கரகரப்பையும் சரிசெய்யும்.

**கொய்யாப்பழம்:** பழங்களில் ஒன்றான கொய்யா, வாய் துர்நாற்றதை நீக்கப் பயன்படுகிறது. ஆகவே வாய் நாற்றம் அடிக்கும்போது, ஆரோக்கியமற்ற பொருள்களை உண்பதை தவிர்த்து, இந்தக் கொய்யாப்பழத்தை சாப்பிட்டால், உடல் ஆரோக்கியமாக இருப்பதோடு, வாய் துர்நாற்றமும் நீங்கும்.

**மாதுளை:** அனைவருக்கும் மாதுளையின் நன்மைகள் தெரியும்.இத்தகைய மாதுளை ஆரோக்கியமான இதயம் மற்றும் பளபளப்பான சருமத்தை தருவதோடு, இதன் விதையை சாப்பிட்டால், வாயில் நாற்றம் ஏற்படாமல் தடுக்கலாம். ஆகவே இனி மேல் கடைக்குச் செல்லும் போது, இந்தப் பழத்தை வாங்கும் பழக்கத்தை வைத்துக் கொண்டால், வாய் துர்நாற்றத்தை தடுக்கலாம்.

ஆகவே மேற்கூறிய பொருள்களைச் சாப்பிட்டால், எந்த ஒரு பக்கவிளைவும் ஏற்படாமல் இருப்பதோடு, உடல் ஆரோக்கியமாகவும், வாய் துர்நாற்றம் இல்லாமலும் இருக்கும்.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 650 | 800 | 700 | 600 | 600 |
| நண்டு | 300 | 600 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 600 | 550 |
| பாரை | 550 | 550 | – | 550 | 400 | 400 |
| சுறா | 600 | 500 | – | 600 | 600 | – |
| சீலா | 350 | 450 | 500 | 450 | 400 | – |
| விளை | 600 | 400 | 400 | 400 | 600 | 350 |
| முரல் | 300 | 400 | 400 | 350 | 300 | – |
| கும்பிளா | 350 | 350 | 400 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 650 | 700 | 400 | 500 | – | 500 |
| ஓரா | 400 | 400 | 300 | 450 | 350 | – |
| திரளி | 250 | 300 | 200 | 300 | 150 | 300 |
| நகரை | 200 | 300 | 200 | 350 | – | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 120 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 300 | – | 350 | 200 | – |
| திருக்கை | 150 | 350 | 100 | 280 | 300 | 140 |
| பாலை | 400 | 350 | 300 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 200 | 100 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 200 | 250 | – | 250 |

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 80 | 60 | 80 | 50 | 60 | 50 |
| கத்தரி | 50 | 60 | 50 | 50 | 30–40 | 40 | 60 | 15–25 |
| கரட் | 240 | 180 | 160–280 | 160 | 200–240 | 240 | 220–240 | 200 |
| மரவள்ளி | 60 | 60 | 50 | 50 | 60 | 40 | 60 | 40 |
| பயிற்றை | 200 | 180 | 140 | 160 | 200 | 120 | 160 | 120 |
| பாகல் | 180 | 160 | 160 | 150 | 160–200 | 120 | 160 | 140 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80–100 | 120 | 140 | 70 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 110 | 100 | 120 | 120 | 90 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 100–120 | 120 | 140 | 140 | 180 | 160 | 120 |
| பூசணி | 30 | 30 | 40 | 25 | 25–30 | 40 | 35 | 20 |
| தக்காளி | 80 | 90 | 100 | 70 | 70–80 | 100 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 40 | 50–60 | 30 | 60 | 50 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 40 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20 | 20 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 140 | 140 | 120 | 140 | 200 | 200 | 160 |
| புடோல் | 70 | 80 | 70 | 100 | 80 | 60 | 80 | 70 |
| கோவா | 100 | 100 | 100 | 100 | 80 | 100 | 100 | 80 |
| வெண்டி | 140 | 120 | 100–160 | 120 | 140 | 80 | 90 | 70 |
| போஞ்சி | 180 | 200 | 280 | 180 | 220–240 | 240 | 200 | 220 |
| லீக்ஸ் | 160 | 170 | 140 | 160 | 160 | 240 | 240 | 160 |
| தேங்காய் | 50 | 30–40 | 60 | 50 | 40–60 | 40 | 40 | .35–40 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 120 | 100–120 | 130 | 100 | 100–140 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 | 140 | 140–160 | 200 | 140 | 90 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 120 | – | 120 | 160 | 200–240 | 120 | 200 | 170 |
| இராசவள்ளி | 120 | – | 120 | 140 | 80–100 | 160 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 | 300 | 300–450 | 200 | 300 | 400 |

## நாளை

**ஆனி-08**
**செவ்வாய்க்கிழமை**
**23.06.2015**
**திதி: ஸப்தமி**
**பி.இ. 03.09 வரை**
**நட்சத்திரம்: பூரம்**
**பி.ப.04.43 வரை**
**சுபநேரம்:**
10.24-11.54 வரை
**இராகுகாலம்:**
02.54-04.24 வரை

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 2 | | | | | | |
| | | | 1 | 5 | 6 | | | |
| | | 8 | | | | | 7 | |
| | 1 | | | | 2 | | | 3 |
| 8 | | 5 | 9 | | 1 | 6 | 4 | 2 |
| 2 | | | 6 | | | | 1 | |
| | 6 | | | | | 9 | | |
| | 2 | | 8 | 1 | 3 | | | |
| | 8 | | | 6 | | 4 | 2 | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக் உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலில் உங்கள் குணம் எப்படி?

**எண் ஆறு**

**பெண்ணுக்குரிய குணம்**

குப்பை மேட்டைக்கூட கோயிலாக்கும் கலை நயம் படைத்தவர். எனது கணவர், எனது குழந்தைகள் தான் உலகம் என்று வாழ்ந்து காட்டக் கூடிய உண்மையான தாய் நீங்கள். அது அது எங்கு இருக்க வேண்டுமென்பதில் தீவிரம் காட்டுவீர்கள். ஓர் ஆசாதார மனைவி என்பதற்கு உண்டான அத்தனை தகுதிகளையும் கொண்டவர் .


**ஆணுக்குரிய குணம்**

காதல் பவித்திரமானது என்று எண்ணுபவர். பெண்ணை மலரெனக் கையாளும் பாங்குடையவர். அழகை ஆராதனை செய்யும் அதே சமயத்தில் கவிதைகளையும் எழுதித் தள்ளுவீர்கள். மணாளனே மங்கையின் பாக்கியம் என்ற வாசகம் உங்களுக்காகவேதான்.

**எண் ஏழு**

**பெண்ணுக்குரிய குணம்**

உடுப்பது, உண்பது, பேசுவது, காதலிப்பது எல்லாமே ஏனோ தானோதான். பணம், பதவி, பகட்டு எல்லாமே உங்களுக்கு அனாவசியம்தான். சராசரிப் பெண்ணின் ஆபாசங்களிலிருந்து வேறுபட்டு தனித்து நிற்கும் ஆபூர்வப்பிறவி நீங்கள். எந்த ஒரு விடயத்திலும் கட்டுப்பாடற்ற தனிக்காட்டு ராணி நீங்கள்.



வெளிவேஷம் போடத் தெரியாதவர்.

**ஆணுக்குரிய குணம்**

சதா சர்வகாலமும் கற்பனை உலகில் சிற கடித்துப் பறக்கும் பண்புடையவர். அதோடு புத்தகமும் கையுமாய் காரண காரியத்தில் ஆராய்ச்சில் மூழ்கி விடுவீர்கள். ஒரு பெண் உங்களைக் காதலிக்க நேர்ந்தாலும் அவள் என்னை ஏன் காதலித்தாள், எந்த அம்சம் பிரதானம், எந்த அடிப்படையில் காதலித்தாள் என்ற ஆராய்ச்சியில் மூழ்கி, நேசிக்க வேண்டியதையெல்லாம் கைநழுவ விட்டு விடுவீர்கள். திருமண வாழ்கை வெற்றியடைவது அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.

**எண் எட்டு**

**பெண்ணுக்குரிய குணம்**

கலை பொருந்திய, கவர்ச்சி நிரம்பிய முகம். முதல் சந்திப்பில் நீங்கள் அகம்பாவம் பிடித்தவர் போல் பழகுவதாக மற்றவர்கள் நினைப்பார்கள். ஆனால் பழகப் பழகத்தான் நீங்கள் இனியவர் என்று உணர்வார்கள். இஷ்டப்பட்டதை அடையத் தவறமாட்டீர்கள். அதிகாரமும், பணமும் உள்ளவரைத்தான் நீங்கள் தேர்தெடுப்பீர்கள். நீங்கள் உணர்ச்சிவசப் படும் பொழுது ஒருவரை இமயமலையின் உச்சியில் கொண்டு உட்காரவும் வைப்பீர்கள். அவரை அதலபாதாளத்திலும் தள்ளுவீர்கள்.

**ஆணுக்குரிய குணம்**

நல்ல தாம்பத்தியத்துக்கு இடையூறாக இருப்பது உங்களின் பொறாமைக் குணம் தான். சமூக அந்தஸ்திலும், பொருளாதார மட்டத்திலும் உயர்ந்து நிற்கும் நீங்கள், சொர்க்க வாழ்க்கையை அடைவீர்கள். வெற்றிகளும், தோல்விகளும் அடுக்கடுக்காக எதிர்பட்டாலும், சிறிதும் மனம் தளராமல் இலட்சியவாதியாகச் செயற்பட்டு வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடித்திடுவீர்கள். நீங்கள் பிறக்கும்பொழுதே சாமர்த்தியமும், புத்திசாலித்தனமும் உங்களுடன் ஒட்டிக்கொண்டிருந்தால் நீங்கள் வெற்றித் திருமகனாக விளங்குவதில் வியப்பில்லை.

**எண் ஒன்பது**

**பெண்ணுக்குரிய குணம்**

உங்களுடன் சேர்ந்து வாழும் வாழ்கை தான் சொர்க்கம் என்று உங்கள் கணவர் கூறும் அளவுக்கு நீங்கள் அன்பும் காதலும் மிக்கவர்.

**ஆணுக்குரிய குணம்**

எறும்பின் சுறுசுறுப்போடும், இலட்சியத்தோடும், உறுதியோடும் செயற்பட்டு அடைய வேண்டியதெல்லாம் அடைவீர்கள். எந்தப் பணியை ஒப்படைத்தாலும் திறம் பட நிர்வகித்து நல்ல நிர்வாகி என்ற பாராட்டைப் பெறுவீர்கள். அரசியலில் நுழைந்தால் மக்கள் அபிமானத் தலைவனாக கொடி கட்டிப் பறக்கலாம்.

# பெண் என்பவள் யார்?

பெண் என்பவள் யார்? அவளின் குணாதிசயங்கள் யாவை? அவளின் எதிர்பார்ப்புக்கள் எவை? அவளிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது? – ஏன்? பெண் என்பவள் ஆணுக்கு ஒரு புதிராகவே எப்போதும் தெரிகிறாள். கடலின் ஆழத்தைவிட ஆழமானது பெண்ணின் மனம் என்பார்கள். உலகில், எழுதப்பட்ட இலக்கியங்களில் பெரும்பங்கு – பெண் என்ற புதிரைப் புரிந்துகொள்ளும் முயற்சியில் எழுதப்பட்டவையாகும்.

அன்பு என்பது என்ன? அது ஒரு இரசாயன மாற்றமா, ஹார்மோன் சுரப்பா, இல்லை வேறு ஏதாவதா? பசிக்கும் போது சாப்பிடுவதைப்போல அன்பு என்பது ஒரு உடலின் தேவையா, இல்லை அதைவிட மேலானதா? பூமியைப் போன்றவள் பெண். அவளுக்கு வேண்டியதெல்லாம் அவள் வீடு, அவள் கணவன், அவள் குழந்தைகள். இதைச் சுயநலம் என்று சொல்வது மிகவும் தவறான கருத்து.

பெண் மட்டும் இப்படி சுயநலமாய் இல்லாவிட்டால், பொதுநலமாய் இல்லாவிட்டால், பொதுநலமான பல ஆண்களின் தாராள மனத்தினால் பல வீடுகள் நடுத்தெருவுக்கு வந்திருக்கும். இரக்கம் இல்லறத்தில் ஆரம்பிக்கிறது என்பார்கள். தனக்கு மிஞ்சினால்தான் தானம். தனக்காகவும், தனது கணவனுக்காகவும் எப்போதும் ஓயாமல் சிந்திப்பவள் பெண்.

ஒரு முட்டையில் கருவின் எதிர் காலத்துக்குத் தேவையான அனைத்து ஊட்டப் பொருள்களும் சேமித்து வைக்கப்பட்டிருப்பதைப்போல, பெண் தனது குழந்தையின் எதிர்காலத்துக்காக அக்கறையோடு சேமித்து வைக்கிறாள்.விதை வளர்வதற்குத் தேவையான நீர், ஒட்சிசன், தாதுப்பொருள்கள் போன்ற எல்லாவற்றையும் நிலமானது சேமித்து வைத்திருக்கிறது. வானம் பொய்த்தாலும், பூமி பொய்ப்பதில்லை. மழையைத் தராமல் வானம் வறண்ட பாலைவனத்தில் கூட எங்கோ ஒரு மூலையில் சோலை இருப்பதைப்போல, பெண் என்பவள் அன்பு என்ற நீரூற்றை உடைய பூமி.

இருளைப் போன்றவள் பெண். வானவெளியில் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது இருள் பூமியில் பாதி வெளிச்சம் மறுபாதி இருள். வெளிச்சத்தில், பகல் வேளையில் உழைத்துக் களைத்த உயிரினங்கள் இளைப்பாற வீடு திரும்புவது இருளில். ஓய்வெடுக்கும் உயிரினங்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து ஆனந்தமாகக் காதல் செய்வதும் இருளில். காதல் செய்த உயிரினங்கள் களைத்துப் போய் தன்னை மறந்து உறங்குவதும் இருளில். எனவே, இருள் என்பது ஓய்வு, இனப்பெருக்கம், அமைதி. இருள் என்பதற்கு இப்படிப் பல நற்குணங்கள் இருந்தாலும், அதற்கு சில எதிர்மறை குணங்களும் உண்டு. இருள் என்பது யாரிடமாவது அடைக்கலம்.



பெண் தனது குழந்தையின் எதிர்காலத்துக்காக அக்கறையோடு சேமித்து வைக்கிறாள்.

தேடும் தன்மை. பெண்களிடம் காணப்படும் எல்லாவிதமான பயங்களும், சகலவிதமான குழப்பங்களும், சந்தேகங்களும் ஒருங்கே உருவெடுத்த ஒரு வடிவம் பெண். அன்பு என்ற நீரூற்று தனக்குள்ளேயே இருந்தாலும் உண்டு. இருள் என்பது பயம். இருள் என்பது பாதுகாப்பற்ற தன்மை. இருள் என்பது யாரிடமாவது அடைக்கலம் தேடும் தன்மை. இருளின் இந்த எதிர்மறையான குணங்களும் பெண்களிடம் காணப்படும் எல்லாவிதமான பயங்களும், சகலவிதமான குழப்பங்களும், சந்தேகங்களும் ஒருங்கே உருவெடுத்த ஒரு வடிவம் பெண். தனது திறமையைத் தானே உணராத இனம். அன்பு என்ற நீரூற்று தனக்குள்ளேயே இருந்தாலும், எப்போதும் அதை வெளியே யாரிடமாவது தேடி அலைபவள் பெண்.

இளம் வயதில் பெற்றோரிடம், பருவத்தில் காதலனிடம், திருமணத்துக்குப் பின்னர் கணவனிடம், தாயான பிறகு குழந்தைகளிடம் என்று எப்போதும் யாரையாவது அண்டியே இருப்பவள் பெண். அவளால் தனது காலில் தானே நிற்க முடியாது என்று பிறர் குறை கூறுவது உண்டு. ஆனால், இது குறையல்ல. இதுதான் நிறை. பிறரிடம் எப்போதும் எதிர்பார்த்து, அதை அவர்கள் தந்தாலும், தராவிட்டாலும் பெண் எப்போதும் தந்து கொண்டேதானிருக்கிறாள். எனவே, அண்டி வாழ்வது பெண்ணுக்கு குறையல்ல நிறை. பெற்றோரைச் சார்ந்து வாழும் குழந்தை அவர்களை ஒன்றாகப் பிணைத்து வைக்கிறது.

காதல் வெற்றி பெற்றால் அதற்குக் காரணம் பெண்ணின் இந்த அண்டிவாழும் குணம்தான். கணவன் – மனைவி இணை பிரியாமல் இருப்பதற்கு காரணமும் இந்தக் குணம் தான். சார்ந்து வாழ்தல், இயல்பானது. ஒன்றும் தெரியாத அப்பாவி ஆணை, தன் வெகுளித்தனத்தை வெளிப்படுத்தி அடப்பாவி ஆணாக்குபவள் பெண். ஒன்றும் தெரியாதது போல் ஒரு பெண் நடித்தால், ஆண்மை பொங்கி எழுகிறது. ஒரு ஆண் அறிவாளியாக மாறித்தானே தீர வேண்டும்? என்னங்க இதைத் திறந்து கொடுங்க என்று மூடியைத் திறக்க முடியாதது போல் பெண் நடித்தால், ஆண்மை பொங்கி எழுவது இயல்புதானே? துருப் பிடித்த மூடியைத்திருகி, கையெல்லாம் சிவந்திருந்தாலும் தனது ஆண்மை வெளிப்பட ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததற்காக ஒரு ஆண் பெண்ணுக்கு நன்றி செலத்துகிறான். அடிமையாகிறான். ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வது இப்படித்தான் தூண்டி விடுபவள் பெண். தூண்டப்படுவது ஆண். செயற்பட வைப்பவள் பெண். செயலைச் செய்வது ஆண். இதைத் தான் நாகரிகமாக செயலுக்கு உள்ளாவது என்கிறார்கள். கிரகிப்பது பெண் எல்லாவற்றையும் கிரகித்து உறிஞ்சி விடுவது பெண்ணின் குணம். ஆண் என்ன தப்பு செய்தாலும், பொய் சொன்னாலும் உடனே பெண் புரிந்து கொண்டு விடுவாள் என்றும் இதற்கு அர்த்தம் சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனா-சந்திரனா



அறிஞர்கள் கூடியிருந்த ஒரு சபையில் மிகவும் பயனுடையது எது சூரியனா? அல்லது சந்திரனா? என்பது குறித்துப் பட்டிமன்றம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அங்கே பேசியவர்கள் பெரும் பான்மையினர் சந்திரனைவிட சூரியனால்தான் உலகத்துக்கு அதிகப் பயன் உண்டு என்ற கருத்தையே வலியுறுத்திப் பேசினர். அப்போது பேசியவர்களை நையாண்டி செய்து வேடிக்கை பார்க்க வேண்டும் என்று முல்லாவுக்குத் தோன்றியது.


அவர் உடனே எழுந்து "அறிஞர் பெருமக்களே, இங்கே நடந்த பட்டிமன்றம் தொடர்பாக எனது கருத்தைக் கூறலாமா?" என்று கேட்டார். "இது பொதுமன்றம், இங்கு யாரும் தங்கள் கருத்தை எந்தவிதத் தடையுமின்றிக் கூறலாம். முல்லா அவர்களே! உங்கள் கருத்தைக் கூறுங்கள்" என்று அறிஞர் பெருமக்கள் கேட்டுக் கொண்டனர். "சூரியனைவிடச் சந்திரனால்தான் உலகத்துக்கு அதிகமான பயன் கிடைக்கிறது என்று நான் கருதுகிறேன்" என்றார் முல்லா. அது எவ்வாறு விளக்குங்கள் என்று அறிஞர்கள் கேட்டனர். "பகலில் நமக்கு இயற்கையாக வெளிச்சம் இருக்கிறது. அதனால் சூரியனுடைய உதவி நமக்குத் தேவையே இல்லை. இரவில் இருளாக இருக்கிறது. சந்திரன் இருளை அகற்றி நமக்கத் தேவையான ஒளியை இரவிலே அளிக்கிறது. அதனால் சந்திரன் தான் நமக்கு அதிகப் பயனை அளிக்கின்றது" என்றார் முல்லா. முல்லா தங்களை நையாண்டி செய்கிறார் என்பதை உணர்ந்து அறிஞர்கள் சிரித்து மகிழ்ந்தார்கள்.

# காகம்



காகம் என்பது பொதுவாக கரிய நிறம் கொண்ட பறவை ஆகும். இது பறவைகளில் கூடுதல் அறிவுத் திறன் பெற்றதாகக் கருதப்படுகிறது. இது மக்கள் வாழும் இடங்களில் அதிகமாக இருந்து கொண்டு அவர்கள் வெளியிடும் குப்பைகளையும், மற்றைய வீண் பொருள்களையும் உண்டு வாழ்கிறது. இதன் காரணமாக சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பில் ஒரு பங்கு வகிக்கிறது. இவற்றை மிக இலகுவாகப் பயிற்றுவிக்க முடியும். காகங்களைப் பழக்கி இலகுவாகச் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுத்த முடியும் என்பதால் இவற்றைச் செல்லப்பறவைகளாக வளர்ப்பது சிலநாடுகளில்சட்டவிரோதமானதாகும். காகங்களில் ஆஸ்திரேலிய, வட அமெரிக்க, ஆபிரிக்க, ஐரோப்பிய, ஆசிய போன்ற நாடுகளில் பல இனங்கள் உள்ளன. கரியன் காகம், வீட்டுக் காகம் ஆகியன ஆசியக் காக இனங்களாகும்.



# பொதுஅறிவுத் தகவல்கள்

- நானோமீற்றர் என்ற அளவைக் கண்டுபிடித்தவர் – ஆல்பர்ட் இன்ஸ்டினா
- உலகிலேயே குரங்குகளுக்குப் பாடசாலை உள்ள நாடு – தாய்லாந்து.
- நெருப்புக் கோழிகளுக்கு தென்னாப்பிரிக்காவில் ஓட்டப்பந்தயம் நடத்துகிறார்கள்.
- முட்டாள் தினம் கொண்டாடும் ஏப்ரல் முதல் நாளை ஜப்பானியர்கள் பொம்மைகள் தினமாக கொண்டாடுகிறார்கள்.
- எந்த வயதில் பல் விழுந்தாலும் மீண்டும் மீண்டும் பல் முளைக்கும் உயிரினம் சுறா மீன்கள்.
- தவளைகள் கண்கள் மூலம் சத்தத்தை கேட்கின்றன.
- மாறு குரல் உடைய ஒரே பறவை குயில் மட்டுமே.
- இரவைவிட பகலில்தான் மேகங்கள் வேகமாக நகருகின்றன.
- மோனலிசா ஓவியம் இடதுகையால் வரையப் பட்டது.

# அழகான உறவு



ஒரு உறவு தோன்றுவது என்பது மிகவும் கடினம். ஆனால் அந்த உறவு பிரிவது என்பது மிகவும் எளிது. குறிப்பாக காதலிக்கும் போது ஆரம்பத்தில் இருவரது வாழ்க்கையும் மிகவும் சந்தோஷமாக செல்லும். ஏனெனில் ஆரம்பத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் ஆர்வத்தில், வாழ்க்கையே சொல்ல முடியாத அளவில் மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் நாள்கள் போகப்போக, அந்த உறவு சிலருக்கு வெறுக்க ஆரம்பித்து விடும். அதனால் பல காதலர்கள் பிரிந்து விடுகின்றனர். இதற்கு பல காரணங்கள் உள்ளன. அந்தக் காரணங்கள் அனைத்துக்கும் தீர்வு கிடைக்கக் கூடியவை தான். ஆனால் அதற்கு மனம் தான் வேண்டும். மனம் இருந்தால், மார்க்கம் உண்டு என்னும் பழமொழிக்கேற்ப, உறவு கள் அலுத்துப் போகாமல் இருக்க வேண்டுமெனில், அந்த உறவை வித்தியாசமான பாதையில் எடுத்துச்செல்லவேண்டியது நமது கடமை. முதலில் உறவுகளில் வெறுப்பு உண்டாவதற்கான காரணங்களைத் தெரிந்து கொள் ளுங்கள். பின்னர் அதனை எப்படி சரி செய்வது என்று யோசித்து வாழ்க்கையை சந்தோஷமாக கொண்டு செல்லுங்கள்.

**பேச்சுவார்த்தையின்மை**

தற்போது வேலைக்கு அனைவரும் செல்வதால், காதலிப்பவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வது என்பது கடினமாகி விட்டது. இதனால் இருவருக்கிடையே போதிய பேச்சு வார்த்தை இல்லாமல், அந்த உறவானது வெறுக்க ஆரம்பித்து விடுகிறது.

**சோம்பேறித்தனம்**

காதல் செய்யும் ஆரம்ப காலத்தில், காதலி , காதலனை எங்கேனும் அழைத்துச் சென்று, நேரத்தை செலவிடுவோம். அதிலும் பூங்கா, கடற்கரை என்றெல்லாம் செல்வோம். ஆனால் நாள்கள் போகப் போக, ஒருவித சோம்பேறித்தனத்தால் எங்கும் செல்லாமல், அவர்களை பார்க்காமல், எந்நேரமும் நண்பர்களுடன் இருப்பது போன்றவற்றால் உறவுகள் வெறுக்க ஆரம்பிக்கின்றன.

**ஒரேமாதிரியான செயல்**

உறவுகள் வெறுக்க ஆரம்பிப்பதற்கு மற்றொரு காரணம் தான், தினமும் ஒரே மாதிரியான செயலில் ஈடுபடுவது. உதாரணமாக, காலையில் அலுவலகத்துக்கு அழைத்துச் செல்வது, மாலையில் அவர்களை மீண்டும் வீட்டில் கொண்டு வந்து விடுவது. இப்படியே சென்றால் வெறுப்பு ஏற்படாமல் பின்னர் எப்படி இருக்கும். ஆகவே அவ்வப்போது வெளியே சினிமா, ஹோட்டல் போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டும்.

**சண்டை**

எதற்கெடுத்தாலும் சண்டை போட்டாலும், உறவுகள் வெறுக்க ஆரம்பித்து விடும். நாளடைவில் அது பிரிவுக்கு வழிவகுத்துவிடும்.

**பிரச்சினைகளை மனதிலேயே புதைப்பது**

துணையுடன் பிரச்சினைகளைப் பகிராமல், மனதில் வைத்துக் கொண்டு இருந்தால், மன அழுத்தம் அதிகரித்து, உறவானது வெறுக்க ஆரம்பித்து விடும். எப்படியெனில், துணையுடன் பகிராமல் இருப்பதால், அலுவலகத்தில் யாரேனும் நல்ல விதமாக பேச ஆரம்பித்தால், அவர்களுடன் அனைத்தையும் பகிர வேண்டிய நிலை ஏற்படும். இதனால் துணையின் மீது வெறுப்பு அதிகரித்து, பிரிவு ஏற்படும்.

**பரிசுகள் இல்லாதது**

காதல் செய்யும் போது ஆரம்பத்தில், காதலி, காதலனை ஈர்க்கும் வகை யில் பரிசுகள் வழங்கிவிட்டு, நாள்கள் செல்லச் செல்ல அதனைத் தவிர்த்தால், இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு, சலிப்பு தட்டி விடும்.

**அதிகப்படியான எதிர்பார்ப்பு**

இதுவரை நம் மனதில் தோன்றும் எதையும் எதிர்பாராத வகையில் செய்து விட்டு, எதிர்பார்க்கும் போது, அதைப் புரிந்து கொண்டு செய்யாமல் இருந்தால், மனதில் ஒருவித சங்கடம் ஏற்பட்டு விடும்.

**வாக்குவாதம்**

எந்தஒரு விடயத்துக்கும் அடிக்கடி வாக்குவாதம் செய்தால், பேச பிடிக்காமல் போய், இருவருக்கும் வாழ்க்கையே வெறுத்துவிடும்.

**போதிய நேரம் செலவிடாமல் இருப்பது**

முன்பெல்லாம், நேரம் பார்க்காமல் அவர்களுடன் வெளியே சென்று, பெரும்பாலான நேரத்தை அவர்களுடன் செலவழித்து விட்டு, நாள்கள் கடந்து செல்ல அது குறைந்தால், உறவுகளில் சலிப்பு ஏற்படும்.

**எரிச்சலூட்டுவது**

யாரேனும் தவறு செய்து விட்டால், அதனை மன்னித்து விடாமல், அதனைப் பற்றிப்பேசிஎரிச்சலூட்டுவது.



**சொல்வதை ஆர்வமின்றி கேட்பது**

வாழ்க்கைத் துணை எதையேனும் ஆர்வமுடன் சொல்ல வந்தால், அதனை அவர்களுக்கு ஆறுத லாக இருந்து கேட்காமல், ஆர்வமில்லாதவாறு கேட்டால், கோபத்தை ஏற்படுத்துவதோடு, கிண்டல் செய்வது போலாகி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விக் கண்காட்சி

நெல்லியடி, ஜூன் 22
நெல்லியடி மத்திய கல்லூரியின் கல்விக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
கல்லூரி அதிபர் ஜி.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (ற–36)

## வலி.மேற்கு பிரதேச கலாசாரப் பேரவைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வலி.மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கூட்டத்தில் பேரவையின் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெறவுள்ளதாக பிரதேச செயலர் ஆ.சோதிநாதன் கேட்டுள்ளார். (ற–4,29)

## கொழும்புத்துறையில் நாளை பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22
கொழும்புத்துறை தியாகராசா வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் நடேசு தயாளன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராசா கலந்து கொள்ளவுள்ளார். (ற–4)

## இரும்பு வியாபாரிகளின் மீது கவனம் செலுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22
குடாநாட்டில் பழைய போத்தல், பித்தளை, இரும்புப் பொருள்களைச் சேகரிக்க வருபவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.
அவர்கள் செல்லும் இடங்களில் பொருள்கள் திருடப்படுகிறன – பொருள்கள் காணாமல் போகிறன. இரும்புப் பொருள் களைச் சேகரிக்க வருபவர்களால்தான் இந்த நிலைமை காணப் படுகின்றது என்று குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.
அதனால் அவ்வாறு செயற்படும் நபர்கள் தொடர்பில் – அத்தகைய வியாபாரத்தைத் தடை செய்வது தொடர்பில் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
யாழ்.வர்த்தக சங்கத்தினருக்கும் குறித்த பொலிஸ் அதிகாரிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அண்மையில் யாழ்.வர்த்தக சங்கத்தில் இடம்பெற்றது. அதன்போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ற–4)

## மூன்றாம் கூட்டணி அமைத்து சு.கவுக்கு துரோகமிழைக்காதீர்

### மஹிந்தவை மறைமுகமாக சாடுகிறார் மைத்திரி

கொழும்பு, ஜூன் 22
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பிளவுபடுத்தி எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூன்றாம் கூட்டணி அமைத்து களமிறங்குவதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சியானது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குச் செய்யும் துரோகமாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாடியுள்ளார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராகக் களமிறக்கப்பட மாட்டார் என ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்ததையடுத்து, மஹிந்த தலைமையில் மூன்றாம் கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சுகள் தென்னிலங்கை அரசியல் களத்தில் தீவிரமடைந் துள்ளன.
இந்நிலையில், நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவுபடுவதற்குத் தனது தரப்பில் ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.
அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:–
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை கட்சி உறுப்பினர்கள் என்னிடம் ஒப்படைத்துள்ளனர். எனவே, கட்சியைப் பலப்படுத்தவேண்டிய கடப்பாடு எனக்கிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளை நான் முன்னெடுப்பேன். எனவே, கட்சியைப் பிளவுபடுத்துவதற்குரிய நடவடிக்கைகளை யார் முன்னெடுத்து வருகிறார்கள் என்பது நாட்டுக்குத் தெரிந்திருக்கும் என நினைக்கிறேன்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இருக்கையில், அதை இரண்டாக உடைத்து பொதுத்தேர்தலில் புதிய கூட்டணி அமைத்து களமிறங்குவது தொடர்பில் தற்போது பேசுகின்றனர். இவ்வாறு பேசுபவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் துரோகமிழைப்பவர்களாவர்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இயக்குவதற்கு வெளியாட்களுக்கு இடமளிக்கக்கூடாது. நான் எவரையும் தட்டிக்கழிக்கவில்லை; நீக்கவும் இல்லை. கட்சியின் தலைமைப்பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகவே, என்னுடன் இணைந்து ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு அனைவரும் முன்வரவேண்டும். இவ்வாறு இணைந்துச் செயற்பட்டு அரசொன்றை நாம் அமைக்கவேண்டும்.
நாட்டை நிர்வகிக்க இரண்டு தலைவர்கள் இருக்கமுடியாது. அவ்வாறிருந்தால் குழப்பங்கள் வரும். அந்த வகையில் அரசியல் கட்சிக்குள்ளும் இரண்டு தலைவர்கள் இருக்க முடியாது. ஆகவே, கட்சித்தலைவர் ஒருவரை நியமித்தால் அவருடன் இணைந்து செயற்படுதல் அவசியம்–என்றார். (த–சி)

## வன்னியூர்க் கவிராயருக்கு சொந்த ஊரில் சிலை திறப்பு



வவுனியா, ஜூன் 22
வவுனியா மாவட்டத்தினதும், வன்னிப் பிரதேசத்தினதும் முன்னோடி கவிஞராகிய வன்னியூர்க் கவிராயருக்கு அவருடைய சொந்த ஊராகிய செட்டிகுளம் இலுப்பைக்குளத்தில் சிலை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.
சர்வ மதத் தலைவர்கள், முன்னோடி இலக்கியவாதிகள், புகழ்பூத்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், ஊர் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.
வன்னியூர்க் கவிராயரின் கவிதைகள், சிறுகதைகள் அடங்கிய தொகுப் புக்கள், அவரைப்பற்றிய பல்வேறு பார்வை கொண்ட பதிவுகளான கட்டுரைத் தொகுப்புக்கள் அடங்கிய விழா மலர் என்பன வைபவரீதியாக வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்த வெளியீடுகளின் முதற் பிரதி சிறப்புப் பிரதி என்பனவும் விருந்தினர்களால் முக்கியஸ்தர்களுக்கு வழங்கப்பட்டது. (ற)

## மற்றொரு பொலிஸூம் கஞ்சாவுடன் கைது

கேரள கஞ்சாவுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அனுராதபுரம் – சாலியபுர இராணுவ முகாமுக்கு அருகில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர் கெலேபுளியங் குளம் பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமில் கடமையாற்றிய ஒருவர் எனத் தெரியவந்துள்ளது. இவரை அனுராதபுரம் நீதிவானிடம் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த வாரமும் கஞ்சா கடத்திய குற்றச் சாட்டில் பொலிஸ்உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (ற–4)

**ஆள் தேவை**

ஐந்து பேர் கொண்ட குடும்பத்துக்கு சமையல் வேலைக்கு ஆள் தேவை.
தொடர்பு:- 075 9910060
917, K.K.S.றோட், யாழ்ப்பாணம்.

**புடைவை விற்பனையாளர் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல புடைவை நிலையத்திற்கு ஆண், பெண் விற்பனையாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
077 308 6894 (61200)

## உயர் பெறுபேறுகளைக் காட்டும் பாடசாலை அதிபர்களுக்கு பயிற்சி

### கல்வியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22
நாட்டின் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பிரதானமான பரீட்சைகள் மூன்றில் உச்சப் பெறுபேறுகளைக் காட்டும் பாடசாலைகளில் 10 பாடசாலைகள் வீதம் தெரிவு செய்து அந்தப்பாடசாலைகளின் அதிபர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சியொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படு மென கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள் ளார்.
பொல்பித்திகம தேசிய பாடசாலையின் தொழில் நுட்ப விஞ்ஞான ஆய்வு கூடத்தை மாணவ, மாணவியருக்குக் கையளிக்கும் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த வேளையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை வெளிப்படுத்தியிருந்தார்.
இந்தப் பாடசாலை அதிபர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி யொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நாட்டிலுள்ள ஏனைய தரங்களிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் அனைவருக்கும் முறைப்படியான பயிற்சியொன்றைப் பெற்றுக் கொடுத்து இந்த நாட்டின் நாற்பது லட்சங்கள் வரையிலான மாணவர்களுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நிதித் தொகைகள் ஒதுக்கப்படுமெனவும் அதன்போது அமைச்சர் தெரிவித்துள்ளார்.
அனைத்து ஆசிரியர்களையும் பயிற்றுவிப்பதற்கு அவசியமான நிதித் தொகைகள் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் இனிமேல் அரசியல் செல்வாக்கின் மீது எந்த விதத்திலும் பாடசாலை அதிபர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவதற்கு இடமளிக்கப்போவதில்லையெனவும் கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ள அத்தகைய செயற்பாடுகள் இனிமேல் இடம்பெறுவதற்குஇடமளிக்கப்படமாட்டாதுஎனவும் கல்வியமைச்சர் இதன் போது தெளிவுபடுத்தியிருந்தார். (ற–22)

## சோழகக் காற்றால் மீனவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22
தற்போது சோழகக் காற்று ஆரம்பித்துள்ளதால் மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் யோகராஜா தெரிவித்துள்ளார்.
கடந்த வாரம் முதல் அதிக காற்று வீசுவதனால் தமது தொழில்கள் பாதிப்படைந்துள்ளதுடன் பிடிபடும் மீன்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது என்றும் அவர் அவர் தெரிவித்தார்.
இந்தக் காற்றால் மயிலிட்டி, வடமராட்சி, வடமராட்சி கிழக்கு போன்ற கடலில் தொழில் புரியும் மீனவர்களும் அதிக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அதிக காற்றினால் கடலின் அலையும், கொந்தளிப்பும் அதிகமாகவுள்ளது. இதனால் கடலுக்குச் செல்ல சில மீனவர்கள் அச்சம் காரணமாக செல்லாமலும், கடலுக்கு செல்லும் மீனவர்களும் போதியளவு மீன்கள் கிடைக்காமல் கரை ஒதுங்குவதனால் மீனவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ற–422)

**கண்ணீர் அஞ்சலி**



யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் அ. **லிங்கராஜ்** அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சலசாதேவி அரியபுத்திரன்**
அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்**
**யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



திருமதி
**மாணிக்கம்மா கந்தசாமி**

மண்ணில்:
22.10.1947

விண்ணில்:
04.07.2014


திதி: 22.06.2015

அன்பாய் பண்பாய் நித்தம் எம்மை அழைத்த தாயே
புன்சிரிப்புடன் வந்தோரை வரவழைத்து புதினம் பல பேசி சிரிக்க வைத்த தாயே
இவ் வையகத்தில் பிறர்மனம் நோகாமல் பார்த்த தாயே
இவ் வையக வாழ்க்கை போதும் என்றோ எம்மை எல்லாம் விடுத்துப் போனீர்
உங்களைத் தேடியே எங்கள் உள்ளம் நித்தம் நித்தம் அழுகிறதே
உங்கள் உருவம் என்றும் எங்கள் கண்முன்னே காட்சி அளிக்கிறது
மீண்டும் நாங்கள் எங்கே உங்களைக் காண்போம்

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேளாண்மை அறுவடைக்காக நவீனயுகத்தில் இயந்திரங்கள் பயன் படுத்தப்பட்டாலும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட முடியாத சேற்று நிலப்பிரதேசங்களில் மனித வளம் மூலம் அறுவடை மேற் கொள்ளப்படுகின்றது. இது மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவு வட்டிக்குளம் வயல் பகுதியில் விவசாயிகள் அறுவடை மேற் கொள்ளும் காட்சி.

# மஹிந்தவை 26இல் சந்திக்கிறது சு.க. குழு

## மோதலை முடிவுக்குக் கொண்டுவர தீவிர முயற்சி

கொழும்பு, ஜூன் 22

மைத்திரி – மஹிந்த மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில், இருவரையும் இணைத்து கூட்டணியை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் விசேட குழுவினருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் எதிர்வரும் வியாழக்கிழமை 25ஆம் திகதி மாலை முதலாவது சந்திப்பு இடம் பெறவுள்ளது.

மேற்படி குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரியுடன் முதற்கட்ட பேச்சுகளை நடத்தியுள்ள நிலையில், அடுத்தாக மஹிந்தவுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது. நாரஹேன்பிட்டியிலுள்ள அபயராம விகாரையில் வியாழக்கிழமை மாலை இந்த முக்கிய சந்திப்பை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ அரசியலை விட்டு விலகினால் கௌரவமான பதவியை வழங்கத் தயாராக இருப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் நியமிக்கப்பட்ட ஆறு பேர் கொண்ட விசேட குழுவிடம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடவோ, தேசியப் பட்டியலிலோ மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்கமுடியாது என்றும், மஹிந்த அரசியலை விட்டு விலகினால் கௌரவமான பதவி ஒன்றை வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரி கூறியுள்ளார்.

இந்தத் தகவல் மஹிந்த ராஜ பக்ஷவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து, மைத்திரிபால சிறிசேன வழங்க முன்வந்த கௌரவப் பதவியை அவர் நிராகரித்துள்ளார். இவ்வாறான நிலையில், மஹிந்தவை சந்தித்து சமாதானப் பேச்சுகளை நடத்த சு.க. குழு தயார் நிலையிலுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் அடுத்த வியாழக்கிழமை இடம்பெறும் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முழுமையான விளக்கமளிக்கவுள்ளதுடன், இது தொடர்பில் அவரின் கருத்துகளையும் அறிந்துகொண்டு அடுத்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக குழுவின் தலைவரும் எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவுமான ஜோன் செனவிரட்ன நேற்றுத் தெரிவித்தார். (ற–சி)

# புலம்பெயர் தமிழரின் விழா நாட்டுக்குப் பெரும் பாதிப்பு

## இப்படிக் கூறுகின்றது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு, ஜூன் 22

புலம்பெயர் தமிழர்களின் விழாக்களை நாட்டில் நடத்துவது நாட்டின் இறையாண்மையினை கேள்விக் குறியாக்கும் செயற்பாடு என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மங்கள சமரவீரவினால் நாட்டுக்கு அனர்த்தமே நேர்ந்துள்ளது. அத்துடன் இந்த வருடத்தின் இறுதியில் இலங்கையில் புலம்பெயர் தமிழர்களின் கொண்டாட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளது. இந்த கொண்டாட்டம் நாட்டுக்கு மரண வீடாகி விடுமோ என்பதும் சந்தேகத்திற்குரியது.

புலம்பெயர் தமிழர்களின் கொண்டாட்டத்திற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு, இலங்கைக்கு 3.2 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளதாக தகவல் ஒன்று பரவிவருகிறது.

எந்த அடிப்படையில் அந்த பணத்தை மனித உரிமை ஆணைக்குழு வழங்கியது என்பதும் கேள்விக்குரியது. புலம்பெயர் தமிழர்களின் கொண்டாட்டம் எந்த நோக்கத்திற்காக நடத்தப்படுகிறது என்பது தெளிவுப் படுத்தப்படவில்லை.

நல்லிணக்கத்தை நான் உட்பட எமது கட்சி எதிர்க்கவில்லை. ஆனால், இப்படியான கொண்டாட்டங்கள் சந்தேகத்திற்குரியன. புலம்பெயர் புலிகள் நாட்டுக்கு ஏற்படுத்திய அழிவு குறித்து இதுவரை மன்னிப்பு கோரவில்லை.

இதனால், புலம்பெயர் தமிழர்களின் கொண்டாட்டம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்.– என்றார். (ற)

# மத போதனைகளின் படியே மஹிந்த செயற்படுகிறாராம்

கொழும்பு, ஜூன் 22

இன அல்லது மத ரீதியான குரோத உணர்வுகளை தூண்டும் வகையில் தாம் ஒரு போதும் செயற்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கட்சியில் பிளவை ஏற்படுத்தும் வகையில் எப்போதும் தாம் செயற்பட்டதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் தாம் ஓர் சிங்கள பௌத்தன் என்பதனை எந்த சந்தர்ப்பத்திலும் மறைக்கவோ மறுக்கவோ இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயினும் தாம் அனைத்து இனங்களையும் மதங்களையும் மதித்து நடப்பதாகவும், பௌத்த மத போதனைகளின் அடிப்படையிலேயே தாம் இவ்வாறு செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# கவனிப்பாரற்ற நிலையில் கொழும்புத்துறை துறைமுகம்

கொழும்புத்துறை, ஜூன் 22

கொழும்புத்துறையில் உள்ள கடற்போக்குவரத்து மற்றும் மீன்பிடிகளுக்கு பயன்படுத்தப்பட்ட பழமை மிக்க துறைமுகம்சேதமடைந்து கவனிப்பாரற்றுக் காணப்படுகிறது.

கடந்த கால போர் நடவடிக்கைகளால் சேதமடைந்து துறைமுகப் பாவனை கைவிடப்பட்ட நிலையில் மீனவர்கள் மீன்பிடி செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். துறைமுகப் பகுதி, அங்குள்ள தங்குமிடம் மற்றும் வீதி எனபன சேதமடைந்து காணப் படுகிறது.

பல நூற்றாண்டுகளாகக் குடாநாட்டுடன் ஏனைய பகுதிகளை இணைக்கும் பிரதான கடற்போக்குவரத்து மார்க்கமாகவும், வர்த்தக, அரசியல் நடவடிக்கைகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமாகவும் கொழும்புத்துறை, இறங்கு துறை விளங்கியது. (ற–135)

# பணக் கொடுக்கல் வாங்கலால் குடும்பஸ்தருக்கு கத்திக் குத்து

## கிளிநொச்சியில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 22

கொடுக்கல் வாங்கல் தகராறு காரணமாக கிளிநொச்சியில் குடும்பஸ்தர் கத்திக்குத்துக்கு இலக்காகி பலத்த காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று அதிகாலை கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் நடந்துள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரம் செபஸ்ரியார் வீதியை சேர்ந்த குணசேகரன் பிரகலாதீபன் என்பவரே கத்திக் குத்திற்கு இலக்கியுள்ளார்.

பண கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இந்த கத்துகுத்து சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்துள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர் (ற–21)

பிரமாண்டமான திறப்பு விழா

விசேட விலைக் கழிவும் பரிசில்களும் உண்டு

அனைவரும் வருக!

யாழ் நகரில் முதன் முதலாக பிரமாண்டமான காட்சி அறை

"கரன் வோச்" இன் புதியதோர் உதயம்

TITAN EXCLUSIVE SHOWROOM

இன்று (22.06.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல. 80/8 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், எனும் முகவரியில் உதயமாகின்றது.

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உங்கள் நல்வரவை நாடும் கரன்வோச் உரிமையாளரும், ஊழியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரேய்னிலேயே வாழ்வதாக உதயங்க வீரதுங்க அறிவிப்பு

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு கடிதம்

கொழும்பு, ஜூன் 22
தாம் உக்ரேய்னில் வாழ்ந்து வருவதாக ரஷ்யாவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க அறிவித்துள்ளார். வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

உக்ரேய்ன் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ததாகசுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் முற்று முழுதாக பொய்யானவை. இலங்கை அரசு என்மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி வருகின்றது.

எனக்கு எதிராக எவ்வித குற்றவியல் விசாரணைகளும் உக்ரேய்ன் அரசால் மேற்கொள்ளப்படவில்லை. இது குறித்து உறுதியளித்த ஆவணமொன்றை அந்நாட்டு அரசு எனக்கு வழங்கியுள்ளது.

உக்ரேய்ன் தலைநகர் கிவில் நான் வாழ்ந்து வருகின்றேன். குற்றச் செயலில் ஈடுபட்டிருந்தால் அங்கு வாழ்வதற்கு அனுமதி எனக்கு வழங்கப்பட்டிருக்குமா?

மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றிய நொயல் ரணவீர வீதி விபத்தில் உயிரிழந்தார். இதன் காரணமாக விசாரணைகள் நடத்தப்படவில்லை. உக்ரேய்னும் ரஷ்யாவும் எனக்கு ஆதரவளித்து வருவதாக எழுத்து மூலம் உறுதியளித்துள்ளது. அரசியல் பழிவாங்கல்கள் காரணமாகவே நான் இலங்கைக்கு மீண்டும் நாடு திரும்பவில்லை.- என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உதயங்க வீரதுங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மிக நெருங்கிய உறவினராவார். மேலும், உதயங்கவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மறுக்கவோ ஏற்றுக்கொள்ளவோ இல்லை என உக்ரேய்ன் அரசு முன்னர் அறிவித்திருந்தது. (ற)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1117

## மரண அறிவித்தல்கள்



**திருமதி திலகரத்தினம் சீவரட்ணம்**

அரசடி வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகரத்தினம் சீவரட்ணம் 18.06.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-கண்ணாம்பிகை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சீவரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-கைராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைரட்ணம் மற்றும் ஞானேஸ்வரி , இராஜேஸ்வரி, சுலோசனாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தேவறஞ்சினி, தில்லைக்குமார் (லண்டன்), பிறேமறஞ்சினி (ஜேர்மனி), கலாறஞ்சினி, வரதகுமார் (சுவிஸ்), சிவறஞ்சினி, திலகறஞ்சினி, செந்தில்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீதரன், றஞ்சினி, சுதாகரன், வரதவித்துவான், துளசிகா, உதயச்சந்திரன், கல்யாணி ஆகியோரின் மாமியும், தபோதினி, சஜீவன், சாம்பவி, அஜீபன், அர்ஜூன், விதுஷா, தரணிகா, அஜிதா, அஜந்தன், அஜானா, சுபாங்கன், சஞ்செயன் ஆகியோரின் பேர்த்தியும், கௌஷகியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2015) திங்கட்கிழமை பி.ப. 02.00 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. 61254

தகவல்:
குடும்பத்தினர்.

---



**சுப்பிரமணியம் மகேந்திரராஜா J.P**
(சின்னத்தான்)

(கொக்குவில் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவில் முன்னாள் செயலாளரும் பொருளாளரும் நல்லூர் மத்தியஸ்தர் சபை உறுப்பினரும் நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச்சங்க பொதுச்சபை உறுப்பினரும் கிளை 12இன் செயலாளரும் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம், அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றின் உறுப்பினரும் கொக்குவில் மேற்கு சி.சி.ரி.எம் தமிழ்க்கலவன் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளரும்)

மூளாயைப்பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகேந்திரராஜா(சின்னத்தான்) 20.06.2015 சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பாக்கியம் தம்பதியினரின் மருமகனும் ஜெகசோதி மலரின் அன்புக் கணவரும் மலர்மதி(பிரான்ஸ்), சுகந்தன்(ஜேர்மனி), நிமலன், தினேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவீந்திரன் (பிரான்ஸ்), கம்ஷத்வனி(ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சுருதி, சுதாங்கி, சந்தோஷ், மான்சி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா லேன் ,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (61251)

தகவல் :-
குடும்பத்தினர்.

---

**சின்னையா கனகராசா**
(வாணி உணவக உரிமையாளர்)



விசுவமடுவைச் சேர்ந்த சின்னையா கனகராசா நேற்று (21.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும், அரவிந்தன் (வாணி ரவல்ஸ்), காலஞ்சென்றவர்களான முகுந்தன், வசிகரன் மற்றும் சுகந்தன் (வாணி உணவகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீதேவி, சுதீஸ், வித்தியாங்கனி ஆகியோரின் அன்பு மாமனும், சரவண்ஜா, கிருத்திகா, சயிதா, சஞ்சிகா, சயன், திவ்யனன், சுருதி ஆகியோரின் பேரனும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2015) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12 ஆம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

76/1, விசுவமடு மேற்கு,
விசுவமடு.

தகவல்:
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

**திருமதி சலசாதேவி அரியபுத்திரன்**



விழிசிட்டி தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் மெமோறியல் லேன் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சலசாதேவி அரியபுத்திரன் நேற்று (21.06.2015) ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் நாகலிங்கம் அரியபுத்திரனின் (சட்டத்தரணியும் பிர சித்த நொத்தாரிசும்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் சிவபாக்கியம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் லிங்கராஜ் (ஆசிரியர், யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி) பரமதாஸ்,ஜனனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அபிராமி (ஆசிரியர் யா/யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை) சுபாசினி (குடும்பநலசேவை உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்திய சாலை) , தர்பாகரன்(உரிமையாளர் ஐங்கரன் மோட்டேர்ஸ் மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் யருஷன், கோவிழி, ஆருக்ஷி, ஆதித்ஜன், அட்சரன் ஆகியோரின் பேர்த்தியும் , காலஞ்சென்ற மயில்வாகனம் , ராஜேஸ்வரி மற்றும் இராசலிங்கம் மகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2015) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :- 021 321 5075
077 904 6474

இல9 ,மெமோறியல்லேன்,
மானிப்பாய். (61253)

தகவல் :-
கணவர்
நா.அரியபுத்திரன்
(சட்டத்தரணியும்,பிரசித்த நொத்தாரிசும்)

---

## மரண அறிவித்தல்

பிறப்பு
1925 . 03 . 06



இறப்பு
2015 . 06 . 21

**திருமதி சரஸ்வதி சபாரட்ணம்**

அத்தியடியைப் பிறப்பிடமாகவும்,கட்டைப் பிராய்,கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சபாரட்ணம் 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-ராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சபாரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகம், பாக்கியம், மயில்வாகனம், சபாரட்ணம், நடராசா, பண்டிதர் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற இராசதுரையின் மைத்துனியும் குகானந்தன்(யுனிக்கோன் ஹாட்வெயார்ஸ், மருதனார்மடம்), குகராணி,இந்திராணி, ஜெயராணி, பிறேமராணி, சிவானந்தன்(கனடா),நிர்மலராணி ஆகியோரின் பாசமிகு த்தாயாரும் மனோமதி, பாலசுப்பிரமணியம்(றோயல் சேவிஸ் ஸ்ரேசன்,சாய்ராம் மோட்டோர்ஸ்), காலஞ்சென்ற யோகேஸ்வரன்(அதிபர்)மற்றும்சிவபாலன்(கனடா),நல்லைநாதன்(கனடா), வத்சலா(கனடா), சிவநேசன்(அதிபர். அரியாலை பார்வதி வித்தியாசாலை) ஆகியோரின் மாமியும், கிஷோன்-வதனி, கௌசிகன், கவிந்தன்,துஷ்யந்தி-முகுந்தன், கோபி- சஞ்சீவினி, பிரியந்தி- பிரதீபன், முரளி-சுஜாதா,நிர்மலன்-ஷோபனா,விமலன்-கௌசல்யா,நிர்த்திகா-ராஜ்குமார், விர்த்திகா- விமலன், அபிரா-மார்க், அபிநயன்,சந்துரு, சிந்துயா- கோபிகிருஸ்ணா,சாமிதா,அட்வன், நிதர்சன், நிரஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகிஷாங்கன், நிஷங்கினி, தரங்கினி, மாதங்கினி,பிரதீன்,கீர்த்திகா, ரிவிஷிகா,மதுஷன், கர்ஷாயினி, லருஷன், யஸ்வின், ஆரணியா,ஹர்ஷான்,பிரித்திகா,ரிஷிகா, சொலரா,ஷேயோன், ஜோவின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆனந்தராசா,
5ஆம் கட்டை ,கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.
021 223 0083

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பை அரசு ஒருபோதும் விட்டுக்கொடுக்காது

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 22
தேசிய பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்படும் வகையில் அரசு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசின் நடவடிக்கைகள் காரணமாக விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாக்கம் பெறுவதாக எதிர்க் கட்சிகள் சுமத்தும் குற்றச்சாட்டு பொய்யானது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

ஜனாதிபதி டி பி விஜேதுங்க கூட கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை விரட்டியடித்தார். – என்றார். (ற)

### நாரந்தனையில்

தொடர்ந்த நிலையில் சில வாரங்களாக அங்குள்ள மக்கள் இரவில் தத்தமது வீடுகளில் தங்கமுடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அந்த வாள்வெட்டுக் குழுவினர் அங்குள்ள வீடுகளுக்குள் நுழைந்து வீட்டுக் கதவுகளைக் கோடரியால் கொத்தி எறிந்துள்ளனர். மற்றொரு வீட்டில் நின்றிருந்த பெறுமதிமிக்க மோட்டார் சைக்கிள் கோடரியால் கொத்தப்பட்டு நாசமாக்கப் பட்டுள்ளது. அதே வீட்டில் உள்ள லான்ட் மாஸ்ரர், சைக்கிள் என்பனவும் அந்தக் கும்பலால் கொத்தியும் கொட்டனால் அடித்து உடைத்தும் நாசமாக்கப்பட்டுள்ளன. ஒரு குடும்பத்தின் தொழில் உபகரணங்கள் கத்தியால் வெட்டிக் கிழிக்கப்பட்டுள்ளதோடு ஏனையவற்றை அவர்கள் பட்டப்பகலிலேயே கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அதற்கு முன்னர் அந்த வீட்டில் நின்ற குடும்பத்தினரையும் அச்சுறுத்தியதோடு ஒருவருக்கு வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர். அவர் இரண்டு கைகளும் இயங்காத நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மற்றொரு வீட்டினுள் நுழைந்த அந்தக் கும்பல் அங்கிருந்த இளைஞனை வாளால் மோசமாக வெட்டியுள்ளனர். வீடு முழுவதும் இரத்தம் சிந்திய நிலையில் அந்த வீட்டிலிருந்த ஏனையவர்கள் உயிர் அச்சம் காரணமாக வேறிடத்துக்குச் சென்று தங்கியுள்ளனர். அந்த வீட்டுக்கு அருகேயுள்ள வீட்டினுள் நுழைந்த வாள்வெட்டுக் கும்பல் வீட்டுக் கதவை உடைத்திருந்த நிலையில் சில நாள்களின் பின்னர் மீண்டும் அங்கு சென்று மின்குமிழ்களை அடித்து உடைத்தும் சிலவற்றைக் கொள்ளையடித்தும் சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாரந்தனை தெற்குக் கிராமத்தினுள் நுழையும்போது அங்குள்ள மக்கள் அச்சத்துடன் இருப்பதனை அவர்களது நடையுடை, உரையாடல்கள் மூலமாக உணரமுடிகிறது.

அந்த வாள்வெட்டுக் கும்பல் இன்னும் அதே கிராமத்தில்தான் சுதந்திரமாக நடமாடுவதாக அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். அவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் உள்ளனர்.

அதுமட்டுமன்றி அவர்கள் அங்குள்ள பனை மரங்களில் ஏறி கள் திருடிக் குடிப்பதோடு பனையில் கட்டப்பட்டிருக்கும் கள் சேமிக்கும் போத்தல்களையும் அறுத்து விழுத்தி விட்டுச் செல்வதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அந்த வாள்வெட்டுக் குழுவினரே இரண்டு வாரங்களுக்கு முன்னர் வீதியில் வைத்து இளைஞர் ஒருவரின் கையை வாளால் வெட்டித் துண்டாக்கியிருந்தனர் என்றும், அதே நாளில் மற்றொரு முதியவர் மீதும் வாள் வெட்டு நடத்தினர் என்றும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

அவ்வாறு வாள் வெட்டு நடந்தால் குறித்த நபர்கள் தமது வீடுகளிலிருந்து தப்பிச் சென்றுவிடுவர். சில நாள்களின் பின்னரே வீடு திரும்புவர். அந்தக் குழுவினர் அங்கு தம்மை அடிமைகளாக நடத்துமளவுக்குச் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக அவர்கள் நேரடியாகவே கூறுகின்றனர்.

அந்த வாள்வெட்டுக் குழுவினரும் பொலிஸாரிடமிருந்து தப்புவதற்காகத் தம்மைப் போலவே இரவில் தம்முடன் வந்து தங்கியிருப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர். அவர்களைத் தட்டிக் கேட்டால் தமக்கும் வாள்வெட்டு நிகழும் என்ற அச்சத்துடனேயே தாம் பொழுதைக் கழிப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

அவ்வாறு நேரடியாகத் தொடர்புடைய 4 பேர் குழுவாக இயங்குகின்றனர். அவர்களில் 3 பேர் வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தக் குழுவினருக்குப் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீதிமன்றங்களில் வழக்குகளும் உள்ளன என்றும் மக்கள் கூறுகின்றனர்.

அவர்களில் ஒருவர் அவ்வாறான திருட்டுச் சம்பவம் ஒன்றில் கைதாகிக் கடந்த வாரம் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் பொலிஸார் அந்தக் குழுவினரை வாள்வெட்டுக்களுடன் தொடர்புபடுத்தி இன்னும் கைது செய்யவில்லை என்றும், வேறு வழக்குகளிலேயே அவர்களைத் தற்போது கைது செய்வதாகவும் கூறுகின்றனர்.

குறித்த குழுவினரைப் பொலிஸார் கைது செய்தாலேயே தாம் இரவில் தத்தமது வீடுகளில் தங்கமுடியும் என்றும் சனநெருக்கம் குறைந்த தமது பகுதியில் தனியே செல்வதும் அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். (த–4)

### பல கட்சி

எடுத்துரைத்துள் ளனர்.

சிறுபான்மை மக்களுக்கு 20 ஆவது திருத்தச் சட்டவரைவு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், குறிப்பாக வடக்கு, கிழக்குக்கு வெளியில் வாழும் மலையக மக்களுக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் இந்த வர்த்தமானி அறிவித்தலை நாம் முற்றாக நிராகரிப்பதாக பிரதமரிடம் எடுத்துரைத்துள்ளனர்.

இது இந்த நாட்டிலே இன்று இருக்கின்ற பலகட்சி அரசியலை முடிவுக்குக் கொண்டுவந்து இரண்டு கட்சி அரசியலுக்கு வழிகாட்டுகின்றது. இரட்டை வாக்குரிமை தொடர்பாகவும், உறுப்பினர் எண்ணிக்கைகள் தொடர்பாகவும் எமக்கு பெரும் முரண்பாடுகள் இருக்கின்றன. அதைவிட இந்த வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் பல கட்சி அரசியலை ஒழிக்கும் திட்டம் இருக்கின்றது. இந்த அபாயத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, கோட்டை நாகவிகாராதிபதி வண. மாதுலுவாவே சோபித தேரர் தமது நிலைப் பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ளார். வர்த்தமானியில் வெளியாகியுள்ள 20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியில் நாம் நடத்தும் போராட்டத்தில் பங்கு வகிக்கவும் அவர் உடன்பட்டுள்ளார் என்பதையும் பிரதமருக்கு எடுத்துரைத்துள்ளனர்.

சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் கருத்துகளையும், கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்ட பிரதமர் பல கட்சி அரசியலை முடிவுக்குக் கொண்டுவரும் யோசனைகளை ஐ.தே.க. ஏற்காது என்றும், நாடாளுமன்றத்தில் இந்த யோசனைகள் கொண்டுவரப்படும்போது எதிர்க்கப் போவதாகவும் கூறியுள்ளார்.

உடன்பாடுகள் எட்டமுடியாவிட்டால் உடன் நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும். தமக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து முக்கியமான பிரச்சினைகள் திசை திருப்பப்படுகின்றன என்றும் பிரதமர் ரணில் கூறியுள்ளார்.

புதிய யோசனைகள் தமது கட்சிக்கு பெரும் கெடுதல்களை செய்யப் போவதாக தோன்றவில்லை என்றாலும் நாட்டில் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிறு கட்சிகள் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் தொடர்பில் தமக்குக் கடப்பாடு இருப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பிரதமர் ரணிலிடம் கூறியுள்ளார். அத்துடன், வடக்கில் தேர்தல் தொகுதிகளைக் குறைக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் தாம் ஏற்கப்போவதில்ல எனவும் கூறியுள்ளார். (த–சி)

### ஐ.நா.

மங்கள சமரவீர, இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஐ.நா. விசாரணை அறிக்கை இன்னும் எழுதிமுடிக்கப்படவில்லை என்று நான் நினைக்கின்றேன். அப்படியிருக்கையில், போர்க்குற்றவாளிகள் எனப் பெயரிடப்பட்டுள்ளோர் 43 பேரா அல்லது 403 பேரா என்று எமக்குத் தெரியாது. அந்த அறிக்கை எழுதிமுடிக்கப் பட்டதாகக் கூறப்படவுமில்லை.

அறிக்கை பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர், செப்ரெம்பர் மாத ஐ.நா. கூட்டத்தொடருக்கு முன்னதாக மூலப்பிரதியொன்று இலங்கைக்கு வழங்கப்படும். அப்போதுதான் எமக்குத் தெரிந்துகொள்ள முடியும். ஆனால், அந்த அறிக்கை வெளியிடப்படும்வரை நாம் காத்திருக்கமாட்டோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டதற்கமைய இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான உள்ளகப் பொறிமுறையை ஸ்தாபிப்போம். அதற்கான பேச்சுகளை நடத்திவருகின்றோம்.

இந்த உள்ளகப் பொறிமுறைக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ–மூனின் பிரதிநிதி தலைமை தாங்கமாட்டார். இலங்கையர் ஒருவர் தான் தலைமையேற்பார். இது குறித்து அவர்களுக்கு நாம் கூறியுள்ளோம். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். (த–சி)

### சோமவன்ஸவின்

எனக்குக் கவலையில்லை. என்னால் தனியாக பணியாற்ற முடியும்.

1989ஆம் ஆண்டு இந்திய பெருங் [illegible]
[illegible]
இருக்கவில்லை" என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான சோமவன்ஸ அமரசிங்க, 1988ஆம், 1989ஆம் ஆண்டுகளில் அக்கட்சியின் கிளர்ச்சிக்கு எதிரான அடக்குமுறையின்போது உயிர் தப்பிய ஒரே ஒரு மத்திய செயற்குழு உறுப்பினராவார்.

மக்கள் விடுதலை முன்னணிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதை அடுத்து நாடு திரும்பிய அவர், கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிலையில், அண்மையில் கட்சியின் தலைமைப் பொறுப்பை அவர் அநுரகுமார திஸாநாயக்கவிடம் ஒப்படைத்ததோடு, அதன் பின்னர் கட்சியின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் அவர் அதிலிருந்து விலகிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)

### நிராகரிக்கப்பட்ட

பிரதமர் வேட்பாளராக நிறுத்த முடியாது என்றும் திட்டவட்டமாகக் கூறி யிருக்கிறார்.

ஜனநாயக ஆட்சி, சட்டத்தின் ஆட்சியை மீண்டும் கொண்டு வருவதாகவும், பெரும் ஊழல்களை ஒழிப்பதாகவும் மக்களிடம் வாக்குறுதி அளித்தே, தான் பதவிக்கு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், மோசமான ஆட்சி மற்றும் ஊழல்களால் நிராகரிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவை எமது கட்சியின் பிரதமர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என்றும் மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியிருக்கிறார்.

எனது தேர்தல் அறிக்கைக்கு ஆறு மில்லியன் மக்கள் அங்கீகாரம் அளித்துள்ள நிலையில் அதற்கு முரணாக எவ்வாறு செயற்பட முடியும் ? என்றும் அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களிடம் கேள்வி எழுப்பியிருக்கிறார். (த–5)

### தேர்தல்

ஆராய்ந்து வருகிறேன். அவர்கள் எப்படி வெற்றி பெற்றார்கள் என்பதை விளக்கும் 'யுக பெரலிய' நூலைப் படித்துள்ளேன். 'எப்படி அவர்கள் இழந்தார்கள்' என்பது தொடர்பாக நூல் ஒன்றை எழுத விரும்புகிறேன்.

மஹிந்த ராஜபக்ஷ அரசை வெற்றி பெற வைப்பதில் நான் தோல்வியடைந்திருக்கிறேன். கூட்டணியின் பரப்புரைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட நான். தோல்விக்கு பொறுப்பு என்று கருதுகிறேன். ஏதோ தவறு நடந்து விட்டது. வரலாற்றில் முதல் முறையாக, நான் ஒரு பரப்புரை மேலாளராக தோல்விக்கான பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன்.

நான் சாதக பாதகங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். தோல்விக்கான காரணங்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன். நான் ஒரு அறிக்கையைத் தயாரிக்கிறேன். அதனை இப்போது வெளியிட விரும்பவில்லை. அது என்னையும் இன்னும் பலரையும் காயப்படுத்தலாம். ஆனால் நான் தோல்விக்குப் பொறுப்பேற்கின்றேன்.

இரண்டு தவறுகள் இடம் பெற்றுள்ளன. ஒன்று எமது அரசினுடையது. அடுத்தது பரப்புரை பக்கம் சார்ந்தது. அதற்கு நான் பொறுப்பேற்கிறேன். தவறு எங்கு நடந்தது என்று அறிக்கை ஒன்றைத் தருமாறு மஹிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார். அதனை நான் அவருக்கு வழங்கவுள்ளேன் என்றும் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (த–5)

### கூட்டமைப்பின்

கூட்டத்திலேயே இவ்வாறு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்குரிய தயார்படுத்தல்களில் ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு அங்கத்துவக் கட்சிகளுக்கும் எத்தனை ஆசனங்கள் ஒதுக்குவது என்பது தொடர்பில் பல சுற்றுப் பேச்சுக்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அதனடிப்படையிலேயே வவுனியாவில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது, யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் 6 பேரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் 2 பேரும், ரெலோ மற்றும் புளொட் சார்பில் தலா ஒவ்வொருவரும் வேட்பாளராக களமிறக்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வன்னித் தேர்தல் தொகுதியில் 9 பேரே வேட்பாளர்களாக களமிறங்க முடியும். ஆனால் அங்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் தலா 3 வேட்பாளர்களையும், புளொட் 2 வேட்பாளர்களையும் நியமிக்க கோருகின்றனர். இதனால் 2 வேட்பாளர்கள் மேலதிகமாகியுள்ளனர். எனவே, கட்சிகளுக்கு இடையில் வேட்பாளர் பங்கீடு தொடர்பில் மீளவும் பேச்சு நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மற்றும் திகாமடுல்ல தேர்தல் மாவட்டங்களில் ஆசனப் பங்கீடுகளில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது. மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் மாத்திரம் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. இது தொடர்பில் அடுத்த வாரம் கொழும்பில் மீண்டும் சந்தித்துப் பேசுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த–5)

### உள்ளக

விசாரணை கள் நடத்துவதற்கு இது ஒன்றும் சியராலியோன் அல்ல.

நீதித்துறை சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் 19 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே முழுமையான விசாரணைகளும் உள்நாட்டிலேயே இடம்பெறும். உள்நாட்டு பொறிமுறை என்றால், அது உள்நாட்டு செயல் முறைகளைக் கொண்டதாகவே இருக்கும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (த–5)

### மைத்திரியின்

இருப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த தகவல் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து, மைத்திரிபால சிறிசேன வழங்க முன்வந்த கௌரவப் பதவியை அவர் நிராகரித்துள்ளார். மக்கள் தன்னை தமக்குச் சேவையாற்ற வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும், அவர் கூறியிருக் கிறார். (த–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாத்தறை. பொல்ஹென கடற்கரையில் ஜெலி மீன்களின் படையெடுப்பு காணப்படுவதால் அந்தக் கடற்கரைக்கு செல்லத் திட்டமிட்டுள்ள பொதுமக்கள், மறு அறிவிப்பு விடுக்கப்படும் வரை அங்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு மாத்தறை பொலிஸ் அறிவித்துள்ளது. கடற்கரையை ஆக்கிரமித்துள்ள ஜெலி மீன்களே இவை.

# நகைச்சுவைப் பாத்திரங்களாக அரசியல்வாதிகள் மாறிவிட்டனர்

## அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 22

அரசியல்வாதி என்றாலே நகைச்சுவை கதாபாத்திரமாக மாறிவிட்டார்கள் என மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சூரியவெவ, முவன்பெலஸ்ஸ பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

விரும்பு வாக்குமுறைமையற்ற தேர்தல் முறைமையொன்றை புதிய ஜனாதிபதி அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

அதன் படி ஒரே கட்சிக்குள் பிரச்சினையை ஏற்படுத்திக்கொள்ளும் தேர்தல் முறைமைக்கு பதிலாக புதிய தேர்தல் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் இன்று அரசியல்வாதி என்பவன் நகைச்சுவைக்குரிய கதாபாத்திரமாக மாறியுள்ளான். எனவே விருப்பு வாக்கு தேர்தல் முறைமை மாற்றப்பட வேண்டும்.– என்றார்.(ற)

# ஐ.ம.சு. கூட்டணி பிளவு படாது

## உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி பிளவுபடாதென பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இரத்மலானை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு தற்போதைய அரசு குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கூட்டணி பிளவுபடும் என பலர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

கூட்டணி பிளவுபடும் என எதிர்பார்ப்பவர்கள் அதன் ஊடாக பிரதி பலன்களை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# தேர்தலை பிற்போடும் திட்டம் எதுவுமில்லை

## ஐ.தே.க. கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 22

தேர்தல் முறைமையை மாற்றுமாறு வேண்டுகோள் விடுப்பது தேர்தலை பிற்போடுவதற்காகவல்ல என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

எந்தவொரு தேர்தல் முறைமையிலும் எப்பொழுதும் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயார் நிலையில் உள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான கூட்டமைப்பு 50 ஆசனங்களையாவது பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

எனினும் ஐக்கிய தேசிய கட்சி தேர்தலை நடத்துமாறே கோரி வருகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# மஹிந்த - மைத்திரியின் படங்கள் பரப்புரைகளில்

## சந்திரிகா ஆலோசனை



கொழும்பு, ஜூன் 22

தேர்தல் பரப்புரையின் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் புகைப் படங்களை பயன்படுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

மாகாணசபை உறுப்பினர்களுக்கு அவர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மாவட்ட மட்டத்தில் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும். மக்களை கவர்ந்து கொள்வதற்காக மைத்திரியும் மஹிந்தவும் இணைந்திருக்கும் படங்களை தேவையென்றால் பயன்படுத்திக் கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார்.

அண்மையில் மேல் மாகாணம் உள்ளிட்ட சில மாகாண சபை உறுப்பினர்களைச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக மேடைகளில் ஏறும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்கா விட்டால் தாம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மஹிந்தவை விமர்சனம் செய்து வரும் சந்திரிகா அவரது படத்தைப் பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ற)

# மீண்டும் புலிகள் எழுச்சி என கூறி மஹிந்தவைக் காப்பாற்ற முயற்சி

## சாடுகின்றார் அமைச்சர் பீ.ஹெரிசன்

கொழும்பு, ஜூன் 22

புலிகள் மீண்டும் எழுச்சி பெற்று விட்டனர் எனக் கூறி மஹிந்த ராஜபக்ஷவை எழுந்திருக்க செய்ய திருடர்கள் முயற்சிப்பதாக அமைச்சர் பீ.ஹெரிசன் தெரிவித்துள்ளார்.

தலாவ பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

சமூக இணையத்தளங்கள் மூலம் நாட்டில் மீண்டும் பயங்கரவாதத்தை ஆரம்பிக்க முயற்சிக்கின்றனர்.

புதைக்கப்பட்ட புலியை எழுந்திருக்க செய்து நாட்டில் மீண்டும் பயங்கரவாதத்தை ஆரம்பிக்க இவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் மீண்டும் எழுச்சி பெற்று விட்டனர் என்று கூறி மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு இணையத்தளங்கள் மக்களை அச்சுறுத்தி வருகின்றன.

இலங்கையில் மீண்டும் பயங்கரவாதம் எழுச்சி பெற இடமில்லை. நிலைமை இப்படி இருக்கும் போது மஹிந்தவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வர முயற்சிக்கும் நரிகள் கூட்டம், புலிகளுக்கு மீண்டும் உயிரூட்ட முயற்சித்து வருகிறது.

தலதா மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்திய கருணாவுக்கு மஹிந்த பால் ஊட்டினார். அது மாத்திரமல்லாமல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் பதவியையும் வழங்கினார்.

கே.பியை அரவணைத்து கொண்டு கே.பியின் கப்பல்கள், புலிகள் அமைப்பிடம் இருந்த தங்கம் என்பவற்றை மஹிந்தவே கொள்ளையிட்டார்.

கொரக்கா புளியை வேட்டை இறைச்சியாகவும் வேட்டை இறைச்சியை கொரக்கா புளியாகவும் மாற்ற மஹிந்த திறமை படைத்தவர். நாட்டுக்கு மக்களுக்கு நினைவிருக்குமோ தெரியவில்லை, ரத்துபஸ்வலயில் தண்ணீர் கேட்ட மக்களுக்குதோட்டக்களைக் கொடுத்தனர். சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் இளைஞர், யுவதிகளின் உரிமைகளுக்கு பதிலாக தோட்டாக்களினால் பதிலளித்தனர்.– என்று தெரிவித்தார். (ற)

# வீதி ஒழுங்குகளை சரியாக கடைப்பிடிக்கக் கோரிக்கை

காத்தான்குடி, ஜூன் 22

வீதி ஒழுங்குகளை சரியான முறையில் கடைப்பிடிக்குமாறு காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.பி.வெதகெதர பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மட்டக்களப்பு பகுதியில் காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் வாழைச்சேனைப் போன்ற பகுதிகளில் அதிகமாக வாகன விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகப்பதிவாகியுள்ளது.

மேலும் குறித்த பகுதிகளில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகமாக ஏற்படுவதாகவும் விபத்துக்குள்ளானவர்கள் அனைவருக்கும் தலைகளிலேயே காயங்கள் ஏற்படுகின்றன. இதற்கு தலைக் கவசம் அணியாமை தான் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லா இடங்களிலும் பொலிஸார் கண்காணிப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும் மோட்டார் சைக்கிளை பயன்படுத்துபவர் தன்னளவில் சிந்தித்துச் செயற்படாதவரை இவ்வாறான விபத்துக்களை தவிர்ப்பது சிரமமானது.

வாகன விபத்துக்களை தடுக்கும் முகமாக பொது மக்கள் அனைவரிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாகன விபத்துக்கள் அதிகம் ஏற்பட மதுபாவனை மற்றும் போதைப் பொருள் பாவனைகள் அதிகரித்து வருகின்றமையும் காரணமாக அமைகின்றது.

மது பாவனை மற்றும் போதைப் பொருள் பாவனைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்போது தான் இவ்வாறான குற்றச் செயல்களை நூறு வீதம் கட்டுப்படுத்த முடியா விட்டாலும் ஐம்பது வீதம் அல்லது எண்பது வீதமளவிற்கு கட்டுப்படுத்த முடியுமாக இருக்கும். ஊடகங்களும் இந்த விடயத்தில் உச்சபங்களிப்பை வழங்க வேண்டும்.– என்றும் அவர் தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

**மாவட்ட தாச்சித் தெடர்**

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மறுமலர்ச்சி அணியை எதிர்த்து புதுமடம் வைகறை அணி மோதவுள்ளது. (ம–23)

**கொலின்ஸ் வி.க.தொடர்**

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பிற்பகல் 3.30 மணிக்கு பலாலி விண்மீன் வி.கழகத்தை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் வி.கழகமும் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் தொண்டமனாறு ஒற்றுமை வி.கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் வி.கழகமும் மோதவுள்ளன. (ம–108)

# யாழ். மாவட்ட உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட பெண்கள் அணி அசத்தல்





மாங்குளம் ஜூன் 22

வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்ட மற்றும் வலைப்பந்தாட்ட தொடர்களில் யாழ். மாவட்டச் செயலகஅணி சம்பியனாகியுள்ளது.

**உதைபந்தாட்டத் தொடர்**

குறித்த தொடர்களின் இறுதியாட்டங்கள் நேற்று நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. பெண்களுக்கான உதைபந்தாட்டத்தில் யாழ். மாவட்ட செயலக அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட செயலக அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்தது முதல் யாழ். மாவட்ட செயலக அணியினரின் ஆதிக்கம் வலுவாக அமைந்திருந் தது. இதனால் கோல் போடும் எண்ணத்தை கைவிட்டு யாழின் கோல்களை தடுக்கும் வியூகத்தில் இறங்கினர் கிளிநொச்சி மாவட்ட செயலக அணியினர். மைதானத்தில் இவ்வாறான போராட்டம் நிலைபெற்றிருந்த பொழுது கிளிநொச்சி அணியின் முறையற்ற ஆட்டம் ஒன்றுக்காக யாழுக்கு சார்பாக தண்டனை உதை கிடைத்தது. வாய்ப்பை சரியாக பயன்படுத்திய ஜெசிந்தா முதல் கோலினை பதிவுசெய்ய ஆட்டத்தின் முதல் பாதி 1:0 என்று யாழின் ஆதிக்கத்துடன் நிறைவுக்கு வந்தது. இயல்பாகவே வெற்றிவாய்ப்புடன் களமிறங்கிய யாழுக்கு இரண்டாம் பாதியின் ஐந்தாவது நிமிடத்தில் மற்றுமொரு கோல். பதிவுசெய்யப்பட அதன் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. யாழ் மாவட்டத்தின் ஆதிக்கம் தொடரப்பட முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது.

**வலைப்பந்தாட்டத் தொடர்**

வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட செயலக அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட செயலக அணி மோதியது. தடுமாற்றங்கள் தடைகளாக அமைய ஆரம்பம் முதலே சரிவைச் சந்தித்தது வவுனியா. இதனால் ஆட்டத்தின் முதல் பாதியில் 12:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ். மாவட்ட செயலக அணியினர் முன்னிலை வகித்தனர். ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் யாழின் ஆட்டத்தில் மேலும் அனல் பறந்தது. முடிவில் 52:11 என்ற மிகப்பெரும் வித்தியாசத்தில் வவுனியாவை ஊதித் தள்ளியது யாழ். (ம–422)





வடமாகாணகல்வித் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் வவுனியா வடக்கு கல்வித் திணைக்களத்தினால் கொழும்புப் பயிற்சியாளர்களின் உதவியுடன் 100 மாணவர்களுக்கான மெய்வன்மை, கரப்பந்தாட்டம் ஆகியவற்றின் பயிற்சி முகாம்கள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. குறித்த நிகழ்வின் சில பதிவுகள். (ம–422)

## வீரர்களைத் தாக்கிய ரசிகர்கள் மாகாண உதைபந்தாட்ட இறுதியாட்டம் கைவிடப்பட்டது

பார்வையாளர்கள் மைதானத்தில் நுழைந்து வீரர்கள் இருவரைத் தாக்கியதையடுத்து மாகாணமட்ட உதைபந்தாட்ட இறுதியாட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது.

வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியும் யாழ்.மாவட்ட அணியும் நேற்று பருத்தித்துறை ஹாட்லி மைதானத்தில் மோதிக் கொண்டன.

ஆட்டத்தின் முதல்பாதியின் 20 ஆவது நிமிடத்தில் மன்னார் மாவட்ட அணியின் சார்பாக முதல் கோல் பதிவாக ஆட்டத்தின் முதல்பாதியில் மன்னார் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியின் 20 ஆவது நிமிடத்தில் மன்னார் மாவட்ட அணியின் வீரரொருவர் உதைத்த பந்தை தடுக்க முனைந்து ஒன்கோலாக மாற்றினார் யாழ். வீரரொருவர். தற்பொழுது நிலைமை 2:0.மன்னாருக்கு வெற்றியென்ற நிலைமை மைதானத்தில் எதிரொலித்தாலும் விடுவதாக இல்லை யாழ். மாவட்ட வீரர்கள். போராட்டத்தின் பயனாக ஆட்டத்தின் 37ஆவது நிமிடத்தில் யாழின் முன்களவீரர் நிதர்சன் கோலொன்றைப் பதிவுசெய்ய யாழின் நம்பிக்கை துளிர்த்தது. தொடர்ந்து புயல் வேகத்தில் செயற்பட்ட யாழ். மாவட்ட வீரர்கள் ஜக்சனின் உதவியுடன் இரண்டாவது கோலையும் போட மைதானமே அல்லோலகல்லோலப்பட்டது.ஆட்டம்நிறைவடைய ஐந்து நிமிடம் இருக்கையில் ரசிகர்கள் சிலர் மைதானத்துக்குள் புகுந்து மன்னார் வீரர்களைத்தாக்க ஆட்டம் தடைப்பட்டது.தொடர்ந்துவிளையாட மன்னார் வீரர்கள் மறுப்புத் தெரிவித்த காரணத்தினால் ஆட்டம் கைவிடப்பட்டது. (ம–108)

## 93ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு விளையாட்டு விழாக்கள் நேற்று முன்தினம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 22

93ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்திய விளையாட்டுவிழா நேற்றுமுன்தினம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

சமாசத்தின் தலைவர் இலகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். குறித்த நிகழ்வில் சமாசத்தின், 30இற்கும் மேற்பட்ட அங்கத்துவக் கழகங்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம–17)



## வடமாகாண ஆண்களுக்கான பளுதூக்கல் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பளுதூக்கல் போட்டியில்ஆண்கள்பிரிவில்வெற்றி பெற்ற வீரர்களின் விவரங்கள் வருமாறு.

**19வயதுப்பிரிவு ஆண்கள்**

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான 56 கிலோ பிரிவில் யாழ்.இந்துக் கல்லூரியின்வீரர்களான அஜிதரன், கவீச்சரன், வேதகுலன் ஆகியோர் முறையே முதல் மூன்று இடங் களையும் கைப் பற்றினர்.

**56–62 கிலோ பிரிவு**

19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 56–62 கிலோ பிரிவில் யாழ். மத்திய கல்லூரியின் கஜனன் முதலாம் இடத்தையும் யாழ். இந்துக்கல்லூரியின் வீரர்களான பிரகலாதன், சுயனியன் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களையும் கைப்பற்றினர்.

**62–69 கிலோ பிரிவு**

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான 62–69 கிலோ பிரிவில்; யாழ். இந்துக் கல்லூரியின் எடின்வூட் முதலாம் இடத்தையும் மன்னார். சென். ஆன்ஸின் பிரசாந் பெர்னாண்டோ இரண்டாம் இடத்தையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் தர்சிகன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

**69–79 கிலோ பிரிவு**

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான 69–79 கிலோ பிரிவில்; யாழ். இந்துக் கல்லூரியின் விஸ்ணுகாந் முதலாம் இடத்தையும் அதே பாடசாலையின் இந்துசன் இரண்டாம் இடத்தையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் தர்சன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**77–85 கிலோ பிரிவு**

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான 77–85 கிலோ பிரிவில்; யாழ். இந்துக் கல்லூரியின் விதுசன் முதலாம் இடத்தை கைப்பற்றினார்.

**85–94கிலோ பிரிவு**

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான 85–94 கிலோ பிரிவில்; யாழ். மத்திய கல்லூரியின் நிலக்ஸ்குமார் முதலாமிடத்தையும் யாழ். இந்துக் கல்லூரியின் அன்புராஜ் இரண்டாம் இடத்தையும் அதே கல்லூரியின் சிவறூபன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

**94–105 கிலோ பிரிவு**

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான



94–105 கிலோ பிரிவில்; யாழ். இந்துக் கல்லூரியின் நித்தியபிரசாந் முதலிடத்தையும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் சாரங்கன் இரண்டாம் இடத்தினையும் தும்பளை சைவப் பிரகாச வித்தியாலயத்தின் கரண்ராஜ் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

**105 கிலோவுக்கு மேல்பிரிவு**

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான 105 கிலோவுக்கு மேலான பிரிவுப் போட்டியில் யாழ்.இந்துக்கல்லூரியின் தேசிகன் முதலாம் இடத்தையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் கதிரகன் இரண்டாம் இடத்தையும் யாழ். இந்துக் கல்லூரியின் மைத்திரிரேசன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

**பாடசாலைகளின் தரப்படுத்தல்**

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட ஆண் களுக்கான பளுதூக்கலில் யாழ். இந்துக்கல்லூரி 235 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், யாழ்.மத்திய கல்லூரி 65 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் 43 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் சுருண்டது இலங்கை



இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் பத்து இலக்குகளால் மிக இலகுவான வெற்றியைப் பதிவுசெய்து 1–0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க முதல் இன்னிங்ஸிற்காக இலங்கை சகல இலக்குகளையும் இழந்து 300 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சில்வா 125 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸிற்காக 417 ஓட்டங்களைக் குவித்து 117 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. அதிகபட்சமாக பிக் 131 ஓட்டங்களைக் குவித்தார்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 117 ஓட்டங்களை பெறவேண்டும் என்ற கட்டாய நிலைமையில் களமிறங்கிய இலங்கை நான்காம் நாள் முடிவில் 63–2 என்ற நிலைமையில் இருந்தது. ஐந்தாம் நாளுக்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாட கருணாரத்ன 36 ஓட்டங்களுடனும் பெரேரா ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலைமையிலும் களமிறங்கினர். ஓட்டம் எதனையும் பெறாத நிலைமையில் ஓட்டம் பிடித்தார் பெரேரா. திரிமன்னேயும் நிதானத்தைக்காட்ட இலங்கை மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டிப்பிடித்தது. அணியின் ஓட்டம் 132ஆக இருந்தவேளையில் பவிலியன்திரும்பினார் திரிமன்னே. வந்த வேகத்தில் விடைபெற்றார் மத்தியூஸ். சந்திமால் நிலைத்து நிற்க மறுமுனையில் கருணா ரத்னவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பின்வரிசை வீரர்களும் ஒற்றையி லக்கத்துடன் ஒருவர் பின்னால் ஒருவராகச் செல்ல முடிவில் இலங்கை 206 ஓட்டங் களில் சுருண்டது.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்ற 117 ஓட்டங்கள் கைகொடுக்க பாகிஸ்தானுக்கு வெற்றியிலக்கு வெறும் 90 ஓட்டங்கள் மட்டுமே. களத்தில் ஐசாட் மற்றும் ஹபீஸ். இருவருமாக இணைந்து இலங்கையின் பந்துவீச்சுக்களை பிரித்து மேய்ந்தனர். வெள்ளை உடையில் ரி–20 ஆட்டம் அரங்கேறிக்கொண்டிருந்தது. ஒரு இலக்கையேனும் வீழ்த்த முடிய வில்லை இலங்கைப் பந்துவீச்சா ளர்களால். முடிவில் 11 பந்துப்பரி மாற்றங்களில் இலக்கை ஊதித்தள்ளியது. ஆட்டநாயகனாக அஹமட் தெரிவானார். (ம)



## டோனி குற்றமற்றவர்

ரித்தி ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தில் டோனிக்கு இரட்டை லாபம் உள்ளது என்ற குற்றச்சாட்டை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவரான டால்மியா நிராகரித்ததுடன் டோனி நிரபராதி என்றும் தெரிவித்துள்ளார்.

டோனி தொடர்பாக டால்மியா தெரிவித்ததாவது டோனி தொடர்பாக சமீபகாலமாக முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் உண்மையில் கவலை தருகிறது. டோனி குற்றமற்றவர் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவிப்பதுடன் டோனி தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளையும் நிராகரிக்கிறது. என்றார்.

(ம)

## அதிருப்தி

இந்தியா – பங்களாதேஷ் தொடருக்காக இந்திய வீரர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள விடுதி தொடர்பாக இந்திய வீரர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

விடுதி அமைந்துள்ள இடம் சனநெருக்கடி மிகுந்த இடம் என்ற காரணத்தினாலும், பங்களாதேஷ் ரசிகர்கள் கிரிக்கெட்டில் தீவிர ஆர்வம் காட்டுபவர்கள் என்ற காரணத்தினாலும் விடுதிக்கு வெளியே இந்திய வீரர்கள் வந்ததும் பங்களாதேஷ் ரசிகர்கள் மொய்த்துக் கொள்கிறார்கள். இதனால் வீரர்கள் வெளியே செல்லமுடியாமல் தொடர்ந்து அடைபட்டிருக்கவேண்டிய நிலைமை காணப்படுகிறது. இதனால் இந்திய அணியின் நிர்வாகம் வேறு விடுதிக்கு மாற்றுமாறு கேட்டுள்ளபோதிலும் பாதுகாப்பு காரணங்களுக்காக பங்களாதேஷ் கிரிக்கெட் இந்த விண்ணப்பத்தினை நிராகரித்துள்ளதுடன் வீரர்கள் சுதந்திரமாக நடமாடுவதுக்கு ஏற்ற வகையில் அதிகப்படியான பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்க உறுதியளித்துள்ளது. (ம)

## காந்திஜி, இருதயராஜா அடுத்த சுற்றுக்குள்



அனல் பறந்த ஆட்டங்களில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேறின ஊர்காவற்றுறை காந்திஜி வி.கழகம் மற்றும் நெரிஞ்சிமுனை இருதயராஜா வி.கழகம்.

**காந்திஜி வி.கழகம் எதிர் கலைமதி வி.கழகம்**

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஊர்காவற்றுறை காந்திஜி வி.கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி வி.கழகம் மோதியது. இதில் 1:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது ஊர்காவற்றுறை காந்திஜி விளையாட்டுக் கழகம்.

**இருதயராஜா எதிர் ஞானமுருகன்**

குறித்த நாளில் இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நெரிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதிக்கொண்டது. ஆட்டத்தின் முதல்பாதியில் பந்து அங்கும் இங்கும் அல்லோல கல்லோலப்பட்டதுதான் மிச்சம் கோலெதுவும் பதிவாகவில்லை. ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் இதே சமநிலை நீடிக்கும் என்ற எதிர்பார்ப்புக்கள் இருந்த போதிலும் மூன்றாவது நிமிடத்திலேயே நெரிஞ்சி முனை இருதயராஜா விளையாட்டுக்கழகத்தின் வீரரான ஜெமிலியானுஸ் அற்புதமானகோல் ஒன்றைப் போட இருதயராஜாவின் ஆதிக்கம் அதிகமானது.

ஏற்கனவே இருதயராஜா விளையாட்டுக் கழகத்தின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியான நிலையில் மற்றொருவீரரான அருள்ராஜ் மேலும் ஒருகோலைப் போட்டு அவ்வணியின் வெற்றியை நிச்சயமாக்கினார். மேலதிக கோல் எதனையும் போட முடியாத நிலையில் நெரிஞ்சி முனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம–108)

## பலமாக வீசியது தென்றல் வீழ்ந்தது வைகறை

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7.மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து நவாலி தென்றல் அணி மோதிக் கொண்டது. இதில் நவாலி தென்றல் அணி 7:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம–08)

## 7 வருடத்தொடரின் பின்னர் சாதித்தது உடுவில் மகளிர் கல்லூரி





யாழ்ப்பாணம், ஜூன் 22


கூடைப்பந்தாட்டத் தொடரில் 7வருடங்களின் பின்னர் வடமாகாண சம்பியன் ஆனது உடுவில் மகளிர் கல்லூரி அணி.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது.

இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் அணி மோதிக்கொண்டது. ஆட்டம் ஆரம்பித்தது முதல் ஆதிக்கம் செலுத்திய உடுவில் மகளிர் கல்லூரி முதல்பாதியின் முடிவில் 27:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது

ஆட்டத்தின் இரண்டாம் பாதியிலும் தொடர்ந்து ஏக ஆதிக்கம் செலுத்திய உடுவில் அணி 60:38 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மாகாணச் சம்பியன் ஆனது. (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலிடத்துக்கு சிமித் தகுதியில்லை

டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் முதல் இடத்திற்கு முன்னேறியுள்ள ஆஸ்திரேலியாவின் சிமித்; சிறந்த துடுப்பாட்ட வீரர் அல்ல என்று இங்கிலாந்தின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் தெரிவித்துள்ளார்.

சிமித் தொடர்பாக ஸ்வான் தெரிவித்ததாவது:-

சிமித் டெஸ்ட் தரவரிசையில் முதல் இடத்தைப் பிடித்தது. எனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. அவர் ஒரு சிறந்த வீரர் என்று நான் நினைக்கவில்லை. இதுவரை அவர் சிறந்த கிரிக்கெட் நுட்பத்தை பெற்றுள்ளார் என்றும் நான் நினைக்கவில்லை. உட்திரும்பல், வெளித்திரும்பல் பந்துக்கு எதிராக அவர் விளையாடும்போது கிரிக்கெட் நுட்பத்தின் குறைபாடு மற்றும் அவரது பலவீனம் வெளிப்படும் என்றார்.


கடந்த வருடம் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான தொடரில் அதிக ஓட்டங்களை அடித்த சிமித், தற்போதைய மே.தீவுகளுக்கு எதிரான தொடரில் 2ஆவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற முக்கிய காரணமாக இருந்தார். விரைவில் தொடங்கவிருக்கும் ஆஷஸ் தொடரில் இங்கிலாந்துக்கு பெரும் தலைவலியாக இருப்பார் என்ற கருத்து நிலவிவரும் நிலையில் ஸ்வானின் கருத்து அனைவருடைய புருவத்தையும் உயர்த்தியுள்ளது. (ம)

# தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து நியூஸியின் வெற்றியை இல்லாமல் செய்தது மழை

இங்கிலாந்து நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்தாவது ஒரு நாள் ஆட்டத்தில் வருணபகவான் பக்கபலமாக இருக்க நியூஸிலாந்தை 3 இலக்குகளால் வெற்றிபெற்று 3-2 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது இங்கிலாந்து.

இரு அணிகளும் தலா இரண்டு ஆட்டங்களை வெற்றிபெற்ற காரணத்தினால் இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணிக்கே கிண்ணம். இந்த திரில் நிலைமை ஆட்டத்தை மேலும் பரபரப்பாக்கிவிட கிரிக்கெட்டின் தாயகத்துக்கு ஏராளமான மக்கள் ஆதரவுடன் ஆட்டம் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் குப்திலுடன் மக்கலம். முதல் பந்துப்பரிமாற்றத்தின் இரண்டாவது பந்தே மக்கலத்தின் துடுப்பில் இருந்து சிக்சராக பறந்தது. ஆனால் அதே பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தில் மக்கலத்தை போல்ட்டாக்கி பழிதீர்த்தார் பின். களத்தில் வில்லியம்சன். தொடரின் அனைத்து ஆட்டங்களிலும் நியூஸிலாந்துக்கு மிகப்பெரும் ஆறுதலாக அரைச்சதம் சதம் எண்டு விளாசித்தள்ளியவர் நேற்றைய ஆட்டத்திலும் தனது திறனை முத்திரை பதிக்க தவறவில்லை. குப்திலும் ஒருமுனையில் பொறுப்புணர்ந்து ஆட மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நியூஸிலாந்து நூறு ஓட்டங்களை எட்டியது. அதே நேரத்தில் அரைச்சதத்துடன் வில்லியம்சனின் ஆட்டம் நிறைவுக்கு வரவும் செய்தது. வில்லியம்சனின் இடத்தை பக்காவாக நிரப்பினார் ரெய்லர். மற்றும் ஒரு சொல்லிக்கொள்ளும் படியான இணைப்பாட்டம். அணியின் ஓட்டம் 150ஆக இருந்த பொழுது ஆட்டமிழந்தார் குப்தில். கடமைக்கு வந்துசென்றார் சான்நெர். மீண்டும் பலவீனமடைந்த நியூஸிலாந்தை எலியாட்டும், வீலரும் தமது வாணவேடிக் கைகளுடன் கௌரவ இலக்கை நோக்கி அழைத்துச் சென்றனர். முடிவில் நியூஸிலாந்து 283-9.




இங்கிலாந்து துடுப்பெடுத்தாட முன்னர் மழை குறுக்கிட 26 பந்துப் பரிமாற்றங்களில் 192 இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. கிட்டத்தட்ட ரி-20 பாணியில் பார்க்கின்ற பொழுது எட்டக்கூடிய இலக்குத்தான். மழை ஆடுகளத்தை பந்துவீச்சுக்கு சாதகமாக மாற்றிவிட இங்கிலாந்தின் ஆரம்பம் ஆட்டம் கண்டது. ஒன்பது ஓட்டங்களுக்கு ஒரு இலக்கு என்ற அடிப்படையில் 45 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள் சரிந்து முடிந்திருந்தன. நியூஸிலாந்தின் பக்கம் வெற்றிக்காற்று பலமாக வீசிக்கொண்டிருந்தது. சொந்த மண்ணில் கிரிக்கெட்டின் தாயகம் சுருளப்போகிறது என்று எதிர்பார்த்திருந்த வேளையில் ஆட்டத்தின் போக்கினை அப்பிடியே மாற்றினார் பிரிஸ்ரொவ். மத்தியவரையில் களமிறங்கி கிரிக்கெட்டின் தாயகத்துக்கு புத்துணர்ச்சி கொடுத்து அரைச்சதம் கடந்தார். பில்லிங்ஸிம் நம்பிக்கை கொடுக்க முடிவில் இங்கிலாந்து 25 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கினை எட்டி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

ஆட்டநாயகனாக இறுதிவரை ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களை விளாசிய பிரிஸ்ரொவ்வும் தொடராட்ட நாயகனாக வில்லியம்சனும் தெரிவானார்கள். (ம)

## இதுவே மெஸ்ஸியின் மகிமை



தென்னமெரிக்க கால்பந்து தொடர் சிலியில் நடைபெற்று வருகிறது. இதல் ஜமைக்கா அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆர்ஜென்டினா 1-0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

ஜமைக்கா தோல்வியடைந்தாலும் அந்த அணியின் வீரர் பிரவுன் தோல்வியை மறந்து மெஸ் ஸியிடம் சென்று செல்பி எடுக்க கேட்டுள்ளார். சிரித்த முகத்துடன் அதற்கு ஒத்துக்கொண்டு பிரவுனுடன் செல்பி எடுத்துள்ளார்.

பிரவுன் இந்தப் படத்தைத் தனது சமூக இணைய தளத்தில் வெளியிட்டு அதில் நாங்கள் இந்த தோல்வியை எதிர்பார்க்கவில்லை என்றாலும், உலகின் சிறந்த வீரரான மெஸ்ஸியை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவருக்கு எதிராக விளையாடியது சிறந்த அனுபவம். மெஸ்ஸி மற்றும் அர்ஜென்டினா அணி இந்த தொடரில் சிறப்பாக விளங்க வாழ்த்துக்கள் என்று தெரிவித்துள்ளார். (ம)

## கார்சனை வீழ்த்தினார் ஆனந்த்

நோர்வேயில் நடைபெற்றுவரும் உலக செஸ் தொடரில் 5 முறை உலக சம்பியனான விஸ்வநாதன் ஆனந்த், நடப்பு சம்பியனான மக்னஸ் கார்ல்சனை 4ஆவது சுற்றில் வீழ்த்தி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார். இந்தத் தோல்வியை அடுத்து கார்ல்சன் கடைசி இடத்துக்குச் சென்றுள்ளார்.

முதல் மூன்று சுற்றுக்களையும் சமநிலையில் நிறைவுசெய்து புள்ளிப் பட்டியலில் ஆறாவது இடத்திலிருந்த ஆனந்த் கார்ல்சனை வெற்றிபெற வேண்டும் என்பதில் முனைப்புக்காட்டி செயற்பட்டார். ஆனந்தின் வெற்றியை செஸ் நட்சத்திரம் கேரி காஸ்பரோவ் பாராட்டியுள்ளார். (ம)




SPOKEN ENGLISH
தொழில்புரிவோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 27.06.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
இலங்கையெங்கும் 7600 ஆசிரியர்கள், 20000 மாணவர்கள் கற்றுப் பயன்பெற்ற பயிற்சிப்பாசறை.
"ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
பயிற்சிநெறி முடிவில் "DIPLOMA CERTIFICATE"
எமது கிளைகள்
சங்கானை 021 567 41 33
தெல்லிப்பழை 021 3200 607
SAAMSON
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

NEW SCIENCE HALL
CHEMISTRY SEMINAR - 2015 A/L
2015 இறுதிப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட இறுதிக்கருத்தரங்கிற்கான வினாத்தாள், விடைத்தாள் வழங்கலுடன் விளக்கவுரை கருத்தரங்கு.
22.06.2015 Mon 9.00 - 12.00
24.06.2015 Wed 9.00 - 12.00
மேற்படி நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.
ஆசிரியர்
க.சிவத்திரன் B.Sc(Hons)
(கட்டணம் 350/=)
(16353)
(3,6,9)

## அதெப்பிடி கொஞ்சம்கூட வெக்கமே இல்லாம!



சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றாலும், கிரிக்கெட் விளையாடிய போது இருந்த அதே புகழுடன் வாழும் ஒருசில கிரிக்கெட் பிரபலங்களில் ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னும் ஒருவர்.

2007ஆம் ஆண்டு தனது முதல் மனைவி சிமோனுடன் விவாகரத்து பெற்ற ஷேன் வோர்ன், கடந்த செப்டம்பர், 2011ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து நடிகை எலிசபெத் ஹர்லியுடன் சேர்ந்து வாழ்ந்தார். ஆனால் இந்த உறவும் 2013 ஆம் ஆண்டு டிசம்பரோடு முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில், 45 வயதான ஷேன் வோர்ன், நான் மிக மிக மிக தனியாக இருக்கிறேன். எனது மனைவிமார் என்னைப் புரிந்துகொள்ளவில்லை என்று உருகியுள்ளார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org